D
V2:1:31N97
N97.312
216832

வெளியீடு 17-6-98

Issued 17-6-98

1320
98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக் வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 17. 1997 – தொகுதி 31 – எண் 2

Thursday the 17th April, 1997 – Volume 31 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

..lative Assembly Secretariat, Fort St. George,

Chennai-600 009

D

N97. 31.2.

[Price Rs. 3.00

17 - 4 - 1997

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள் விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 267-308

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—

(அ) கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் கோவில் தேர்த்திருவிழாவில் இருதரப்பினர்களுக்கு இடையில் மோதல் 308-318

(ஆ) சேலம் மாவட்டம், வாழப்பாடி வனச் சரகர் அலுவலகத்தில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணமடைந்தமை 319-329

3. மானியக் கோரிக்கைகள், 1997 98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி 329-364

(அ) கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு—தொடர்ச்சி

*மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் 329-363

(ஆ) கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் 368-430

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் 368, 371, 416-428

திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம் 372-374

*திரு. டி. மணி 374-376

பக்கங்கள்

3. மானியக் கோரிக்கைகள், 1997 98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

திரு. ஜி.கே. மணி 376-381
*டாக்டர் வை. இராமசாமி 381-384
திரு. லி. அய்யலுசாமி 385-386
*திருமதி ஆன் டி' மனடி 387-389
திரு. பி.ஆர். சுந்தரம் 389,395-396,397, 398
திரு. கோ. சண்முகம் 398-399
*திரு. ந. கருப்பண்ண உடையார் 399-401
திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி 402-405
*திரு. வி. கோவிந்தன் 405-407
திரு. ம. அப்துல் லத்திப் 407-414
*திரு. எல். சந்தானம் 414-416

4. அறிவிப்பு—

இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 (ஆஇ) 365

5. அரசினர் சட்டமுன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 365

(ஆ) தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவு, 1997 366-367

(இ) தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 367-368

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 430

21632 சென்னை-600 009



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 4, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 ஏப்ரல் 17, வியாழக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்*
*அதுநோக்கி வாழ்வார் பலர்".*

*அனைத்து மக்களும் சமம் எனினும் அவரவருக்குரிய ஆற்றலுக்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டால் அந்த அரசை அனைவரும் அரணாகச் சூழ்ந்து நிற்பர்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 561, திரு. கு. மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**561—**

**உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்குதல்**

***4005—திரு. கு. மனோகரன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி ஒன்றியம், சோலைக்கொட்டாய், கிருஷ்ணாபுரம் ஆகிய உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தக் கோரி கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி ஒன்றியம் சுமார் 50, 60 கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. அந்த ஒன்றியத்தில் ஒரே ஒரு மேல்நிலைப் பள்ளிதான் இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. நான் குறிப்பிட்டுள்ள சோலைக்கொட்டாய் மற்றும் கிருஷ்ணாபுரம் ஆகிய ஊர்களில் உள்ள 2 உயர்நிலைப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்க கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. பொதுமக்கள் நிதியாக ஒரு லட்சம் ரூபாயும் செலுத்தப்பட்டு, கட்டட, தளவாடச் சாமான்கள், இட வசதி எல்லாம் குறிப்பிடப்பட்டு, மாவட்டக் கல்வி அலுவலரால் முன்மொழியப்பட்டு, இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அந்த 2 பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்க இந்த வருடம் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கான விடை தயாரிக்கப்பட்டு ஏறத்தாழ 3 திங்கள் ஆகிறது. அதற்குப் பின்னர் ஒருவேளை அவர்கள் நிதியை அனுப்பியிருப்பார்களானால் அது இந்த விடையில் சொல்லும் அளவுக்கு. எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் நிதியை அனுப்பியிருந்தாலும் தர்மபுரி மாவட்டத்தில் 10, 12 மேல்நிலைப் பள்ளிகள் கேட்கப்பட்டு ஒவ்வொரு பள்ளியிலுள்ள மாணவர்களுடைய எண்ணிக்கை விகிதமும், அந்த விளக்கங்களில் தரப்பட்டிருக்கிறது. அதிக மாணவர்கள் எண்ணிக்கையுள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது அரசினுடைய கருத்து. அந்த வரிசையில் இந்த 2 பள்ளிகளிலும்—ஒரு பள்ளியில் ஏறத்தாழ 89 மாணவர்களும், இன்னொரு பள்ளியில் 69 மாணவர்களும் உயர்நிலைப் பள்ளியில் 10-ஆம் வகுப்பில் படிப்பதாக இருக்கிற காரணத்தால் இதைவிட அதிக எண்ணிக்கையுள்ள மாணவர்கள் உள்ள பள்ளிகளின் கோரிக்கை வராமல் இருக்குமானால் இதற்கு அந்த வாய்ப்புக் கிடைக்கும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தும்போது அந்தப் பள்ளியில் படிக்கிற 10 ஆம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுவது போல், அந்தப் பள்ளிக்குச் சுற்றுப்புறத்தில் இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கிற 10-ஆம் வகுப்பு படிக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துகிற நிலையை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பள்ளியும் சுற்றுப்புறப் பள்ளியை அடையாளம் காட்டுவார்கள். ஆனால் சுற்றுப்புறப் பள்ளியில் அதிக எண்ணிக்கை இருக்குமானால் அந்த வாய்ப்பு அந்தச் சுற்றுப்புறப் பள்ளிக்குச் செல்லுமே தவிர, இந்தப் பள்ளிக்குக் கிடைக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசதி வாய்ப்புகள் குறைவான பகுதி என்னுடைய ஒன்றியப் பகுதி. அதிலும் குறிப்பாக, பிற்படுத்தப்பட்டவர்கள், மிக, மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் வசிக்கும் பகுதி. இன்று பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கை நாள் ஆகும். ஆகவே ஒரு சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் ஒடுக்கப்பட்ட, மிகவும் மோசமான நிலையில் இருக்கும் எனது பகுதி மக்களின் கல்வி வளர்ச்சியை முன்னேற்ற ஒரு சிறப்பு தனிக் கவனம் செலுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தை, கடமையுணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். இந்தப் பள்ளிக்கூடங்கள் இருக்கிற இடத்தைவிட இன்னும் பிற்படுத்தப்பட்டோர் தர்மபுரி மாவட்டம் முழுவதும் பரவலாக இருக்கிறார்கள். ஆகவே, பிற்படுத்தப்பட்டோருடைய உரிமை அடிப்படையில் எந்தப் பள்ளிக்கு முன்னுரிமை வாய்ப்புக் கிடைக்கிறதோ அந்த அடிப்படையில் கருதப்படும்.

[1997 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 562, திரு. ஆர். மகேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**562—**

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

***4297—திரு. ஆர். மகேந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், பெரியகரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நாட்டராம்பள்ளியைப் பற்றியா?(குறுக்கீடு) கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்திலி ஒன்றியத்திலே இருக்கக்கூடிய பெரியகரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துகிற செயற்குறிப்பு பற்றி ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது ரொம்பப் பிற்படுத்தப்பட்ட பகுதி. ஆகவே, அங்கிருக்கக்கூடிய மாணவர்களின் நலனைக் கருதி, மறுபரிசீலனை செய்து, மீண்டும் அதை எப்படியாவது உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் பதில் சொன்னார்கள். அப்புறம், மீண்டும் அதே கேள்வியைத் திருப்பிக் கேட்டால் என்ன அர்த்தம்?



1997 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக்கூடத்திற்காக நிதி வழங்கப்பட்டு இருக்குமானால், மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவுக்கு இருக்குமானால் கருதிப் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்புடைய கேள்வி இல்லாவிட்டாலும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன். கடந்த 1996 நவம்பர் மாதத்தில், தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணியின் சார்பாக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்காக நேர்காணல் அனுப்பப்பட்டு சுமார் 500 பேர்கள் வேலையில் தற்காலிகமாக அமர்த்தப்பட்டு, பின்னர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களே, அவர்களுக்கு மீண்டும் முன்னுரிமை அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் நியமிக்கப்படுகிறபொழுதே, தற்காலிகம் என்பது அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுத்தான் நியமிக்கப்பட்டார்கள். ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக நியமிக்கப்படுகிறவர்கள்தான் நிரந்தரமாகப் பணியாற்ற முடியும். கல்வித் துறை இயக்குநர் மூலமாக, தற்காலிகத் தேவைக்காக நியமிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பணிக்காலம் 6 மாதம், 5 மாதம் என்று இருக்கிற காலம் தேர்வு வாரியத்திலே அவர்கள் நேர்முகத் தேர்வுக்கு வருகிற வாய்ப்பு இருக்குமானால் அதில் மதிப்பெண் அடிப்படையில் கருதப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 563, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**563—**

**ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுதல்**

***2622—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 17

விக்கிரவாண்டி ஒன்றியம், எண்ணாயிரம் கிராம ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பதிலில் ஓரிரு வாக்கியங்களை மட்டும் மாற்றி விடையளிக்க விரும்புகிறேன்.

விக்கிரவாண்டி ஒன்றியம், எண்ணாயிரம் கிராம ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை விரைவில் கட்டி முடிக்க அரசு பின்வரும் நடவடிக்கை எடுத்துள்ளது:—

இக்கட்டடப் பணிகளைப் பூர்த்தி செய்ய 1996-ஆம் ஆண்டில் ரூ. 20.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையினரால் எண்ணாயிரம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, பெறப்பட்டுள்ளன. அதேபோல, மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. எனவே, இக்கட்டடப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன துணைக் கேள்வி இருக்கிறது? நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், ஏற்றுக் கொண்டார்கள்.

வினா எண் 564, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**564—**

### டீசல் அளவுக் கட்டுப்பாட்டைத் தளர்த்தல்

***8240—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவமனைகளில் இயங்கும் அவசர ஊர்தி, அமரர் ஊர்தி ஆகிய வாகனங்களுக்கு டீசல் அளவுக் கட்டுப்பாட்டைத் தளர்த்த அரசு முன்வருமா?



1997 ஏப்ரல் 17]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது பரிசீலனையில் இல்லை.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கழக அரசு புதிதாக 300 அவசர ஊர்திகளை தமிழகத்தின் பல மருத்துவமனைகளுக்கு வழங்க இருக்கிறது. இப்பொழுது உள்ள, மாதம் ஒன்றுக்கு 100 லிட்டர் என்பது ஒரு வார காலத்திற்குக்கூடப் போதாத நிலை இருக்கின்றது. எனவே, அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து, காவல் துறைக்கு இருப்பதைப்போல, டீசல் அளவுக் கட்டுப்பாட்டைத் தளர்த்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுதான் வாகனங்களுக்கு டீசல் வழங்குவதிலே சில மாற்றங்கள் செய்யப்பட்டன. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சத்து 45 ஆயிரத்து 420 லிட்டர் டீசலும், மருத்துவக் கல்விக்காக 1 லட்சத்து 95 ஆயிரத்து 852 லிட்டர் டீசலும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 2 லட்சத்து 52 ஆயிரத்து 567 லிட்டர் டீசலும் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி வட்டார மருத்துவமனைகளுக்கு 55 லிட்டரும், தாலுகா மருத்துவமனைகளுக்கு மாதம் 70 லிட்டரும், கோட்டத்தில் இருக்கக்கூடிய வாகனங்களுக்கு 90 லிட்டரும், மாவட்ட அளவிலே இருக்கக்கூடிய ஊர்திகளுக்கு 125 லிட்டரும், மண்டலத்திற்கு 110, மாநிலத்திற்கு 110, சென்னை நகரத்திற்கு 110 லிட்டர் என்றும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது போதவில்லை என்று புகார்கள் எதுவும் இதுவரை வரவில்லை. அப்படிப் புகார்கள் வருமானால் நிச்சயமாக இந்த அரசு நிதித் துறையைக் கலந்து முடிவெடுக்கும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் ஒரு பதிலிலே பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் அவசியம் ஏற்படுகின்ற நேரத்தில் நிதித் துறையோடு கலந்து அரசு முடிவெடுக்கும் என்று சொல்லியிருக்கிறேன். முதலமைச்சரோடு நேற்று இதுபற்றிப்

பேசியிருக்கிறேன். இலாகாவைக் கலந்தாலோசித்தபோது, இதுவரையிலே எந்த இடத்திலிருந்தும் இன்னும் டீசல் அளவை உயர்த்த வேண்டுமென்று அரசுக்குத் தகவல் வரவில்லையென்று நேற்று தெரிவித்தார்கள். அதனால்தான் இந்தப் பதிலைச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்க விஷயமாக இருந்தாலும், எங்கள் மாவட்டத்தினுடைய தலைநகரத்திலிருந்து அவசர நிலை கருதி, மாதத்திலே இரண்டு தடவை ஆம்புலன்ஸ் வேன். பாளையங் கோட்டைக்குப் போய் வருகின்றபோது, டீசல் பற்றாக்குறை ஆகிவிடுகின்றது. டாக்டர்கள் நோயாளிகளைத்தான் கேட்கிறார்கள். எனவே, அந்த அவசரத் தன்மையை முன்னிட்டு டீசல் அளவை கொஞ்சம்கூட உயர்த்தினால் ஏழை நோயாளிகளுக்கு வசதியாக இருக்கும். அந்த அடிப்படையில் இந்த டீசல் அளவை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தெரிவித்தது போலவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் தெரிவித்தது போலவும் நான் நேரிலே சில மருத்துவமனைகளிலே போய்ப் பார்த்த நேரத்தில், பாதிக்கப்பட்ட நோயாளிகள் என்னிடத்திலே இப்படிப்பட்ட புகார்களைச் சொன்னார்கள். அதை மனதிலே வைத்துக்கொண்டு தான் நேற்றுகூட அரசு இதைப் பரிசீலிக்கும் என்று நான் சொன்னேன். நோயாளிகள் சார்பில் என்ன சொல்கிறார்கள் என்றால், நாங்கள் தனியார் வாகனங்களை வைத்துக்கொண்டு போனால், ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் கேட்கிறார்கள், ஆனால் அரசாங்க ஊர்தி அங்கேயிருக்கிறது. டீசல் இல்லையென்று சொல்கிறார்கள். டீசலை நாங்கள் போடுவதற்குத் தயாராக இருக்கிறோம், எனவே, நாங்கள் டீசல் போட்டால் எங்களுக்கு அந்த வாகனங்களைப் பயன்படுத்த அரசு அனுமதியளிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அது ஒரு நியாயமான கோரிக்கையாக இருந்தது. இருந்தாலும், ஓட்டுநர்கள் தவறாக அந்த அதிகாரத்தைப் பயன்படுத்திவிடக் கூடாது என்பதற்காக அரசாங்கமே டீசல் வழங்குவதை மறுபரிசீலனை செய்யலாமா என்பது பற்றி நேற்று கலந்து பேசியிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் வந்ததும் இதுபற்றி மீண்டும் ஒரு முறை விவாதித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனையில் இயங்குகின்ற அவசர ஊர்தி, அமரர் ஊர்தி ஆகிய வாகனங்களைப் பழுதுபார்க்கும் பணி, அரசுத் துறைப் பணிமனைகளில் மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அதனால், பழுது நீக்கும் பணியில் அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகையினால் அரசு அனுமதி பெற்ற தனியார் பணிமனைகளிலும் அவற்றைப் பழுதுபார்ப்பதற்கு அரசு அனுமதி அளிக்க ஏதேனும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு என்று ஒர்க் ஷாப் வைத்துக் கொள்வதற்கான உரிமையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதனுடைய கிளைகள் மாவட்டந்தோறும் இயங்குகின்றன. அந்த அடிப்படையில் மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த ஒர்க் ஷாப்பிலே மருத்துவத் துறைக்குரிய வாகனங்களைப் பழுதுபார்க்க ஏற்பாடுகள் செய்யப்படும். மிகச் சாதாரண பணிகள் என்று சொன்னால், 100 ரூபாய், 50 ரூபாய் அளவில் பழுதுபார்க்க வேண்டிய பணிகள் இருக்குமானால் தனியார் இடத்திலே பழுதுபார்ப்பதற்கு அரசாங்கம் ஏற்கெனவே ஒப்புதல் தந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவைகளில் வளத்தி மற்றும் நல்லாண்பிள்ளைபெற்றாள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அவசர ஊர்திகள் இல்லை. அங்குள்ள மருத்துவர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்கு சில நேரங்களில் வசதி கிடைப்பதில்லை. எனவே, இந்த நிதியாண்டில் இந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அவசர ஊர்திகள் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 300 வாகனங்கள் வாங்குவதற்கு

அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. முதற்கட்டமாக மாவட்ட அளவிலும், இரண்டாவது கட்டமாக வட்டார மருத்துவமனைகளுக்கும், மூன்றாவது கட்டமாக 24 மணி நேரமும் இயங்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இந்த வாகனங்களை அளிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக, திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர ஊர்திகளுக்கு டீசல் வழங்குவதில் ஏற்பட்டிருக்கின்ற நிலைகள் குறித்து, மாண்புமிகு முதல்வரோடு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு அதற்கு ஏற்பாடு செய்து பேசியிருப்பது குறித்துச் சொன்னார்கள். இருந்தாலும், சமீபத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்பு கடலூரிலிருந்து இராமேஸ்வரத்திற்கு 5 பேர் கொண்ட குடும்பம் சென்றுவிட்டு மேட்டுப்பாளையம் திரும்பியிருக்கிறார்கள். அப்படித் திரும்பி வரும்போது, ஐந்து பேர் மீதும் பாரதியார் போக்குவரத்துக் கழக பஸ் மோதியது. ஐந்து பேருக்கும் காயம் ஏற்பட்டு, கவலைக்கிடமான சூழ்நிலை ஏற்பட்டபோது, மேட்டுப்பாளையம் மருத்துவமனைக்குக் கொண்டு போனவுடன், அங்கிருந்த மருத்துவர்கள் கோவை மருத்துவமனைக்குக் கொண்டு போகும்படிப் பரிந்துரை செய்து கடிதம் கொடுத்தும், அங்கிருந்த ஆம்புலன்ஸ் வேனில் டீசல் இல்லை, ஆகவே, எங்களால் கொண்டு போக முடியாது என்று சொல்லிவிட்டார்கள். பிறகு, பொதுமக்களிடம் பணம் வசூல் செய்து அதன் பிறகு அந்த வேன் சென்றது என்று பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தேன். அதைப் பார்த்துவிட்டு அந்த மருத்துவமனைக்குப் போய் விசாரித்தபோது, 'நாங்கள் என்ன செய்ய முடியும், எங்களிடத்திலே டீசல் இல்லை' என்று சொன்னார்கள். ஆகவே, இந்த மாதிரி அவசியமான சூழ்நிலை இருக்கிற காரணத்தால்.....

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. பா.மு. முபாரக்:** இதற்கு மட்டும், அவசர ஊர்திக்கு மட்டும் டீசல் சீலிங்கையே எடுக்கிற அளவிற்கு ஏதாவது ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



கருணையுள்ளத்தோடு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்த ஆவன செய்வார்களா என்று அன்போடு அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கும் ஒரு சீலிங் வேண்டும். அந்த சீலிங் இல்லையென்று சொன்னால், பிறகு கட்டுப்படுத்துவதற்கு யாராலும் முடியாது. இருந்தாலும், இப்போது இருக்கக்கூடிய, டீசலினுடைய அளவு போதவில்லை என்பதை நான் உணர்கின்றேன். எனவேதான், இது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்து பேசி உரிய நடவடிக்கையை எடுப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 565, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**565—**

### கோவில் மனைகளில் குடியிருக்கும் மக்களுக்கு நிலப்பட்டா வழங்குதல்

***2552—திரு. டி. இராஜேந்தர்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூங்கா நகர் தொகுதியில் பல ஆண்டுகளாக கோவில் மனைகளில் குடியிருந்து வரும் தாழ்த்தப்பட்ட மற்றும் ஆதிஆந்திர மக்களின் நிலங்களுக்குப் பட்டா செய்துதர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூங்கா நகர் தொகுதியில் உள்ள குடிசைப் பகுதிகள் எதுவும் இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோவில் நிலங்களில் இல்லை. தனியார் நிலங்களில் உள்ளதால் பட்டா வழங்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராஜேந்தர், இருக்கையில் இல்லை.

வினா எண் 566, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**566—** [1997 ஏப்ரல் 17

**பத்மநாபபுரம் தொகுதியில் குடிநீர் வழங்குதல்**

***2931*—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, தண்ணீர்ப் பந்தல்விளை, விலவூர் காலனிக்குக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தண்ணீர்ப்பந்தல்விளை, பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற கிராமம். தண்ணீர்ப்பந்தல்விளை கிராமம், வாழ்வச்சகோஷ்டம், முளகுமூடு, காட்டாத்துறை கிராமப் பேரூராட்சிகள் மற்றும் 55 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டம் செயல்முறைக்கு வரும்போது முழு அளவு குடிநீர் வசதி பெறும். விலவூர் காலனி, ஒரு பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற கிராமம்தான். இக்கிராமத்தின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய தகுந்த நீர் ஆதாரம் கிடைக்கப் பெறாததால், காட்டாத்துறை குடிநீர்த் திட்டம் மக்களின் பயன்பாட்டுக்கு வரும்போது இக்கிராமத்திற்கும் குழாய் நீட்டிப்புச் செய்து குடிநீரை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு நன்றி. பத்மநாபபுரம் தொகுதியில் இதுபோன்று, ஆளூர் பஞ்சாயத்து மற்றும் கப்பியறை பஞ்சாயத்திலேகூட அதிகமான தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. ஆளூர், பனைவிளை, களியக்காடு என்று சொல்லக்கூடிய ஊர்களில் சிலோன் அகதிகள் இருக்கின்றனர். அங்கு அவர்களுக்கு அரசு கட்டிக் கொடுத்த வீடுகளில் குடிநீர் இல்லாமல் ரொம்ப தூரம் சென்று அவர்கள் தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. அரசு இதையுங்கூட பரிசீலித்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விலவூர் காலனி என்பது 250 மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதி. ஏற்கெனவே நான் இந்த அவையிலே



1997 ஏப்ரல் 17]

அறிவித்ததைப் போல, ஒரு அரசாணையின்படி 150 மக்களுக்கு மேல் 750 வரை மக்கள் தொகை உள்ள பகுதிக்குக் கைப் பம்புதான் வைக்க முடியும் என்ற நிலை இருந்தது. ஆனால், நீர் ஆதாரம் கிடைக்காத காரணத்தால் பல பகுதிகள் விட்டுப்போயின. அதிலே இதையும் ஒரு பகுதியாக எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது நான் அறிவித்ததற்கிணங்க அந்தப் புதிய திட்டத்தின்படி பக்கத்து ஊரிலே, அதாவது, அக்கிராமத்தின் கூடுதல் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யத் தகுந்த நீர் ஆதாரம் கிடைக்கவில்லை. காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் நீர் வழங்க இயலாதபடி அதிகமான அளவு தூரம் இருந்தாலும்கூட, இரண்டு கிலோமீட்டர் தாண்டி இருந்தாலும்கூட, ஏற்கெனவே, இரண்டு கிலோமீட்டர் இருந்தால்தான் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இணைப்புத் தரலாம் என்று விதி இருந்தாலும்கூட, அதைத் தற்போது மாற்றிய காரணத்தால், இந்தப் புதிய திட்டத்தின்படி குழாய்களுக்கு இணைப்புக் கொடுக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

*முற்பகல் 9-50*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுவாக இரண்டு, மூன்று கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றன. ஆனால், ஆறுகளிலே கிணறுகளைப் போட்டு, அந்தத் தண்ணீரைச் சுத்திகரிப்பு செய்யாமலேயே அப்படியே விநியோகம் செய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமீபத்திலே அங்கே வந்திருந்தபோது நாங்கள் அவர்களிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, குழித்துறை ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பைங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்கள் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், தண்ணீரை ஆற்றிலிருந்து அப்படியே பம்ப் செய்து வெளியே வருகிற நேரத்தில், சுத்திகரிப்பு செய்யாமல், தண்ணீர் கலங்கலாகவே இருக்கிறது. உண்மையிலேயே இங்கே காட்ட வேண்டுமென்று நான் சாம்பிள் எடுத்துக்கொண்டு வந்திருந்தேன். மறந்து என்னுடைய அறையிலேயே வைத்துவிட்டேன். சேறு கலந்த கலங்கல் தண்ணீராகவே வருகிறது. அதை அப்படியேதான் விநியோகம் செய்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட பெரிய திட்டங்களை நீங்கள் மக்களுக்கு வழங்குகின்றபோது அதை சுத்திகரிப்பு செய்து பொதுமக்களுக்கு விநியோகிப்பீர்கள் என்று சொன்னால் பலவிதமான நோய்கள் வராமல்

[1997 ஏப்ரல் 17

தடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. இப்படிப்பட்ட பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் தண்ணீரைச் சுத்திகரிப்பு செய்து வழங்குவதற்கான திட்டங்களை அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது பிறப்பிக்கப்படுகிற உத்தரவுகள் இந்த அடிப்படையில்தான் பிறப்பிக்கப்படுகின்றன. அதாவது, கீழே தரையிலிருந்து நேரடியாகத் தண்ணீர் எடுப்பதில் சுத்திகரிக்க வேண்டிய தேவை இல்லாவிட்டாலும், ஆற்றிலோ அல்லது திறந்த வெளிக் கிணறுகளிலோ அல்லது குளங்களிலோ நேரடியாகத் தண்ணீர் எடுக்கிற சூழ்நிலை ஏற்படுமானால், அதைச் சுத்திகரித்துத்தான் வழங்க வேண்டும் என்ற உத்தரவு அமலில் இருக்கிறது. அதிகாரிகள் தவறாகவோ அல்லது சந்தர்ப்பவசத்தாலோ அப்படிச் செய்யாமலிருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏதாவது அப்படிப்பட்ட பிரச்சினைகளைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது எழுதித் தந்தால், நாளைக்கே அதன்மேல் நடவடிக்கை எடுக்கக் காத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *567*, திரு. வி.ஜி. தனபால், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**567—**

**குடியாத்தம் நகரப் பேருந்து நிலையத்தை இடம் மாற்றுதல்**

***3848—திரு. வி. ஜி. தனபால்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரப் பேருந்து நிலையத்தை இடம் மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1997 ஏப்ரல் 17]

(அ) குடியாத்தம் நகரப் பேருந்து நிலையத்தை இடம் மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரம், மக்கள் தொகை அதிகம் கொண்ட ஒரு பெரிய நகரமாகும். இப்போதுள்ள பஸ் நிலையத்தில் போதுமான இடவசதி இல்லாததால், எதிர்காலத்திலாவது அதை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புவதோடு, தற்போதுள்ள குடியாத்தம் நகராட்சிப் பேருந்து நிலையத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் திட்டத்தின்கீழ் ரூபாய் 5 இலட்சமும், 10-வது நிதிக் குழுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 5 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிகாரிகளும் நேரில் பார்த்து மண் பரிசோதனை செய்துவிட்டுப் போனார்கள். ஆனால் இதுவரை எந்தப் பணியும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, அந்தப் பேருந்து நிலையத்திற்கு உடனடியாக சிமெண்ட் சாலை அமைத்துத் தர ஆவன செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, குடியாத்தம் நகரப் பேருந்து நிலையத்தை இடம் மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதுதான் மூலக் கேள்வி. ஆனால் அதனுடைய அடிப்படையைப் பார்க்கிறபோது 84 சென்ட் பரப்பளவில்தான் அது தற்போது அமைந்திருக்கிறது. நியாயமாக அது மாற்றப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணமும். ஆனாலும், அதற்குப் பக்கத்திலே 1.97 ஏக்கர் பரப்பளவுள்ள நகராட்சிப் பள்ளிக் கட்டடமும், காலியிடமும் இருந்தது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மூலம் அப்பள்ளிக் கட்டடத்தை இடித்துவிட்டு, மேற்படி காலியிடத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்காக ஒரு வடிவமைப்பு எடுக்கப்பட்டது. ஆனால் அது காலதாமதம் ஆகிக்கொண்டு வந்து, இறுதியாக 30-7-1996-ஆம் தேதி அதற்கொரு கடிதம் துறையின் மூலமாக எழுதப்பட்டு, மேற்படி வடிவமைப்பைப் பெற்றும், வட்டாரப் போக்குவரத்து அலுவலர், காவல் துறைக் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் கருத்துக்களைப் பெறாமல் இருந்த காரணத்தால் திரும்பவும் அதைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த அரசு அவர்களுக்குக் குறிப்பிட்டு எழுதி இருக்கிறது. அவர்களுடைய பதிலைப் பார்த்த பிறகுதான் உறுதியான பதிலை நான் இந்த அவைக்குத் தர முடியும்.

[1997 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகக் குறுகலான ஒரு இடத்தில் அந்தப் பேருந்து நிலையம் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே அறிவார்கள். எவ்வளவு நெருக்கடி ஏற்படுகிறது, அதுவும் பகல் நேரங்களிலே மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் அவர்கள் அறிவார்கள். எனவே, இதைத் தெரிந்துகொண்டு உடனடியாகத் துரிதமான நடவடிக்கை மேற்கொள்ள உரிய அதிகாரிகளுக்கு அவர்கள் உத்தரவு பிறப்பிப்பதோடு காட்பாடி செல்லும் வழியிலோ அல்லது பேரணாம்பட்டு செல்லும் வழியிலோ, பள்ளிகொண்டா செல்லும் வழியிலோ நிலத்தை ஆர்ஜிதம் செய்து உடனடியாக இந்தப் பேருந்து நிலையத்தை மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவோடு கவனத்தைச் செலுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியில் இதேபோன்று ஒரு நடவடிக்கை தேவை என்பதை உணர்ந்து, இதை ஆரம்பித்து, அப்படியே விட்டுவிட்டார்கள். அதனைத் தொடர்ந்து ஐந்து, ஆறு ஆண்டுக் காலம் கடந்துவிட்டது. நான் முன்பே குறிப்பிட்டுச் சொன்னேன். 30-7-1996-ல்தான் நடவடிக்கையே துவங்கப்பட்டிருக்கிறது. அதுவும், ஒரு நகராட்சியிலோ, மாநகராட்சியிலோ, ஊராட்சியிலோ பேருந்து நிலையத்தைத் துவங்க வேண்டுமென்றால் அல்லது அதை மாற்ற வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட துறைகளைக் கலந்தாலோசித்து, அவர்களுடைய முடிவை அறிந்து செய்ய வேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றன. எனவே, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவரவர்களிடமிருந்து தக்க பதில்கள் வரவில்லை. வந்ததற்குப் பிறகு அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டி இருக்கிறது. அதற்குள் தார்ச் சாலையா, சிமெண்ட் சாலையா என்று வினா எழுப்பினால், பிறகு தார்ச் சாலையோடு நின்றுவிடும். இன்று காலையில்கூட அவர்களைப் பார்த்து சாலை தேவையா, பேருந்து நிலையம் இடம் மாற்றம் தேவையா என்று கேட்கிற சூழ்நிலை வந்தது. எனவே, திரும்பத் திரும்பச் சொல்கிறேன், பேருந்து நிலையம் இடம் மாற்றப்பட வேண்டுமென்ற எண்ணம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் அதற்குத் தகுதி வாய்ந்த இடம் தேவை என்பதற்குத் தக்க



1997 ஏப்ரல் 17]

நடவடிக்கையை எடுத்து வருகிறோம். அது முடிவுற்ற பிறகு, அடுத்த கட்ட நடவடிக்கை தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 568, திரு. ம. சண்முகம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**568—**

**பரம்பிக்குளம்—ஆழியாறு அணை வாய்க்காலிலிருந்து ஏரிகளுக்குத் தண்ணீர் திறந்துவிடுதல்**

***3309—திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கிணத்துக்கடவு ஒன்றியம். கோதவாடிக்குளம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் உள்ள கரப்பாடிகுளம் ஆகிய ஏரிகளுக்கு பரம்பிக்குளம்—ஆழியாறு அணை வாய்க்காலிலிருந்து தண்ணீர் திறந்துவிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோதவாடிக்குளத்திற்குத் தண்ணீர் விட வேண்டுமென்பது கேள்வி. பரம்பிக்குளம்—ஆழியாற்றுப் பாசனம் முதல் மண்டலத்திற்கே போதுமானதாக இல்லை. இந்தக் குளம் பரம்பிக்குளம் — ஆழியாறு பாசனப் பகுதிக்கு உட்பட்டதல்ல. எனவே, நீர் அளிப்பது சிரமம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளத்திற்குத் தண்ணீர் விடும் பட்சத்தில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஏக்கர் பாசனம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பி.ஏ.பி. ஆயக்கட்டிற்கு உட்படாமல் இருந்தாலும்கூட, பி.ஏ.பி. வாய்க்காலிலிருந்து தண்ணீர் விடுவதற்கு வழி இருக்கிறது. ஆகவே இதைப் பரிசீலித்து, வருகின்ற ஜூலை, ஆகஸ்டிலாவது தண்ணீர் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 17

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, பரம்பிக்குளம்—ஆழியாற்றுப் பகுதி பாசனத்திற்கு உட்பட்ட ஆயக்கட்டுகளுக்கே தண்ணீர் போதவில்லை. முதலில் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் தர வேண்டுமென்று நினைத்து, பிறகு கொஞ்சம், கொஞ்சமாக, கருணை அடிப்படையில் சேர்த்துச் சேர்த்து, கிட்டத்தட்ட மூன்று இலட்சத்து எழுபத்தி ஐயாயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் தர வேண்டுமென்று வந்து, ஆறு மாதத்திற்கு ஒரு முறை தண்ணீர் கொடுத்தோம். அதன் பிறகு 18 மாதத்திற்கு ஒரு முறை தண்ணீர் கொடுத்து வந்தோம். அதன்பிறகு இப்பொழுது 20 மாதத்திற்கு ஒரு முறைதான் தண்ணீர் கொடுக்கக் கூடிய நிலை இருக்கிறது. இப்படி நான்கு ரேஞ்சாகப் பிரித்துக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆக, ஆயக்கட்டுக்கு உட்பட்ட பகுதிக்கே தண்ணீர் கிடைக்காதபோது, ஆயக்கட்டுக்கு அப்பால் இருக்கிற பகுதிக்கும் தண்ணீர் தர வேண்டுமென்பது நியாயமல்ல, அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது. இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வந்த மனுக்களையும் நாங்கள் திருப்பி அனுப்பியிருக்கிறோம். மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. குறிப்பாக, கோதவாடிக்குளம் என்பது கிணத்துக்கடவு ஒன்றியத்தில் வருகிறது. அதற்குத் தண்ணீர் விட வேண்டுமென்பது நெடிது, கொடிதுதான். காரணம் என்னவென்றால், பிரதானக் கால்வாயிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு போய், 48-வது கிலோமீட்டரில் பிரிகிற வடக்கு சித்தூர் கால்வாயில் தண்ணீர் விட்டு, அங்கிருந்து 11-வது கிலோமீட்டரில் செட்டிப்பாளையத்தில் பிரிகிற அந்தக் கால்வாயில் தண்ணீர் விட்டு, பிறகு ரோடு ஓரமாக ஒரு கால்வாயை வெட்டி, அங்கிருந்து கொண்டு போய் சின்னக் கால்வாயில் விட வேண்டும். இந்த நிலையில் 10 அல்லது 15 கன அடி தண்ணீர்தான் போகும். எனவே, அந்தத் தண்ணீர் குளத்தில் போய்ச் சேருவதற்கு முன்பே எல்லாத் தண்ணீரையும் பூமி உறிஞ்சிவிடும். ஆகவே, தண்ணீர் விட்டால், நஷ்டம் நீருக்கே தவிர, குளத்திற்கு ஒன்றும் இலாபம் இல்லை. எனவே, it is an impossible one.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், நீண்டகாலமாக, வராது என்று நினைத்திருந்த பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.



1997 ஏப்ரல் 17]

பரம்பிக்குளம்—ஆழியாறு அணைக்கட்டினுடைய நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காக, ஆனமலையாறு, நல்லாற்றுத் திட்டம் இருப்பதாக அறிகிறோம். இதுகுறித்து கேரள அரசோடு பேசி, விரைந்து செயல்பட்டால், பரம்பிக்குளம்—ஆழியாறு அணையில் நீர் மேலும் பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக செயல்பட்டு, நீர் அதிகமாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, பரம்பிக்குளம்—ஆழியாறு அணையில் நமக்கு சாதாரணமாகக் கிடைக்க வேண்டிய 30 டி.எம்.சி. தண்ணீரில், 16 டி.எம்.சி. தண்ணீர்தான் கிடைக்கிறது. இதை வைத்துக்கொண்டு கூடுமான வரையில், நீர்ப்பாசனத்தை அளித்து வருகிறோம். மேலும் அவர் சொன்னதைப்போல, நல்லாறு, ஆனமலை ஆற்றில் முழுக்க முழுக்க 30 டி.எம்.சி. தண்ணீர் வந்தால், மேற்கொண்டு கோதவாடிக்குளத்திற்குத் தண்ணீர் கொடுப்போம். அது வரட்டு., அப்பொழுது அவர் இருக்கட்டும்., அவர் கேட்கட்டும், நான் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 569, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**569—**

## பழம்பாண்டியாறை ஆழப்படுத்துதல்

***3782—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், பழம்பாண்டியாறை தூர் எடுத்து, ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

[1997 ஏப்ரல் 17

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்னதற்கு நன்றி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தனிக் கவனம் செலுத்தியதன் பலனாகவும், பல ஆண்டு காலமாக எங்களுடைய மாவட்டத்தில் ஆறுகளை ஆழப்படுத்தாமல், தூர் எடுக்காமல் இருக்கிறது என்றும், காட்டாமணக்குச் செடியெல்லாம் மண்டியிருக்கிறது, அவை அகற்றப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து இந்தச் சட்டப் பேரவையில் நாங்கள் குரல் கொடுத்ததைத் தொடர்ந்தும், இன்றையதினம் என்றும் இல்லாத அளவிற்கு எங்கள் மாவட்டத்திலே பல்வேறு ஆறுகளை ஆழப்படுத்துகின்ற பணிகள் தீவிரமான முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்ன உடனேயே நான் நன்றி மட்டும் சொல்லிவிட்டு முடித்துவிடலாம். இருப்பினும் அந்தப் பணி மிகவும் வெற்றிகரமாக இன்று நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இது நான் ஆரம்பத்திலே சட்டமன்ற உறுப்பினராக வந்தவுடன் போட்ட கேள்வி. அந்தக் காரணத்தினால் இந்தச் சந்தர்ப்பத்திலே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைக் கேட்டுவிட்டு, துணைக் கேள்வியை விட்டுவிட்டார். நாங்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே இந்த ஆற்றுப் பணிக்காக ரூ. 2.26 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம், அதாவது 2.5 கிலோ மீட்டர் தூர் வாருவதற்கு. இப்போது 3.92 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு டெண்டர் வைக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிக்கான கடைசி நாள் 23-4-1997. தூர் வாரத் திட்டமிடப்பட்டுள்ள தூரம் 2.4 கிலோ மீட்டர். எனவே, இந்தப் பழம்பாண்டியாறு முழுக்கத் தூர் வாரப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 570, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**570—**

### பாபநாசத்தில் புறவழிச் சாலை அமைத்தல்

***1170-திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 17]

(அ) பாபநாசம் தொகுதி, பாபநாசம் நகரப் பேருந்து நிலையம் வரை வங்காரம்பேட்டையிலிருந்து புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்திலிருந்து பாபநாசம் வழியாக, தஞ்சை செல்லும் பேருந்துகள், திருப்பராய்த்துறை வழியாக புதிய பேருந்து நிலையம் சென்று, கடைத்தெரு வழியாகச் செல்வதனால், சாலை குறுகல் காரணமாகவும், மக்கள் கூட்டம் அதிகமாக இருப்பதன் காரணமாகவும், பல நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் அந்தச் சாலைகளிலே இருப்பதன் காரணமாகவும், சாலைகள் வளைவாக இருக்கின்ற காரணத்தாலும், அந்தத் திருப்பங்களிலே அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகப் புதிய பேருந்து நிலையத்திலிருந்து தஞ்சை செல்வதற்கு வங்காரம்பேட்டை வரையுள்ள ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குப் புற வழிச் சாலை......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மிகவும் சுருக்கமாகப் பேச வேண்டும். நீங்கள் அந்தச் சாலைகளினுடைய எல்லாப் பெயர்களையும் சொன்னால் எப்படிச் சரியாய் வரும்?

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புறவழிச் சாலையை அமைக்க வேண்டுமானால் சுமார் 15 ஏக்கர் விளைநிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏறத்தாழ 1 கோடி ரூபாய் செலவாகும் என்று துறையிலிருந்து குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, தற்போதைய

[1997 ஏப்ரல் 17

நிதிநிலையைப் பொறுத்து சமீபத்திலே எடுத்துக்கொள்கிற வாய்ப்புகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 571, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**571—**

**போடிநாயக்கனூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்**

***5964—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

முற்பகல் 10-05

**திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பதற்குப் போதுமான இடம் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் பழைய பணிமனையில் இருக்கிறது. செங்கோட்டை, மார்த்தாண்டம் போல் எங்கள் ஊர் கேரள எல்லையின் ஓரமாக இருக்கிறது. மதுரை—கொச்சி என். ஹெச். 47 சாலை போகின்ற காரணத்தால், சென்னையிலிருந்து வருகிற வாகனங்களைப் பழுது பார்ப்பதற்கான பணிமனை மதுரையை விட்டால் வேறு ஊரில் இல்லாத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து போடிநாயக்கனூரில் தனியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 17]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு பணிமனை அமைக்க வேண்டுமென்று சொன்னால் குறைந்தபட்சம் அந்த இடத்தில் 25 பேருந்துகளாவது தங்க வேண்டும். போடிநாயக்கனூரில் ஒரே ஒரு பேருந்து மட்டும்தான் இருக்கிறது. எனவே, பணிமனை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எந்தப் பேருந்து பழுதுபட்டாலும், எந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் பழுதுபட்டாலும், அங்கே இருக்கிற மற்ற போக்குவரத்துக் கழகப் பணிமனையிலே பழுது பார்க்க வேண்டுமென்று அரசு சமீபத்திலே ஆணையிட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய பிரச்சினையை மற்ற போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் கவனித்துக்கொள்ளும் என்ற காரணத்தால் புதிய பணிமனை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 572, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**572—**

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்**

***6081—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கூடுதல் கட்டடம் மற்றும் புதிய கட்டடம் கட்ட அரசு மானியம் வழங்குமா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கூடுதல் கட்டடம் மற்றும் புதிய கட்டடம் கட்ட அரசு மானியம் வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

[1997 ஏப்ரல் 17

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலே பல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லை; வாடகைக் கட்டடங்களிலேதான் இயங்கி வருகின்றன. இந்த வங்கிகளில் பல, நலிந்த நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட நலிந்த கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு மானியம் வழங்கப்படுமா என்பதையும், நிதி வசதியுள்ள பல வங்கிகளுக்கு, வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக, வணிக வளாகம் கட்டுவதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 50 இடங்களிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான வசதி ஏற்படுத்தித் தரப்படும் என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரை நடைமுறையிலே, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக, மத்திய அரசிடமிருந்து 90 சதவீதம், 16.75% வட்டிக்கு கடனாகப் பெற்று, அதிலே 50 சதவீதத்தைக் கடனாகவும், பாக்கி 40 சதவீதத்தை அரசு முதலீடாகவும் வங்கிகளுக்குத் தந்து, கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 75 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் புதிதாகக் கட்டடம் கட்டப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு 100 வங்கிகளுக்கான முன்மொழிவு வந்திருக்கிறது. ஆனால் இப்போது புதிய திட்டம்— 'நபார்டு' 12.50% வட்டிக்குக் கடன் தருவதாக முன் வந்திருக்கிறார்கள். அப்படி அவர்களே செலுத்தக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், புதிய கட்டடம் கட்டுவதற்குரிய கடனைப் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு நகரில் ரூரல் வங்கி வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கூட்டுறவு மானியத்தில் ரூரல் வங்கிகள் நகர வங்கிகளாக ஆக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நகர வங்கிகள் ஆரம்பித்தவுடன் வேலைப்பளு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. ஆகவே, நகர வங்கிகளுக்குப் புதிதாக இடம் வாங்கவும், கட்டடம் கட்டிக் கொள்வதற்கும் அரசு மானியம் தரப்படுமா அல்லது நகராட்சிக்குச் சொந்தமான, காலியாக உள்ள இடத்தைப் பெற்றுத்தர ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 17]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுதான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ரூரல் வங்கிகளை நகர வங்கிகளாக மாற்றிய பிறகு, அதற்குரிய முடிவுகள் எடுக்கப்படும். பொதுவாக அரசாங்கத்திலிருந்து மானியம் தரப்படுமா என்று ஒவ்வொரு உறுப்பினரும் கேட்டால், மானியம் தரப்படுவதில்லை. கடனாகத்தான் பெற்றுத் தருகிறோம். 50 சதவீதம் கடனாகவும், பாக்கியிருக்கிற 40 சதவீதத்தை பங்குத் தொகையாகவும் தந்து கொண்டிருக்கிறோம். எந்த வங்கிக்கும் அரசு மானியம் தரக்கூடிய திட்டம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு மானியம் தரப்படுமா என்று கேள்வி கேட்கப்பட்டிருந்தாலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குரிய ஒரு தகவலைப் பெற வேண்டிய அவசியம் இருக்கிறது. தயவுசெய்து மறுத்துவிட வேண்டாம். கவன ஈர்ப்பு மூலமாகவும் கேட்டிருக்கிறேன். அதற்கும் பதில் கொடுக்கப்படவில்லை. நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடன் தொகை வசூல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்தார்கள். ஆனால், தஞ்சை, நாகை, ஏ.டி. பன்னீர்செல்வம் ஆகிய மாவட்டங்களிலே அப்படிப்பட்ட வசூல் நடைபெறுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இப்படி அரசு அறிவித்ததற்குப் பின்னர், நிர்ப்பந்தம் செய்து விவசாயிகளிடமிருந்து கடன் வசூல் செய்யப்படுவதை பெறுவதை நிறுத்துவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நேற்றைய முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னை நேரிடையாகச் சந்தித்து இதைப்பற்றிக் கேட்டார்கள். உடனடியாக அதிகாரிகளோடு தொடர்புகொண்டு, அரசு உத்தரவை மீறி எங்காவது ஜப்தி செய்வதற்கு நீங்கள் முன்வந்திருக்கிறீர்களா என்று கேட்டேன். அப்படிப்பட்ட ஒரு நிகழ்வும் தஞ்சை மாவட்டத்தில் நடைபெறவில்லை. ஆனால் இயற்கையாக, விவசாயிகள் தருகின்ற பணத்தை இவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்களாகவே முன்வந்து தருகின்றபோது வேண்டாம் என்று சொல்வதற்கு வாய்ப்பில்லை,

ஆகவே விவசாயிகளுக்கு எந்தவிதத் தொந்தரவும் இல்லாமல், வசதி படைத்த விவசாயிகள், தானாகவே அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துகின்றபோது, அதைப் பெற்றுக்கொள்வது என்பதுதான் இப்போது நடைமுறையில் இருக்கிறது. எந்த இடத்திலும் ஜப்தி நடைபெறவில்லை என்பதை உறுதியாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளே முன்வந்து பணத்தைக் கட்டினால் அது வசூலிக்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயிகளே முன்வந்து கட்டுகின்ற பணத்தை வசூலிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் வழங்கப்பட்ட கடன் வசூல் தள்ளிவைக்கப்பட்டிருந்தாலும்கூட, இன்றையதினம், கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தங்களுக்கு எந்தவொரு உத்தரவும் வரவில்லை என்று கூறி, கட்டாயமாகப் பணத்தைக் கட்டியாக வேண்டும் என்று சொல்லி, 10, 15 கார்களில் அந்த விவசாயிகளுடைய வீடுகளுக்கு ஊர்வலமாகச் சென்று, அவர்களை அவமானப்படுத்துகின்ற வகையில் பணத்தை வசூல் செய்கிறார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் முற்றிலும் மாறான கருத்துக்களைச் சொல்கிறார்கள். நான் தயவுகூர்ந்து கேட்டுக் கொள்வது, உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் வார்த்தையைக் கொஞ்சம் ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டும். மாறான கருத்துக்களை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் என்று நீங்கள் சொல்லக்கூடாது. மாறான தகவல்களை அமைச்சருக்கு அதிகாரிகள் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாறான தகவல்களை அதிகாரிகள் அமைச்சர் அவர்களிடத்திலே தந்திருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். ஆகையினால், அருள்கூர்ந்து அப்படி வசூல் செய்வதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியான தகவல்களைத்தான் அதிகாரிகள் என்னிடத்திலே தந்திருக்கிறார்கள். நான் அதிகாரிகளை மட்டும் விசாரிக்கவில்லை.



அந்தப் பகுதியிலே இருக்கின்ற பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களையும் நான் விசாரித்தேன். தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஒரு பணியின் நிமித்தமாக நான் சென்றிருந்தபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அங்கே இருந்தார்கள். அப்பொழுது விவசாயிகள் பலபேர் என்னிடத்திலே, அறுவடைக் காலங்களில் நாங்கள் தருகின்ற பணத்தை நீங்கள் பெற்றுக் கொண்டால்தான் எங்களுடைய கடன் அடையும்; அதனால் அதற்கான பணியினைத் தொடங்குங்கள் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்லித்தான் அந்தப் பணி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதற்கு மாறாக நடந்துள்ளது என்று, ஏதாவதொரு நிகழ்வினை எடுத்துக் காட்டினால், நிச்சயமாக அந்த அதிகாரிகள்மீது நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம். விவசாயிகளாகவே தருகின்ற பணத்தைப் பெற்றுக் கொள்கின்றோமே தவிர, ஜப்தி நடவடிக்கைகளில் இந்த அரசு நிச்சயமாக ஈடுபடவில்லை; ஈடுபடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சரியாக, தொடர்புடைய கேள்வியைத்தான் கேட்கப் போகிறேன். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தருவதற்காக இந்த அரசு மானியம் வழங்குமா என்பதுதான் கேள்வி. பல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், கிட்டத்தட்ட நூற்றுக்கு நூறு சதவிகிதம் நகைக் கடன்களே வழங்கப்படுகின்றன. சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் அந்த நகைகள் திருடு போகின்றன என்ற செய்தியும் வருகின்றது. ஆகவே, நகைகளைப் பத்திரமாக வைப்பதற்குப் பாதுகாப்பான கட்டடம் அவசியம் தேவைப்படுகிறது. ஏற்கெனவே, கட்டடம் இருக்கக்கூடிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 'சேஃப்டி லாக்கர்' என்று சொல்லக்கூடிய பாதுகாப்புப் பெட்டகம் அமைத்துத் தரவும், கட்டடமே இல்லாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் புதிய கட்டடங்களை உடனடியாகக் கட்டித் தரவும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடெங்கும் சுமார் 4,000-க்கும் மேற்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அவற்றில் முழுமையான பாதுகாப்பு வசதிகளான பாதுகாப்புப் பெட்டகம், பாதுகாப்பு அறை, இரும்புக் கதவுகள் போன்றவற்றைக் கொண்ட

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 1,800 தான். மீதமிருக்கின்ற வங்கிகளிலே பாதுகாப்புப் பெட்டகமும், பாதுகாப்பு அறையும் இருந்தால் இரும்புக் கதவுகள் இருக்காது. இரும்புக் கதவுகள் இல்லாமல் பாதுகாப்புப் பெட்டகம் மட்டுமே உள்ள வங்கிகளும் இருக்கின்றன. ஆகவேதான், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, பாதுகாப்பு அறையும், பாதுகாப்புப் பெட்டகமும் இருக்கின்ற வங்கிகளிலே இரும்புக் கதவுகளைப் பொருத்தவும், பாதுகாப்புப் பெட்டகம் மட்டுமே இருக்கின்ற வங்கிகளில் பாதுகாப்பு அறைகள் கட்டவும் இந்த அரசு ரூ. 8 கோடி ஒதுக்கீடு செய்து, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் 50 இடங்களில் புதிய கட்டடங்கள் கட்டும் பணி இந்த ஆண்டு முதல் தொடங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தைத் தயார் செய்து தருவார்களேயானால், கட்டடம் கட்டுவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *573*, திரு. கே. மணிவர்மா, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**573—**

**பால் குளிரூட்டும் நிலையம் ஆரம்பித்தல்**

***3593*—திரு. கே. மணிவர்மா:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டைச் சுற்றி, சுமார் 30 கிலோமீட்டர் சுற்றளவில் நூற்றுக்கும் அதிகமான பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்





இயங்கி வருகின்றன. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏழையெளிய விவசாயிகளும், வறுமையில் வாடும் தொழிலாளர்களும் பாலை வழங்குகின்றார்கள். அவர்கள் பயன்பெறும் வகையில், தண்டராம்பட்டில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும். அல்லது, 'மினி' பால் குளிரூட்டும் ஒரு நிலையமாவது அமைத்துத்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-15*

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு நகரிலிருந்து *20* கிலோ மீட்டர் தொலைவில்தான், திருவண்ணாமலை நகரில், நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று இருக்கிற காரணத்தினாலும், மேற்கூறிய தண்டராம்பட்டுத் தொகுதியில், மொத்த பால் உற்பத்தியே *15* ஆயிரம் லிட்டர் என்பதாலும், அங்கே புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *574*, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**574—**

**அரக்கோணத்தில் கிளைச் சிறைச்சாலையை இயங்கச் செய்தல்**

***6529*—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாலாஜாவில் தற்போது இயங்கி வரும் கிளைச் சிறைச்சாலையை மீண்டும் அரக்கோணத்திலேயே இயங்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது, வாலாஜா மற்றும் அரக்கோணத்தில் கிளைச் சிறைச்சாலைகள் இயங்கி வருவதால், இக்கேள்விக்கு இடமில்லை.

[1997 ஏப்ரல் 17

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணத்திலுள்ள கிளைச் சிறைச்சாலையினுடைய அதிகாரி, ஒரு மாதம், இரண்டு மாதங்கள் என விடுப்பில் செல்லும்போதெல்லாம், அரக்கோணத்தில் உள்ள சிறைக் கைதிகள் எல்லாம் வாலாஜாவிற்கு மாற்றப்பட்டு, அரக்கோணத்தில் இருக்கின்ற கிளைச் சிறைச்சாலை மூடப்படுகின்றது. மீண்டும் அந்த அதிகாரி, விடுப்பிலிருந்து வந்தவுடன் மீண்டும் இயங்குகிறது. இந்தக் கேள்வியை நான் கேட்கும்போதுகூட, அந்தக் கிளைச் சிறைச்சாலை மூடப்பட்டு, வாலாஜாவில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை இருப்பதால், கிளைச் சிறைச்சாலையில் இருப்பவர்கள் அவதிப்படுகிறார்களோ இல்லையோ, அவர்களுடைய உறவினர்கள் மிகவும் அவதிப்படுவதால், மீண்டும் அங்கே நிலையான கிளைச் சிறைச்சாலை இயங்க, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலாஜாவிலே உள்ள கிளைச் சிறைச்சாலையும், அரக்கோணத்திலுள்ள கிளைச் சிறைச்சாலையும் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது உண்மை. அரக்கோணத்திலுள்ள கிளைச் சிறைச்சாலை 24-12-1996 முதல் 3-2-1997 வரையிலும் மூடப்பட்டிருந்தது. அதேபோல், வாலாஜாவில் உள்ள கிளைச் சிறைச்சாலை 6-10-1996 முதல் 12-2-1997 வரை மூடப்பட்டிருந்தது உண்மை. ஆனால், அவை இரண்டுமே இப்போது திறக்கப்பட்டுவிட்டன. எதிர்காலத்தில், இந்தக் கிளைச் சிறைச்சாலைகள் மூடப்படுவதற்கான வாய்ப்பு இல்லாதபடி, அவை ஒழுங்காகச் செயல்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 575, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**575—**

### பள்ளிப்பட்டு தொகுதியில் நூற்பாலை தொடங்குதல்

***4571—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 17]

எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியில் புதிய கூட்டுறவு நூற்பாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியில், புதிய கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் மாநிலத்திலே, நெசவாளிகள் அதிகமாக இருக்கிற பகுதி பள்ளிப்பட்டு தொகுதி. ஈரோடு, திருச்செங்கோடு போன்ற பகுதிகளுக்கு ஈடாக, சமமாகத் தொழில் செய்கிற பகுதி பள்ளிப்பட்டு பகுதி. பக்கத்திலே, ஆந்திராவிலே, நகரியிலே, அதை மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவித்து, அங்கே 7 நூற்பாலைகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. அதேபோல, பக்கத்திலே இருக்கிற வடாற்காடு மாவட்டத்திலே, சோளிங்கரிலே, தனியார் நூற்பாலை துவங்கப்பட்டு, அதுவும் மிகவும் இலாபகரமாகச் செயல்பட்டு வருகிறது. ஆகவே, அதுபோல பள்ளிப்பட்டு தொகுதியிலே உற்பத்தி செய்யப்படுகிற நூல் அனைத்துமே செலவாகக்கூடிய நிலை இருப்பதால், புதிய கூட்டுறவு நூற்பாலையைத் தொடங்க அரசு முன்வர வேண்டும்; முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி இல்லையென்றால், தனியார் நிறுவனங்கள் நூற்பாலையைத் துவங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள்; அவர்களுக்கு 'ஜாயின்ட் செக்டார்' என்ற வகையிலே அனுமதி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற ஆலைகளை முறைப்படுத்துவதற்கே இன்னும் முறையாகச் செய்ய இயலாத நிலை அரசுக்கு ஒரு பக்கம் உள்ளது. இன்னொரு பக்கம், மாண்புமிகு உறுப்பினர் தொகுதியிலே இருக்கிற விசைத்தறிச் சங்கங்கள், பெரும் சிரமத்திற்கு ஆளானவற்றையெல்லாம் மாற்றியமைத்து, இப்போதுதான் அங்கே விசைத்தறிகள் எல்லாம் முறையாகச் செயலாற்றப்பட்டு, நட்டங்கள் குறைக்கப்பட்டு, ஒட்டுமொத்தமாகத் துணிகள் எல்லாம் ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கொள்முதல் செய்யப்பட்டு, ஒரு நிலைக்கு வந்திருக்கிறது. தனியார் மில்களை ஆரம்பிப்பதில், நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், கூட்டுறவுத் துறையிலேயோ

அல்லது வேறு அரசு சார்ந்த துறையிலேயோ, நூற்பாலையைப் புதிதாக உருவாக்குவது என்பது. இன்றைய சூழ்நிலையிலே இயலாத காரியமாக இருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 576, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர்.

**576—**

### கால்நடைப் பண்ணை தொடங்குதல்

***7125—திரு.எஸ்.டேவிட் செல்வின்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டத்தில் மாவட்ட கால்நடைப் பண்ணை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிதம்பரனார் மாவட்டத்தில், மாவட்ட கால்நடைப் பண்ணை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு.எஸ்.டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களிலே, அதிகமான விவசாயப் பகுதிகளைக் கொண்டது சிதம்பரனார் மாவட்டமாகும். ஆனால், அங்கு இன்னமும் மாவட்ட கால்நடைப் பண்ணை அமைக்கப்படவில்லை. அதுவும், குறிப்பாக, ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் மட்டும் சுமார் 22 ஆயிரம் ஏக்கர், நிலப்பரப்பிலே விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, அங்கு கால்நடைப் பண்ணை அமைக்கப்பட்டால் கால்நடைகளுக்குரிய தீவனங்கள் அருகிலேயே கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. மேலும் அங்குள்ள விவசாயிகள்



கால்நடைகள் மூலமாக புதிய யுக்திகளைக் கையாண்டு நல்ல இலாபத்தையும், பொருளாதார மேம்பாட்டையும் அடைய வழிவகுக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து சிதம்பரனார் மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மாவட்ட கால்நடைப் பண்ணை அமைக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்பே திருநெல்வேலி மாவட்டத்தில் சிதம்பரனார் மாவட்டம் உள்ளடங்கி இருந்தபோது திருநெல்வேலி மாவட்டத்திற்கு, மாவட்ட கால்நடைப் பண்ணை ஒன்று அபிஷேகப்பட்டியில் நிறுவப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது. எனினும் மாவட்டந்தோறும் கால்நடைப் பண்ணைகள் அமைக்கும்பட்சத்தில் சிதம்பரனார் மாவட்டத்தில் கால்நடைப் பண்ணை அமைப்பது குறித்து உரிய நடவடிக்கை அரசினால் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 577, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**577—**

### வனத் துறைப் பள்ளிகளை ஆதிதிராவிடர் நலத் துறையிடம் ஒப்படைத்தல்

***7360—திரு. சி. ஞானசேகரன்:**

**திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு—அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களிலுள்ள ஜவ்வாது மலைப் பகுதிகளிலுள்ள வனத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளை, நிதி உதவி அளித்து வரும் ஆதிதிராவிடர் நலத் துறையிடமே ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 ஏப்ரல் 17

வட ஆற்காடு-அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் பள்ளிகளை, நிதியுதவி அளித்துவரும் ஆதிதிராவிடர் நலத் துறையிடமே ஒப்படைக்கலாமா அல்லது வேண்டாமா என்பது அரசின் பரிசீலனையில். உள்ளது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் சில மாவட்டங்களில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் பல பள்ளிகள் இயங்கி வருகின்றன. வனத் துறைக்கென்று ஏற்கெனவே ஏராளமான பொறுப்புகள் இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் ஒரே கிராமத்தில் Non Bailable Warrant 390 பேர்மேலே இருக்கின்றன. அவை எல்லாம் முடியாத நிலையில், வனத் துறை அந்தப் பணியையே செய்யமுடியாத நிலையில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் துணை வினாவில் கேட்க வேண்டியதில்லை. பள்ளிகளைப் பற்றி மாததிரம் கேளுங்கள்.

**திரு சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் எல்லாம் விடுமுறை எடுக்க வேண்டும் என்று சொன்னால் டி.எஃப்.ஓ.—விடம் சென்று அவர் இல்லையென்றால் சி.எல்.கூடப் பெறமுடியவில்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைச் சொல்லுங்கள். அதையெல்லாம் விட்டு விட்டு Non-Bailable Warrant எல்லாம் கேட்டால். அது என்ன இதற்கு துணைக் கேள்வியா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. டிஎஃப்.ஓ. வந்து கரும்பலகையில் எழுதி, பாடம் நடத்தவேண்டிய நிலையெல்லாம் ஜமுனாமத்தூரில் நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் தடுக்க வேண்டுமென்று சொன்னால் - ஆதிதிராவிடர் நலத் துறைதான் இந்தப் பள்ளிகளுக்குச் சம்பளமே கொடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வனத் துறைக் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளையும், ஏற்கெனவே அவர்களுக்கு சம்பளம் வழங்கிக் கொண்டிருக்கிற ஆதிதிராவிடர் நலத் துறைக்கு மாற்றம் செய்ய உடனடியாக உத்தரவிடுவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 17]

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின்கீழ் நடத்தப்படும் பள்ளிகளின் தரம், மற்ற பள்ளிகளின் தரத்தைவிட மிக நன்றாக இருப்பதாக, முன்னாள் தலைமைச் செயலாளர் அவர்கள் 2 நாட்கள் அங்கே தங்கி அறிக்கை ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போதுகூட தனியார் பள்ளிகளைவிட அந்தப் பள்ளிகளின் தரம் சிறப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். மேலும் வனத் துறையைச் சேர்ந்தவர்கள் அப்பள்ளிகளுக்குச் செல்லும் சாக்கில் வனப் பகுதியைப் பார்வையிட அது ஏதுவாக இருக்கிறது. ஆகவே, இன்னும் அது அரசின் பரிசீலனையில்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினா பொருத்தமாகக் கேட்டால் கேட்கவிடுவேன். Non-Bailable Warrant. 390 பேர் என்று இதெல்லாம் பேசக்கூடாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய பள்ளிகள் எல்லாம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன என்று சொன்னார்கள். ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் நடக்கும் பள்ளிகள்கூட மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. என்னுடைய வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் அலமேலுமங்காபுரம் கிராமத்தில் 90 விழுக்காடு தேர்ச்சி பெறக்கூடிய பள்ளிகள் எல்லாம் இருக்கின்றன. வனத் துறையின் கீழும் பள்ளிகள் நன்றாக நடக்கின்றன, நீங்கள் அந்தப் பள்ளிகளை சிறப்பாக நடத்திக் கொண்டிருந்தாலும்கூட, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகள் மிகச் சிறப்பாக நடைபெறுகிற நிலை இருக்கிற காரணத்தால், வனத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளை ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் தயவு செய்து மாற்றுவதற்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைத்தான் நீங்கள் அப்போதே சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டார். திருப்பித் திருப்பி இதையே நீங்கள் துணை வினாவாகக் கேட்டால் என்ன அர்த்தம்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 2 நாள் செக்ரட்டரி தங்கியிருந்ததாகச் சொல்கிறார்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், அவர் தகவலைச் சொல்கிறார். சட்டமன்றத்திற்குத் தகவல் சொல்ல வேண்டாமா? மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளை யார் நடத்துவது என்பது கேள்வி அல்ல. எப்படி நடத்தப்படுகிறது என்பதுதான் முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும். அந்த வகையிலே வனத் துறை மிகச் சிறப்பாக நடத்துகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 578, திரு. பி. வெங்கடசாமி, திரு. கே.சி. கணேசன், மற்றும் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

3 உறுப்பினர்கள் வினா கொடுத்திருந்தால் யாராவது ஒருவரைத் தான் அழைக்க வேண்டும் என்பது மரபு.

**578—**

**சத்துணவுத் திட்டத்திற்கு மானியத்தை உயர்த்துதல்**

***1868—திரு.பி. வெங்கடசாமி :**

**திரு. சி. ஞானசேகரன்:**

**திரு. கே.சி. கணேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்திற்கு வழங்கப்படும் மானியத்தை 18 பைசாவிலிருந்து 25 பைசாவாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மேற்கண்ட செயற் குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.





THIRU B. VENKATASAMY: Hon. Speaker Sir, the subsidy grant for Mid-day meals is only 18 paise per child. But the prices of oil, dhal and vegetables have increased very much. May I know from the Hon. Minister whether the grant would be increased in view of the increased prices in the market.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டது போல கடந்த 1996-ஆம் ஆண்டு ஜனவரியிலேதான் 13 பைசாவிலிருந்து 18 பைசாவாக அரசு உயர்த்தியிருக்கிறது. மீண்டும் 7 பைசா உயர்த்தி 25 பைசாவாக்கினால் அரசுக்கு மேலும் கூடுதலாக 19.42 கோடி ரூபாய் செலவாகும். அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப தற்போது இதை ஏற்க இயலாது.

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக்கு 18 பைசா என்று கொடுப்பது போதாது. சத்துள்ள உணவாகப் போடவேண்டுமென்று சொன்னால் காய்கறி, எண்ணெய் போன்ற சாமான்களுக்கு 18 பைசா போதாது. சத்துள்ள உணவாகத் திகழ வேண்டுமென்ற அடிப்படையில் 18 பைசா என்பதை 25 பைசாவாக அரசு உயர்த்துவதற்கு மறுபரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில்தான். 18 பைசாவாக உயர்த்தியதே 1996 ஜனவரியில்தான். ஓராண்டுதான் ஆகிறது. மீண்டும் 7 பைசா உயர்த்த வேண்டுமென்றால் அரசுக்குக் கூடுதல் செலவாகும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். சத்துள்ள உணவாகத்தான் இந்த அரசு வழங்கி வருகிறது. சத்தில்லாத பொருட்களை எல்லாம் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து குழந்தைகளுக்கு சத்துள்ள உணவுதான் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விறகுக்கு 5 ½ பைசா, காய்கறிக்கு 9 பைசா, மளிகைக்கு 3 ½ பைசா என்று ஒரு குழந்தைக்கு கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1996 ஜனவரியில்தான் 13 பைசாவிலிருந்து 18 பைசாவாக உயர்த்தியுள்ளோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், விலைவாசி விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. எண்ணெய் விலை,

காய்கறி விலை எல்லாம் ஏறிக்கொண்டிருக்கிறது. விலைவாசியைக் கருத்தில் கொண்டு உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 19.42 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும் என்பது அதிகம் அல்ல. 450 கோடியை ஏற்கெனவே செலவு செய்து கொண்டிருக்கிறோம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சென்றமுறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தீர்கள் அல்லவா, அப்போது ஏன் கேட்கவில்லை? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறையதரம் கேட்டிருக்கிறேன். விறகுக்கு 9 பைசா என்றும், காய்கறிக்கு 9 பைசா என்றும், மளிகைக்கு 7 பைசா என்றும், 25 பைசாவாக உயர்த்தித் தந்தால்தான் அங்கே இருக்கக்கூடிய குழந்தைகள் எல்லாம் சத்துள்ள உணவைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த 19 கோடி ரூபாய் என்பதை பெரிதாகக் கருதாமல் உயர்த்தித்தர முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டாயமாக பதில் சொல்ல வேண்டுமென்ற தேவையில்லை. அவர் கேட்ட கேள்வி ஏற்கெனவே இரண்டு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகள் தான். எனவே, அமைச்சர் விரும்பினால் பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னதுபோல் விலைவாசி ஏறவில்லை. முந்தைய ஆட்சியில் ஏறிய காய்கறி விலை எல்லாம் இப்போது மிகவும் குறைந்து கொண்டே வந்துவிட்டது. முன்பு 1996-ல் இருந்ததைவிட குறைந்த விலையில்தான் காய்கறிகள் விற்கப்படுகின்றன. அதனால் ஏற்ற வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்குத் தரப்படுகின்ற பணத்திலே, மாணவர்களுக்குக் கணக்கிட்டுத் தரப்படுகின்ற பணத்திலே 1/2 பைசா உப்புக்காகப் பிடித்தம் செய்துகொள்ளப் படுவதாகச் சொல்லுகிறார்கள். மேலும் 3 மாதங்கள் கழித்துதான் அவர்களுக்கு இந்தப் பணம் போய்ச் சேருகிறதாம். எனவே, அவர்களுடைய கைப் பணத்தைப் போட்டு, கடன் வாங்கிப் போட்டு, செலவிட வேண்டிய



ஒரு சூழ்நிலை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே இந்தக் குறைகளை எல்லாம் நீக்கும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மதிய உணவுத் திட்டத்திற்காக இருக்கின்ற அலுவலர் மூலமாக இந்தப் பணம் உடனடியாகப் பட்டுவாடா செய்யப்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணம் 3 மாதங்களுக்கு முன்பாக அட்வான்சாகக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு குவார்ட்டருக்கும் 3 மாதங்களுக்கு முன்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படுகிறது. அப்படியும் அவர்களுக்கு வழங்கப்படுகிற பணம் தாமதமானால் தலைப்பு எண் 1 கணக்கிலிருந்து சத்துணவிற்கு உடனடியாக, அவசியமாக வழங்கப்படுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே எந்தத் தடங்கலும் ஏற்படாது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 579, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**579—**

**ஓய்வு பெறும் சத்துணவுப் பணியாளர்களுக்கு நிதி உதவி**

***5245*—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓய்வு பெறும் சத்துணவு மற்றும் ஊட்டச்சத்துப் பணியாளர்களுக்கு ரூ.25,000/— நிதி உதவி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும்

[1997 ஏப்ரல் 17

தமிழ்நாடு ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் அவர்கள் ஓய்வு பெறும்போது உதவித்தொகை வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதன் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள் ஓய்வுபெறும்போது அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு எவ்வாறு ஸ்பெஷல் பிராவிடன்ட் ஃபண்ட் திட்டத்தின்கீழ் ஒரு குறைந்த தொகையை, மாதத்திற்கு 10 ரூபாய் என்ற அளவில் 144 மாதங்களுக்குப் பிடித்தம் செய்து, அரசாங்கம் அதிலே 5 ஆயிரம் ரூபாயையும், அவர்கள் வழங்கியிருக்கிற பணத்திற்கு வட்டியையும் சேர்த்து மொத்தம் 10 ஆயிரம் வழங்குகின்ற திட்டத்தின்படி இவர்களுக்கும் வழங்கலாம் என்ற கருத்துரு அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் 25000 ரூபாய் என்ற முறையில் மாற்றி அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு எப்படி வழங்கப்படுகிறதோ, அதே வகையிலேதான் சத்துணவு ஊழியர்களுக்கும் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 580, திரு. பே.வே. ஸ்ரீ. வெங்கடேசன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 17]

**580—**

**காவேரிப்பட்டினத்தில் பொறியியற் கல்லூரி துவங்குதல்**

*** *1628*—திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் இந்து சமய அறநிலையத் துறை மூலம் பொறியியற் கல்லூரி ஒன்று துவங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் இந்து சமய அறநிலையத் துறை மூலம் பொறியியற் கல்லூரி ஒன்று துவங்க சாத்தியக்கூறு இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினத்தில் இருக்கின்ற கோயில்களுக்கு அதிகமான நிலங்கள் இருக்கின்றன. அதில் சிலவற்றைத் தனியார்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள். இப்படி அதிகமான நிலங்கள் இருந்து, அதிக வருவாயுடன் நடக்கின்ற இந்தத் திருக்கோயிலின் மூலம் பொறியியற் கல்லூரி கட்டினால், ஓசூரிலே இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு மிகவும் பயனுள்ள வகையில் மாணவர்களை உருவாக்க முடியும். ஆகவே, அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம் பகுதியில் நான்கு கோயில்கள் இருக்கின்றன. அருள்மிகு சக்திவிநாயகர் கோயில், காவேரிப்பட்டினம்—ஆண்டு வருமானம் ரூ.40000; அருள்மிகு களிசென்ராயப் பெருமாள் கோயில், எர்ரஹள்ளி—ஆண்டு வருமானம் ரூ. 1500; அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில், காவேரிப் பட்டினம்—ஆண்டு வருமானம் ரூ. 4000; அருள்மிகு அங்காளம்மன் கோயில்,

[1997 ஏப்ரல் 17

காவேரிப்பட்டினம்-ஆண்டு வருமானம் ரூ. 90,000. இதுபோன்ற குறைந்த வருமானம் இருக்கின்ற காரணத்தினாலேயும், அதேபோல அந்தப் பகுதியில் பர்கூரிலே அரசு சார்பிலே பொறியியல் கல்லூரி ஒன்றும் தனியார் சார்பிலே பொறியியற் கல்லூரி ஒன்றும் இயங்குவதாலும், இந்தக் கேள்விக்கு இடமில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் கோவில் தேர்த் திருவிழாவில் இரு தரப்பினர்களுக்கு இடையில் மோதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவில்பட்டி, செண்பகவல்லி அம்மன் கோயில் திருவிழாவில் இருதரப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் சிறப்பு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. டி. சுதர்சனம் அவர்களை முதலில் பேச அழைக்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த *13-4-1997* அன்று கோவில்பட்டி நகரத்திலே இருக்கின்ற செண்பகவல்லி அம்மன் திருக்கோவிலிலே தேர் ஓட்டுகின்ற மண்டகப்படி விழா நடைபெறுவதாக இருந்தது. எட்டையபுரம் சமஸ்தானத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு அந்தத் தேர் ஓட்டுகின்ற விழாச் செலவு முழுவதையும் செய்ய வேண்டுமென்று நீண்ட நாட்களுக்குப் பின்னாலே அங்கே ஆணையிடப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின் படி அந்தக் குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்த சில பேர் அந்தத் தேர் ஓட்டுகின்ற விழாவை நடத்திக் கொண்டிருந்தார்கள். *13-4-1997* அன்று காலையிலே சிலர் வந்து நாங்களும் தேர் ஓட்ட வேண்டுமென்று அங்கே சொல்லியிருக்கின்றார்கள். அரசு அதிகாரிகள், 'உங்களுக்குத் தேர் ஓட்டுகின்ற அதிகாரமில்லை, வேறு ஒரு விழாவை நீங்கள் நடத்திக்கொண்டிருக்கிறீர்கள், அதை வேண்டுமானால் நடத்தலாம்' என்று சொன்னபிறகும் நாங்கள் கண்டிப்பாகத் தேரை ஓட்டுவோம் என்று சொல்லி தேரை இழுக்க அவர்கள் முயற்சித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே அதிகாரிகள் எல்லாம்



1997 ஏப்ரல் 17] [திரு. டி. சுதர்சனம்]

பேசி, நீங்கள் வேண்டுமானால் இரண்டு மணி நேரத்திற்கு ஏதாவது விழா நடத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். பிறகு அவர்கள் ஏதோ கலை நிகழ்ச்சி போன்று இரண்டு மணி நேரத்திற்கு நடத்திவிட்டுப் போய் விட்டார்கள். அதற்குப் பின்னாலே தேர் ஓட்டுகின்றபோது மிகப் பெரிய கலவரத்தை உண்டாக்க வேண்டுமென்று எண்ணி சில சமூக விரோதிகள் அங்கே வந்து, தேரை இழுத்து இருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே மற்றொரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அதைத் தடுக்க முயற்சித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அங்கே மிகப் பெரிய கலவரம் ஏற்பட்டது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தை, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சொந்தமான நான்கு ஜின்னிங் மில்களை அங்கே கொளுத்திவிட்டார்கள்.

முற்பகல்10-35

அதேபோன்று, பெரிய கடைகள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே மூன்று, நான்கு தினங்களாக பதட்ட நிலை காணப்படுகிறது. இரு பிரிவினரையும் அங்கே மிகவும் துன்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையிலே, அரசு, பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு, பாதிக்கப்பட்ட ஜின்னிங் பேக்டரி உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டும், இனிமேல் இதுபோன்ற சமூக விரோதச் செயல்கள் நடைபெறாமல் இருப்பதற்கும், கடந்த மூன்று, நான்கு நாட்களாக அங்கே ஏற்பட்டுள்ள இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கும் பரிகாரம் காணுகின்ற வகையில் ஒரு சமாதானக் குழுவை ஏற்படுத்தி, அங்கே அமைதி நிலவச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டுவருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *13-4-1997*-ஆம் தேதியன்று கோவில்பட்டியில் தேர்த் திருவிழா நடைபெற்றது. அந்தத் தேர்த் திருவிழா நடத்துவது சம்பந்தமாக ஏற்கெனவே பிரச்சினைகள் உருவாகி, ஆர்.டி.ஓ. அவர்கள் இரு சமூகத்தினரையும் அழைத்துப் பேசி அந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். இருந்தாலும், ஒரு சமூகத்தினர் அங்கு திருவிழா நடத்தும்போது, இன்னொரு சமூகத்தினருக்கு பயம் கொடுத்து பேச்சுவார்த்தை நடத்தியது சரியில்லாத முறை. அதனால்தான் இந்த

அசம்பாவிதம் நடைபெற்றிருக்கிறது. இந்தத் தேர்த் திருவிழாவில் சலசலப்பு ஏற்பட்டு. போலீசார் அடிதடி நடத்தி, மக்களை விரட்டியிருக்கிறார்கள் அப்படி விரட்டும்போது, அதிகமாகக் கூட்டம் திரண்டு போகும்போது ஒரு சமூகத்தினருடைய வீடுகளையும், பேக்டரிகளையும். வாகனங்களையும் அடித்து நொறுக்கி, பல இலட்சக்கணக்கான ரூபாய்க்கு சேதத்தை விளைவித்திருக்கின்றார்கள். அதை ஒவ்வொன்றாக நான் குறிப்பிட விரும்பவில்லை. சேதம் அதிகமாக இருக்கின்ற சூழ்நிலையில், பதட்ட நிலையும் அங்கே நிலவி வருகிறது. மேலும், அங்கே 2000 போலீசார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களிலிருந்து 6 எஸ்.பி.க்கள். வந்து அங்கே முகாமிட்டிருக்கின்றார்கள். அப்படியிருந்தும், அசம்பாவிதநதைக் குறைக்க முடியவில்லை, தணிக்க முடியவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் யார் மீதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏன் அவர்கள் அசிரத்தையாக இருக்கின்றார்கள், என்ன காரணம் என்று தெரியவில்லை. அரசு, சுமுகமான முறையில் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புகிறது. அதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும், நஷ்டம் அடைந்தவர்களுக்கு நஷ்ட ஈடு உறுதியாக அளிக்கப்படவேண்டும். பதட்டமான சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பதட்டமான சூழ்நிலையைத் தணிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும், சம்பந்தப்பட்டவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் செண்பகவல்லி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நடந்ததையொட்டி அங்கு தேர் ஓட்டுவதில் இரண்டு சமூகத்தினருக்கு இடையே நடந்த மோதலின் காரணமாக ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கு இரண்டு சமூகத்தினரையும் அழைத்துப் பேசியதற்குப் பின்பும் அவர்கள் ஒத்துப்போகாத காரணத்தினால் இரு சமூகத்தினரும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டு, அதன் விளைவாக பல கடைகள் அங்கே சூறையாடப்பட்டிருக்கின்றன. பட்டப் பகலில்கூட ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். எரிகிற தீயிலே நான் எண்ணெயை ஊற்ற விரும்பவில்லை. எது எப்படி இருந்தாலும், தென் மாவட்டங்களிலே ஜாதிக் கலவரங்கள் தற்போது அதிகமாகப் பரவிக் கொண்டு வருகின்றன. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தவறுகள் யார் செய்தாலும் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.





ஜாதி மோதல்கள் மேலும் பரவாமல் தடுக்க வேண்டும். ஆகவே, இதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு குழுவை அமைத்து அங்குள்ள பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். மேலும் 19-ஆம் தேதியன்று கடையடைப்பு நடத்தப் போவதாக அனைத்துச் சங்கங்களும் கூறி இருக்கின்றன. இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஜாதியின் பெயராலே விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் தமிழகத்தில் நடைபெறாமல் இருக்க அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

*முற்பகல் 10-40*

*** திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13-4-1997-ஆம் நாள் கோவில்பட்டி அருகில், ஒரு கோயில் திருவிழாவில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக, கடந்த மூன்று நாட்களாக பதட்டமான நிலை ஏற்பட்டு, அங்கே போக்குவரத்தும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இரண்டு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தாக்குதலை நடத்தி பொது மக்களுக்கும், மற்றவர்களுக்கும் கடுமையான இடையூறுகள் ஏற்படுகின்ற நிலையிலே, சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதன் தொடர்பாக நேற்று மாலை, ஒருவர் பட்டப் பகலிலே வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட சம்பவங்களையெல்லாம், நமது கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கிற தமிழக அரசு, மிகக் கடுமையாகக் கண்டித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய அரசாக இருக்கின்ற காரணத்தால், இதுபோன்ற இனக் கலவரங்கள் அடிக்கடி தென் மாவட்டங்களில் நடந்து வருகின்ற காரணத்தால், இந்தப் பிரச்சினையை மிகக் கடுமையாக எடுத்துக்கொண்டு, உரியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் கோயில் தேரோட்டத்தையொட்டி ஏற்பட்டிருக்கிற கலவரம், இரு சாரார் மத்தியிலே பெரிய கலவரமாக ஏற்பட்டு, அதனாலே பொதுமக்களுடைய இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள, சொத்துக்கள் சேதம் அடைந்துள்ளன. அரசினுடைய பேருந்துகளுக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. பல இலட்சக்கணக்கான ரூபாய் சேதம் ஏற்பட்டுள்ளது. சாதாரணமாக இந்தத் திருவிழாக் காலங்களில், முன்னெச்சரிக்கை என்ற

அடிப்படையில், நம்முடைய காவல் துறை கண்காணிக்கின்ற ஒரு நிலையை பல பகுதிகளிலே நாம் பார்க்க முடிகிறது. ஆனால் இப்படிப்பட்ட ஒரு பதட்டமான நிலை அங்கு உருவாக வாய்ப்புண்டு என்று ஓரளவுக்குக் காவல்துறைக்குத் தெரிவித்திருந்தும், இந்த நிலை ஏற்பட்டது. காவல் துறை சரியான நேரத்திலே தலையிட்டிருந்தால் இந்தப் பிரச்சினை இந்த அளவுக்கு வளர்ந்திருக்காது. அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். எனவே இனியாகிலும், இப்படிப்பட்ட பிரச்சினைகளை வளரவிடாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை காவல் துறை எடுக்க வேண்டும். அதேநேரத்தில், அங்கே பல்வேறு முறையிலே, பல இலட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு, பாதிக்கப்பட்டிருக்கக் கூடியவர்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்கு, அந்த நஷ்டங்களை ஈடு செய்வதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் ஆலயத்தில் விழா எடுப்பது என்பது—வற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு, இறைவன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்று என்று உணர வேண்டுமென்ற அடிப்படையில் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. அதிலும் தேரோட்டம் என்பது, இறைவன் ஒருவரே என்று உணர்த்துவது ஆகும். கையிலே எடுத்துச் செல்லக்கூடிய அளவுக்கு உள்ள அந்த விக்ரகத்தை, பெரிய தேரின்மீது அமர வைத்து, அனைத்து மக்களும் வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபட்டு, தேரின் வடத்தைப் பிடித்து இழுத்து, ஒற்றுமையாக இறைவன் சன்னதியில் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதற்காக வருஷாவருஷம் தேரோட்டம் நடத்தப்படுகிறது. எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் தீர்த்துக்கொள்ளக்கூடிய முகமாக இந்த விழாக்கள் நடத்தப்படுகின்றன. அந்த விழாவில்கூட, ஜாதி, இன பேதத்தைத் தூண்டிவிடுகிறார்கள். அரசியல் நோக்கத்திற்காக யாரோ செய்கிறார்கள். இந்தப் பின்னணியில் பல பேர் இருக்கக்கூடும் என்பது என்னுடைய கருத்து. எனவே இதுபோன்ற ஜாதிக் கலவரங்களை ஏற்படுத்தி, மக்கள் மத்தியில் ஒற்றுமையை குலைக்கச் செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைக் கண்டறிந்து அவர்கள்மீது தக்கபடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு ஆலோசனை சொல்வதன் மூலமோ, தாங்கள்தான் இது போன்ற கலவரங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று சொல்வதன் மூலமோ, நஷ்ட ஈடுகளை அவர்கள் மூலம் ஈடு





செய்வதன் மூலமோ நடவடிக்கை எடுக்கலாம். இதுபோன்ற கலவரங்களுக்கு அரசியல் பின்னணியில்லாமல் இருக்க, அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

***THIRU B. VENKATASAMY** : Hon'ble Speaker, Sir, in the Shenbagavalli Car festival at Kovilpatti, people belonging to two communities have clashed with each other. As our Hon'ble members have already stated, during such car festivals, the Police Department must always be alert and I have seen in so many car festivals that they had been alert. But, I don't know how this incident has taken place. I request the Hon'ble Chief Minister who is in charge of Home Department to see that such incidents do not recur. The Police Department should be more alert. After the clash, yesterday also, a murder has taken place there. Yesterday, I gave a call attention motion in this regard and also met the concerned officers to take necessary action urgently in this matter because of communal tension. Communal tension is the most important and sensational subject. As our friends have already stated, some people are behind these incidents and they want to exploit the situation against the innocent people. So, I request the Hon'ble Chief Minister to see that stern action is taken against those people who commit such mistakes. Then only, we can avoid the recurrence of further incidents. Had the Police Department taken this matter seriously, they could have avoided yesterday's murder. So, I request the Hon'ble Chief Minister to take stern action against those who are responsible and see that compensation is are given to the affected people. Thank you.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி, செண்பகவல்லி அம்மன் தேரோட்டத் திருவிழா நடத்துவதில் ஆதிதிராவிடர்களுக்கும். கம்மவார்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் பற்றிய இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பை மாண்புமிகு உறுப்பினர்கள் — சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. சுதர்சனம், திரு. லி. அய்யலுசாமி,

திரு. பி.ஆர். சுந்தரம், திரு. எல். சந்தானம், திரு. டி. மணி, திரு. சி. வேலாயுதன், திரு. பி. வெங்கடசாமி ஆகியோர் கொண்டு வந்து தங்களுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். இதுகுறித்து அரசுக்குக் கிடைத்த தகவலை அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி நகரிலுள்ள அருள்மிகு செண்பகவல்லி அம்மன் திருக்கோவிலில் ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதத்தில் சில சமூகத்தினராலும், தனிப்பட்ட நபர்களாலும் ஒவ்வொரு நாளும் திருவிழா நடக்க நிர்ணயிக்கப்பட்டு மண்டகப்படி என்ற பெயரால் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் 5-4-1997 முதல் 15-4-1997 வரை 11 நாட்கள் திருவிழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் 9-ஆம் நாள் நிகழ்ச்சியாக கம்மவார் சங்கத்தினரால் வழக்கம்போல் தேர்த் திருவிழா மண்டகப்படி நடத்த உத்தேசிக்கப்பட்டு இருந்தது. மேற்படி தேர்த் திருவிழா மண்டகப்படி 9-ஆம் நாள் நடத்த தங்களுக்கு அனுமதி தர வேண்டும் என்று தேவேந்திர குல வேளாளர் சமூகத்தினர் கோவில்பட்டி கோட்டாட்சியருக்கு அனுப்பிய மனு விசாரிக்கப்பட்டு, மேற்படி 9-ஆம் நாள் மண்டகப்படி நிகழ்ச்சி கடந்த 20 வருடங்களாக கோவில்பட்டியைச் சேர்ந்த கம்மவார் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வருவதால், வழக்கமாக நடைபெறும் நிகழ்ச்சிகளை உடனடியாக மாற்றவோ அல்லது நிறுத்தவோ சட்டப்படி இயலாது என தேவேந்திர குல வேளாளர் சங்கத்தினருக்கு 2-4-1997 அன்று தெரிவிக்கப்பட்டது. எனினும், மேற்படி கோவிலில் 9-ஆம் நாள் மண்டகப்படி உரிமையை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தேவேந்திர குல வேளாளர் சங்கத்தினர் மூப்பன்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் திரு. மாரீஸ்வரன் தலைமையில் கோவில்பட்டி நகரில் உள்ள அம்பேத்கர் சிலைமுன் 8-4-1997 அன்று காலை 10-30 மணி முதல் மாலை 5-00 மணி வரை உண்ணாவிரதம் மேற்கொண்டனர். மேற்படி உண்ணாவிரதத்தின் போது 8-4-1997 அன்று பிற்பகல் சுமார் 2-35 மணியளவில் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி உண்ணாவிரதப் பந்தலுக்கு நேரில் வந்திருந்து, உண்ணாவிரதம் இருந்தவர்களை வாழ்த்திப் பேசியும், எவ்வாறாகிலும் மேற்படி 9-ஆம் நாள் மண்டகப்படியை நடத்தும் உரிமையை தேவேந்திர குல வேளாளர் சங்கத்தினர் பெற்றே தீர வேண்டும் என்று உணர்ச்சி, பூர்வமாகவும் ஆவேசத்துடனும் பேசிச் சென்று உள்ளார். உண்ணாவிரதத்தின் முடிவில் அவ்வாறே 9-ஆம் நாள் மண்டகப்படி நடத்தும் உரிமை வழங்கப்படவில்லை எனில், 13-4-1997, தேர்த் திருவிழா அன்று சுற்று வட்டாரங்களில்



உள்ள கிராமங்களிலும் கோவில்பட்டி நகரிலும் கடை அடைப்பு மற்றும் சாலை மறியல் நடத்தப்படும் என்று அறிவித்தனர். சட்டம்-ஒழுங்கு பாதிக்கக்கூடிய நிகழ்ச்சியைத் தவிர்க்கும்பொருட்டும், அமைதியான சூழ்நிலையை உருவாக்கவும் கோவில்பட்டி வருவாய்க் கோட்ட ஆட்சியர் 9-4-1997 அன்று இருதரப்பினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, மேற்படி 9-ஆம் நாள் மண்டகப்படி நாளன்று கம்மவார் சங்கத்தினர் வழக்கம்போல் தேர்த் திருவிழா மண்டகப்படியைச் செய்துகொள்வது என்றும். அதன்பின்னர் அன்றையதினம் இரவு 8-30 மணியளவில் தேவேந்திர குல வேளாளர் சங்கத்தினர் மற்றும் வியாபாரிகள் சங்கத்தினர் தனியாக ஒரு மண்டகப்படியைப் புதிதாக நடப்பு ஆண்டில் மட்டும் நடத்திக்கொள்ள வேண்டியது எனவும், அடுத்த ஆண்டு இதற்கு நிரந்தரத் தீர்வு காண தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், 9-ஆம் நாள் மண்டகப்படியில் இதர சமுதாயத்திற்கு வழங்கப்படும் மரியாதைகள் தேவேந்திர குல வேளாளர் சங்கத்தினருக்கும் வழங்கப்படும் என்றும் முடிவு செய்து, இந்த முடிவு இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு 13-4-1997 அன்று தேர்த் திருவிழா மண்டகப்படியை அமைதியான முறையில் நடத்தித் தருவது என்றும். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க உறுதுணையாக இருப்பது என்றும் தெரிவித்து. 13-4-1997 அன்று நடக்க இருந்த சாலை மறியலையும் விலக்கிக் கொண்டனர்.

மேற்படி தேர்த் திருவிழா நாளில் அமைதி காக்கும் பொருட்டு இரு தரப்பினராலும் அமைதிக் குழு அமைக்கப்பட்டது. 13-4-1997 அன்று தேர்த் திருவிழா நாளன்று கம்மவார் சங்கத் தலைவர் திரு. பி.ஆர்.எம். சீனிவாசன் மற்றும் கம்மவார் சங்கத்தினர், கோவில்பட்டி வருவாய்க் கோட்டாட்சியரிடம், தேவேந்திர குல வேளாளர் சங்கத்தினர், நகரின் எல்லா இடங்களிலும் 8-4-1997 அன்று ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டுக்கு முரணாக மேற்படி தேர்த் திருவிழாவை, தேவேந்திர குல வேளாளர் சங்கத்தினர் நடத்துவதாக மண்டகப்படி நிகழ்ச்சி அரங்கின் அருகே தேவேந்திர குல வேளாளர் சங்கத்தினர் ஒலிபெருக்கி அமைத்து இடையூறு ஏற்படுத்தியுள்ளனர் என்றும், திரு. பி.ஆர்.எம். சீனிவாசன் என்பவருக்குச் சொந்தமான சேமியா கடை விளம்பரத்தின்மீது தேவேந்திர குல வேளாளர் சங்கத்தினர் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளனர் என்றும், அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு மனு அளித்துள்ளார்கள்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 17

முற்பகல் 10-50

எனவே, கோவில்பட்டி வருவாய்க் கோட்டாட்சியர் இருதரப்பினரையும் 13-4-1997 அன்று பிற்பகல் 1-15 மணி அளவில் அழைத்து, அவர்களுடன் பேசி, எந்தவிதமான பிரச்சினையும் இன்றி ஒன்பதாம் நாள் மண்டகப்படி நிகழ்ச்சியை நடத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில், இருதரப்பினரும் சம்மதம் தெரிவித்துச் சென்றுள்ளார்கள். ஆட்சேபகரமான சுவரொட்டிகள் மற்றும் ஒலிபெருக்கிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று, கோட்டாட்சியர் அவர்கள் கூறியதையும் ஏற்றுச் சென்றுள்ளார்கள். ஆனால் 13-4-1997 அன்று மாலையில் கோவில்பட்டி அருள்மிகு செண்பகவல்லி அம்மன் கோயிலில் தேர் இழுப்பதற்கு முன், கோயிலில் உள்பூஜை நடந்து கொண்டிருக்கும்போது, சுமார் 6 மணிக்குமேல், கோயிலின் வடபுறத்தில் - வெளிப்புறத்தில் கல்வீச்சு நடைபெற்றதாகத் தகவல் கிடைக்கப்பெற்றவுடன், காவல் துறையினர் தலையிட்டு மேற்படி சம்பவம் தடை செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் காவல் துறைக் கண்காணிப்பாளர் மற்றும் வருவாய்க் கோட்டாட்சித் தலைவர் மற்றும் வட்டாட்சியர் உடன் இருந்தனர். இதனிடையே மேற்படி தேர் வடம் பிடிக்கப்பட்டு இழுத்துச் செல்வதற்கு ஏதுவாக, பின்புறம் உள்ள தேர்ச் சக்கரத்திற்குத் தடி போடுவதற்கென மூப்பன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த, உரிமையுள்ள சில நபர்கள் வந்தபோது, அவர்களில் இரு நபர்கள் அடையாளம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டதால் அவர்கள் தடிபோட வர இயலாது என மறுத்துவிட்டனர். எனவே மண்டகப்படிக்காரர்களான கம்மவார் சங்கத்தினர், தங்கள் சமூகத்தில் உள்ள நபர்களைக் கொண்டு தடிபோட்டு இரவு 7-30 மணியளவில் முதல் தேரும், பின்னர் 8-30 மணியளவில் இரண்டாவது தேரும் இழுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்து, காவல் துறையினரின் பாதுகாப்புடன் தேர் வலம் வந்தது. அவ்வாறு வலம் வந்து கொண்டிருக்கும்போது கோவில்பட்டி நகரின் புறநகர்ப் பகுதிகளான ராஜு நகர், சண்முகசிகாமணி நகர் மற்றும் நாயக்கர் சமூகத்தினர் அதிகமாக வாழும் பகுதிகளில் சில வன்முறைக் கும்பல்கள் கல்வீச்சு மற்றும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளார்கள். தெருக்களில் உள்ள விளக்குகளை உடைத்தும், சில தொழிற்சாலைகளை உடைத்தும் சேதப்படுத்தியுள்ளார்கள். தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்றைத் தீவைத்துக் கொளுத்தியுள்ளார்கள். உடனடியாகக் காவல் துறைக் கண்காணிப்பாளர் மற்றும் துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் போதிய காவலர்களை ரோந்து அனுப்பி, ஆங்காங்கு நடைபெறும் கலவரங்களை அடக்கி அமைதிப்படுத்தி, நிலைமை கட்டுக்குள்



1997 ஏப்ரல் 17] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கொண்டுவரப்பட்டது. தேர்த் திருவிழா நிகழ்சியின்போது, கோயிலின் வெளிப்புறத்தில் நடந்த கல்வீச்சின் காரணமாக, 6 நபர்கள் காயமுற்றார்கள். அவர்களில் இருவர், கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு 13-4-1997 அன்று இரவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். இதர நபர்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து கோவில்பட்டி நகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் இருக்கின்ற இரு சமூகத்தினரிடையே பாதிப்புக்குள்ளானவர்கள் அளித்த புகார்கள்மீது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, மேற்படி சம்பவத்தின் காரணமாக சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளின் மதிப்பீடு கணக்கிடப்பட்டு வருகிறது. கோவில்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில், அந்தப் பகுதிகளில் சட்டம்-ஒழுங்கைக் கண்காணித்து நல்லமுறையில் அமல்படுத்துவதற்காக சரகக் காவல் துறைத் துணைத் தலைவர்கள் தலைமையில், 6 காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், துணைக் கண்காணிப்பு அதிகாரிகள் நிலையில் 6 அதிகாரிகள், காவல் துறை ஆய்வாளர்கள் நிலையில் உள்ள 10 அதிகாரிகள், உதவி ஆய்வாளர்கள் நிலையில் உள்ள 12 அதிகாரிகள், அதிரடிப்படைக் காவலர்கள் 127 பேர் ஆகியோர் பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டு வருகின்றனர்.

14-4-1997 அன்று பிற்பகல் 2-30 மணிக்கு திரு. பசுபதி பாண்டியன், திரு. மாரீஸ்வரன் மற்றும் தேவேந்திர குல வேளாளர் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து, மண்டகப்படி உரிமை தங்களுக்கு வேண்டுமென்றும், ஒரு நாள் தேர் வடம் பிடித்து இழுக்கும் உரிமை வேண்டுமெனவும் கேட்டனர். இதுபற்றி பரம்பரையாக உள்ள வழிமுறைகள் ஆய்வு செய்யப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர், கம்மவார் சங்கப் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து, அவர்களுடைய சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்து இழப்பு ஏற்படக் காரணமானவர்கள்மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், சேதங்களை மதிப்பிட்டு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமெனவும், காவல்துறையில் பாரபட்சமற்ற அதிகாரிகளைத் தங்களுடைய பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் எனவும், கலவரம் மேலும் நிகழாமல் தடுக்க

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 17

ஆவன செய்யவேண்டும் எனவும், கலவரப் பகுதிகளில் காவல் துறை அதிகாரிகள் ரோந்து சென்று பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

காவல் துறை அதிகாரிகள் கோவில்பட்டியில் முகாம் இட்டுள்ளது குறித்தும், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இதற்கிடையில் 16-1-1997 அன்று மதியம் 1-30 மணிக்கு கோவில்பட்டி, சந்தைப்பேட்டை தெருவில் இருக்கும் தனியார் பேருந்து பணிமனைக்கு முன்பு ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாரியப்பன் என்கிற மாரிமுத்து என்பவரை அடையாளம் தெரியாத நபர்கள் வெட்டிக் கொலை செய்துவிட்டனர். இத்துடன் சம்பந்தப்பட்ட அனைவர்மீதும் கடுமையான நடவடிக்கையெடுக்கும்படி காவல் துறை அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பாக இருதரப்பிலும் குற்றம் இழைத்தோர்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்போது நிலைமை சுமுகமாக உள்ளது.

*முற்பகல் 10-55*

இருப்பினும் கலவரங்கள் எழ வாய்ப்புள்ள இடங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் கோவில்பட்டியில் முகாமிட்டு நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறார். ஜாதி, மத வேறுபாடுகளைக் கடந்து அனைவருக்கும் அமைதியான வாழ்வுக்கு வழிவகுக்கும் வகையில் இந்த அரசு தொடர்ந்து செயல்படும் என்பதையும், இனக் கலவரங்களையும் அது தொடர்பான மோதல்களையும் இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்பதையும், இந்தப் பிரச்சினைகளுக்கு மூலகாரணமானவர்கள் யாராக இருப்பினும் அவர்களை அடையாளம் கண்டு அவர்கள்மீது உரிய முறையில் கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தொடர்ந்து, அமைதிக் சூழ ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறையைச் சேர்ந்தவர்களும் அந்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் தொடர்ந்து அமைதி ஏற்பட இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 17] [பேரவைத் தலைவர்]

## (ஆ) சேலம் மாவட்டம், வாழப்பாடி வனச் சரகர் அலுவலகத்தில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணமடைந்தமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. சேலம் மாவட்டம், வாழப்பாடியில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் இறந்தது குறித்து 11 உறுப்பினர்கள் முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். முதலில், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், வாழப்பாடி அருகில் சின்னக்கட்டிப்பட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த செல்வம் என்பவர் சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டு, அங்கேயிருக்கிற வனத் துறை ரேஞ்சர் அலுவலகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார். அங்கே அவர் தூக்கில் தொங்கியதாகச் சொல்லப்படுகிறது. தூக்கில் தொங்கியவர் இறந்து விட்டதாகக் கருதியதால் அங்கே பதட்டம் நிலவி, பெரிய கலவரம் ஏற்பட்டு, போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறார்கள். அதில் ஒருவர் இறந்திருக்கிறார். தூக்கில் தொங்கியதாகச் சொல்லப்பட்ட செல்வம் என்பவரின் உறவினர் இறந்திருக்கிறார். மற்றும் 8 போலீஸ்காரர்கள் காயப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக ஒரு பழமொழி — 'when you have a dog, it should not bite' — என்று சொல்வார்கள். அந்த வகையில் பாதுகாப்பாக விசாரணைக் கைதிகளை, குற்றம் இழைத்ததாகக் கருதப்படுகிறவர்களை அழைத்துச் செல்ல வேண்டிய வனத் துறை ரேஞ்சர் அல்லது வனத் துறைக் காவலாளிகள் அவரைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். தூக்கில் தொங்குகிற ஒரு வாய்ப்பை, ஒரு தருணத்தை அவர்கள் கவனமாகத் தவிர்த்திருக்க வேண்டும். அப்படியில்லாமல் இப்படிப்பட்ட நிலைமையை அங்கே ஏற்படுத்தி, ஒரு பதட்ட நிலையை உருவாக்கி, அதனால் துப்பாக்கிச் சூடு ஏற்பட்டு ஏறக்குறைய 12 பேர் காயம்படக்கூடிய நிலைமை உருவாகி இருக்கிறது. துப்பாக்கிச் சூடு என்பது இன்றைக்கு செய்தித்தாளில் இரண்டு முறை வந்திருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டிய அவசர நிலை குறித்து நான் அரசினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், வாழப்பாடியில் சந்தன மரக் கடத்தல் சம்பந்தமாக

[திரு. ஜி. பழனிசாமி] [1997 ஏப்ரல் 17

சந்தேகத்தின் பேரில் அழைத்துச் சென்ற செல்வம் என்பவரை வனத் துறை ரேஞ்சர் அல்லது வன இலாக்காவினுடைய அதிகாரிகள் துன்புறுத்தியதன் காரணமாக கடுமையாக அவருக்கு மயக்கம் ஏற்பட்டு, இறந்து போனார் என்ற சந்தேகத்தின் பேரில் சாக்குப் பையில் கட்டி, அங்கேயிருக்கிற புகைக் கூண்டில் அவர் வைக்கப்பட்டு, அவர் இறந்து போனார் என்று பொது மக்களுக்குத் தெரிந்து, அதன்பேரில் பொது மக்கள் கூடி, அந்த வனத் துறை ரேஞ்சர் அலுவலகம் முற்றுகை இடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் காவல் துறை அதிகாரிகள், ஆர்.டி.ஓ. எல்லாம் சென்று பார்த்து, விசாரித்து, ஆர்.டி.ஓ. முன்னிலையில் சாக்கு மூட்டையை அவிழ்த்துப் பார்க்கிறபோது அவருடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிற நிலையில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

இது பத்திரிகைகளில் வந்திருக்கிற செய்தி. இதன் காரணமாக அங்குவந்த மக்களின் கூட்டத்தைக் கலைப்பதற்கு காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதன் விளைவாக அங்கே செல்வத்தினுடைய உறவினர் கணேசன் என்பவர் இறந்து போய் இருக்கிறார். மேலும் பல பேர்களுக்குக் காயம் ஏற்பட்டு இருக்கிறது. சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டு, தொடர்ந்து பல கோடி ரூபாய்க்கு காடுகளில் இருந்து விலை உயர்ந்த மரங்களைக் கடத்துபவர்களை சந்தேகத்தின் பேரில் வனத் துறை அதிகாரிகள் அழைத்துச் செல்வதைத் தடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் கடத்தலில் ஈடுபடுபவர்கள்மீது உரிய விசாரணை நடத்தி அவர்களைத் தண்டிப்பதற்கு மாறாக, அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் உருவாக்க வேண்டும் என்பதற்காக, சாக்கு மூட்டையிலே கட்டுவது, பையிலே கட்டுவது, காலைத் தனியாக எடுத்து விடுவது, தலையை வேறு இடத்திலே போடுவது, இதையெல்லாம் பிறகு நாய் தூக்கிப் போய் விட்டது, நரி தூக்கிப் போய் விட்டது என்று ஒரு கதை கட்டிவிட்டு நாட்டில் ஒரு கொந்தளிப்பை உருவாக்குவதற்கு சில அரசு அதிகாரிகள் திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள்.

முற்பகல் 11-00

இறந்து போன கணேசன், கைது செய்யப்பட்டிருக்கிற செல்வம், இவர்களைவிட அந்த வனத் துறை அதிகாரிகள்மீது எனக்குச் சந்தேகம் இருக்கிறது. ஏனென்றால் இவர்கள் ஏதாவது கண்டுபிடித்துக் கொடுத்துவிட்டால் நாளைக்கு விசாரணை என்று வந்துவிட்டால், சந்தன மரக் கடத்தலில் அதிகாரிகளுக்குத் தொடர்பு இருக்கிறது என்று சொல்லி விடுவார்களோ என்பதற்காகத்தான் அவர்களைக்



1997 ஏப்ரல் 17] [திரு. ஜி. பழனிசாமி]

கொலை செய்வதற்கான முயற்சியிலே அந்த அதிகாரிகள் ஈடுபட்டிருப்பார்கள் என்று நான் சந்தேகிக்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட நிலையில் இவர்கள்மீது சரியான விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கிருக்கின்ற பதட்டத்தைத் தணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதேபோன்ற சம்பவம்தான்— காவல் நிலையத்தை எதிர்த்து, மக்கள் புதுக்கோட்டையில் நடத்தியிருக்கிறார்கள். இதுபோன்றுதான் அங்கேயும் கல்வீச்சு நடந்து இருக்கிறது.

இதுபோன்று தொடர்ந்து மக்கள் காவல் நிலையத்திற்குச் சென்று தாக்கக்கூடிய நிலை உருவாகிக்கொண்டு இருந்தால், சட்டத்தைப் பொது மக்கள் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்கிறார்கள் என்று சொன்னால் சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய, சட்டத்தை நிலைநாட்டக்கூடிய, ஒழுங்குபடுத்தக்கூடிய, பதட்டத்தைத் தணிக்கக்கூடிய நம்முடைய காவல் துறையினுடைய நிர்வாகம் செயலிழக்காமல் இருப்பதற்குத் தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் வாழப்பாடி சரகத்தில் காவல் துறைக்கும், பொது மக்களுக்கும் மோதல் ஏற்பட்டு, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் பொது மக்களில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். மேலும், புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடியை அடுத்த கரட்டுவான்துறையைச் சேர்ந்த இளைஞர் ராஜேந்திரன் என்பவர் கரம்பக்குடி காவல் நிலையத்திற்கு ஒரு புகாரின் அடிப்படையில் அழைத்துச் செல்லப்பட்டு, பிறகு அவரைக் காணவில்லை என்றும், காவலர்களால் அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற புகாரின் அடிப்படையில் அப்பகுதியில் பதட்ட நிலை ஏற்பட்டு காவல் துறைக்கும், பொது மக்களுக்கும் மத்தியில் மோதல் நடந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இப்படிப் பல இடங்களில் துப்பாக்கிச் சூடு நடந்து பொது மக்கள் அவதிப்படுகிறார்கள். இறந்துபோன கணேசன் என்பவருக்கும், காணாமல் போய், பின்னர் இறந்த ராஜேந்திரன் என்பவருக்கும் அரசு நஷ்ட ஈட்டுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாயாவது கொடுக்க வேண்டும், இதற்குத் தனி நீதி விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

[1997 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சின்னமகடு என்ற பகுதியில் இந்த அதிபயங்கரச் சம்பவம் நடைபெற்று இருக்கிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினருடைய தம்பி மகனை சந்தன மரக் கடத்தல் சம்பந்தமாக, கோர்ட் ஆர்டர் வந்திருக்கிறது என்று சொல்லி அழைத்துச் சென்று, வனத் துறை அதிகாரிகளால் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டு அவர் இறந்து விட்டதாக வன அதிகாரிகள் கருதி, அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல அந்த அதிகாரிகள் முயலாமல், ஒரு சாக்கு மூட்டையிலே கட்டி, அவர் கட்டி இருந்த வேட்டியை அந்தச் சாக்கு மூட்டையிலே போட்டு மூடி, ஒரு புகைக் கூண்டிலே அடைத்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய கொடுமையைச் செய்ய அரசு அதிகாரிகளுக்கு, வனத் துறை அதிகாரிகளுக்கு எப்படித் துணிவு வந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது உள்ளமெல்லாம் பதை பதைக்கிறது. யார் எந்தத் தவறைச் செய்தாலும் அந்தத் தவறைத் தட்டிக் கேட்க அல்லது அதுகுறித்து நீதி விசாரணை செய்ய அரசு கோர்ட்டை நியமித்து உள்ளது.

அந்தக் கோர்ட்டுக்கு மதிப்பு கொடுக்காமல், அவர் செய்த தவறை நீதிமன்றத்திலே எடுத்துரைக்காமல் அவரை அடித்து சாக்கு மூட்டையில் கட்டி, புகைக்கூண்டிலே தள்ளக்கூடிய ஒரு நிலைமையை உண்டாக்கி, இந்த அரசுக்குக் கெட்ட பெயரை எப்படியாவது ஏற்படுத்த வேண்டும், கலைஞருடைய அரசுக்குக் கெட்ட பெயரை உருவாக்கவேண்டும் என்று திட்டமிட்டு, அந்த வனத் துறை அதிகாரிகள் செய்து வருவதாக நான் உணர்கிறேன். ஆகையினால், நம்முடைய அரசு இந்தக் குற்றத்தைச் செய்தவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து, அவர்களுக்குக் கடுமையான தண்டனையை அளிக்கவேண்டும்.

*முற்பகல் 11-05*

அதுமட்டுமல்ல. அந்த அப்பாவி மக்கள். மலையோரத்திலே தங்களுடைய வாழ்க்கையைக் கழித்துக்கொண்டிருக்கக்கூடிய மலைச்சாதி மக்கள், எப்படியாவது உயிர் வாழ வேண்டும் என்று துடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த மக்களை அடித்து, இழுத்து வந்து, இதுபோன்ற தொல்லைகளுக்கு ஆட்படுத்தியிருக்கிறார்கள். இதன் காரணமாக, அந்த மலைச் சாதி மக்கள் அத்தனை பேரும் வன இலாகாவினுடைய ரேஞ்சர் அலுவலகத்திற்கு ஓடோடி வந்திருக்கிறார்கள். தங்களுடைய



ஆள் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டாரா என்பதுகூடத் தெரியாமல் அவர்கள் கூட்டமாகச் சென்று இருப்பதைக் கண்டு, அந்த வன இலாகா போலீசிடம் சொல்லி. துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் கணேசன் என்கிற ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார். ஆகவே, போலீசார் தவறு செய்த குற்றவாளியைக் கண்டுபிடித்து. அவர்களுக்குக் கடுமையான தண்டனையை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி. மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுக்குப் பேச விருப்பம் இல்லையா? உங்கள் பெயரை அழைத்து ரொம்ப நேரமாகிவிட்டது.

* **திரு. டி. மணி:** மன்னிக்கவும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் வாழப்பாடி என்ற பகுதியில் சந்தனக் கட்டை கடத்தல் தொடர்பாக கலவரம் ஏற்பட்டு துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்திருக்கிறது. சந்தனக் கட்டை கடத்தல் என்பது இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே பல்வேறு பிரச்சினைகளை, சந்தனக்காடு இருக்கின்ற மலைப்பகுதியிலே உருவாக்கி உள்ளது. இதிலே வனத் துறை அதிகாரிகள் எந்த அளவிற்குச் செயல்பட்டு இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்றபோது ரொம்பவும் வேதனை அளிப்பதாக உள்ளது. சந்தனக் கட்டைகளைக் கடத்துவதன் காரணமாக அவர்களை மிருகத்தனமாகத் தாக்குவது அல்லது துன்புறுத்துவது என்பது போன்ற காரியங்கள் எல்லாம் நமக்குப் பொருத்தமில்லாத காரியங்களாகும். வழக்கைப் பதிவு செய்ய வேண்டும். நீதிமன்றத்திலே அவர்களை ஆஜர்படுத்த வேண்டும் என்பதுதான் அதனுடைய வழிமுறை. அதற்கு மாறாக அவரைப் பலமாகத் தாக்கியதன் விளைவாக ஏற்பட்ட சம்பவத்தில் இறந்து போனார் என்று சொல்லி, சாக்கு மூட்டையிலே அவரைக் கட்டி வைக்கக்கூடிய அளவிற்கு விஷயங்கள் போய், அதற்குப் பின்னால் ஏற்பட்ட கலவரத்தில்கூட ஒரு துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. இந்தக் கலவரத்திலே ஈடுபட்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு என்ற நிலை உருவாவதற்கு முன்னால், சாதாரணமாக ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற முறையிலே, யாராக இருந்தாலும் சரி, அவர்கள்மீது லத்தி சார்ஜ் அல்லது இன்ன பிற விஷயங்கள், இதெல்லாம் செய்து முடித்த பிறகு, அதிலேயும் கட்டுப்படாத அளவிற்கு நிலைமை வருகின்றபோதுதான், துப்பாக்கிச் சூடு என்ற நிலைமை சாதாரணமாக ஏற்படும். ஆனால், இந்த விஷயத்தில் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு எல்லாம் நடந்து அதிலே ஒருவர் இறந்து இருக்கிறார்.

இப்படிப்பட்ட ஒரு பதட்டமான நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, என்னுடைய வேண்டுகோள் எல்லாம் துப்பாக்கிச் சூட்டினால் இறந்து போன குடும்பத்திற்கு உரிய நஷ்ட ஈட்டை அரசாங்கம் வழங்க வேண்டும். அதேபோன்று, இந்தச் சம்பவங்கள் நடைபெறுவதற்கு ஏதுவான காரணங்கள் என்ன என்பதைச் சரிவரக் கண்டறிவதற்கு ஒரு சரியான நீதி விசாரணையை நடத்த வேண்டும். அதன் மூலமாகத்தான் குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டறிந்து அத்தகைய குற்றவாளிகளைத் தண்டிக்கவும், முன்மாதிரியாக மீண்டும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நம்முடைய மாநிலத்திலே நடைபெறாமல் இருக்கக்கூடிய அளவிற்கு வழிவகை செய்ய முடியும். எனவே, இதுபோன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், வாழப்பாடியில் நடந்த சம்பவம் மிகவும் வேதனை அளிக்கக்கூடிய சம்பவமாகும். செல்வம் என்பவர் உண்மையிலேயே சந்தன மரம் கடத்தக்கூடிய குற்றவாளியாக இருந்திருந்தாலும்கூட, வனக் காவலர்கள் அவரை அழைத்து வந்து விசாரித்தபோது சில உண்மைகளை அவரிடமிருந்து வரவழைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சற்று துன்புறுத்தியிருந்தாலும், அவருக்கு சற்று போதஷீணம். அதாவது ஞாபகம இல்லாத சூழ்நிலை வந்தபோது உண்மையிலே ஈவு இரக்கம் இருக்கும் என்று சொன்னால், அவரை உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முயற்சித்து இருக்க வேண்டும். அவருக்கு ஞாபகம் தப்பிய சூழ்நிலை வந்தவுடனே சாக்கு மூட்டைக்குள் கட்டி விடுகிறார்கள் என்று சொன்னால், அது மனசாட்சி இல்லாத சம்பவம் என்றுதான் சொல்ல வேண்டும். இதில் அடித்ததைக் கூட ஓரளவிற்கு நியாயப்படுத்தலாம் அல்லது உண்மைகளை வரவழைப்பதற்காகச் செய்தார்கள் என்று வைத்துக்கொள்ளலாம். ஆனால் அவரை பிழைப்பிக்க வைக்க வேண்டும் என்ற சிந்தனையற்றுப் போய் விட்டது என்பது வன்மையாகக் கண்டிக்க வேண்டிய விஷயம். பின்னால் அவரை சாக்குமூட்டையில் கட்டி. அதற்குப் பின்னாலே அதிகாரிகள் வந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று அவர் இப்போது உயிரோடு இருக்கின்றார் என்ற நிலையை நாம் அறியும்போது மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஆனாலும் மொத்தத்தில் இந்தப் பிரச்சினையை அறவே களைந்திருக்கக்கூடிய நிலையில் முதலில் அவர்கள் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றிருந்தால் எந்தப்





பிரச்சினையும் வந்திருக்காது. எனவே, அதற்கு முழுக்க முழுக்கக் காரணமாக அந்த வனச் சரக அதிகாரிகள்தான் இருக்க வேண்டும். இப்போது ஏற்பட்ட இத்தனை பிரச்சினைகளுக்கும் அவர்களே காரணம். எனவே, என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால், இதுபோன்று முழுக்க முழுக்க யார் காரணம் என்று தெரிய வரக்கூடிய சந்தர்ப்பத்திலாவது, இதுபோன்று கஷ்ட நஷ்டங்கள் வரும்போது சம்பந்தப்பட்ட அந்த அதிகாரிகளிடமிருந்து கணிசமான தொகையை வசூலித்து அல்லது வாங்கி, அந்தக் குடும்பத்திற்கு, அரசாங்கத்தினுடைய உதவியோடு அதையும் சேர்த்து கணிசமான உதவியாகக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், வாழப்பாடி அருகே சந்தனக் கடத்தல் சம்பந்தமாக வனத் துறையினர் அழைத்துச் சென்ற செல்வம் என்பவர் தூக்கிலே தொங்கவிடப்பட்டு, அவரைச் சாக்குமூட்டையிலே கட்டி வைத்திருந்ததாகக் காவல் துறையினர் சென்று விசாரிக்கின்ற நேரத்திலே அது வெளிப்பட்டிருக்கிறது. ஒருவர் தவறு செய்கிறார் என்று சொன்னால், அவரை முறைப்படி தண்டிக்க வேண்டிய பொறுப்பு சட்டத்திற்கும், நீதிமன்றங்களுக்கும் இருக்கிறது. எனவே, அதிகாரிகள் - காவல் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், வனத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்த அரசுக்கு நல்ல பெயரை வாங்கித் தர வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு செயல்படுவார்களேயானால், அந்தக் குற்றவாளிகளை எல்லாம் பிடித்து, உரிய முறையிலே வழக்குத் தொடர்ந்து அதன்மூலமாக அவர்களுக்குத் தண்டனையைப் பெற்றுத் தரவேண்டுமே தவிர, அதை விடுத்து, தாங்களே தண்டனையை வழங்குகின்ற நிலை என்று வருகின்றபோது இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நேர்கின்ற நிலை ஏற்படுகிறது. செல்வம் என்பவர் இறந்துவிட்டார் என்கின்ற செய்தியைக் கேட்டு, அந்தப் பகுதி மக்கள் எல்லாம் திரண்டு வந்து, அந்த வனத் துறை அலுவலகத்தைத் தாக்கி, அங்கே இருக்கின்ற பொருட்களை எல்லாம், ஆவணங்களை எல்லாம் எடுத்துச் சூறையாடுகின்ற ஒரு நிலை வந்த காரணத்தினால், அங்கு காவல் துறையினர் சென்று அந்தக் கூட்டத்தைக் கலைக்க வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டதன் பொருட்டு அங்கு கூடியிருந்தவர்களைக் கலைக்கின்றபோது தடியடிப் பிரயோகம்

நடத்தியும். முடியாத ஒரு சூழ்நிலையிலே துப்பாக்கிப் பிரயோகம்
நடத்தி, அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திலே கணேசன் என்ற ஒருவர்
உயிரிழந்து இருக்கின்றார். ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம்
வராத அளவுக்கு தவறான நடவடிக்கைகளை மேற்கொண்டு.
செல்வத்தை அடித்து, சாக்குமூட்டையிலே கட்டி வைத்து, அவருடைய
உயிரைப் பறிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அந்த
வனத் துறை அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதன்
மூலமாக இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம், வருகின்ற காலத்தில்
களையப்பட வேண்டுமென்று சொல்லி, அது போல் இந்தத் துப்பாக்கிச்
சூட்டில் பலியான கணேசன் அவர்களுடைய குடும்பத்திற்கு இந்த
அரசு ஏதாவது ஒரு கணிசமான தொகையை உதவியாக வழங்க
வேண்டும். மீண்டும் இப்படிப்பட்ட தவறுகள் இந்தத் துறைகளின்
மூலம் வராத அளவிற்குக் கண்காணிக்கின்ற பொறுப்பு இந்த அரசுக்கு
இருக்கிறது என்று கூறி, அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு
மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், வாழப்பாடியில் நடைபெற்ற
துப்பாக்கிச் சூட்டில், புழுதிக்குட்டை, பெரியமடவு என்ற ஊரைச்
சேர்ந்த கணேசன் என்பவர் இறந்த தகவல் கிடைத்தவுடன் மாண்புமிகு
முதல்வர் அவர்கள் நேற்று இரவு முழுவதும் சம்பந்தப்பட்ட
அதிகாரிகளோடு தொடர்புகொண்டு விவரங்களையெல்லாம் கேட்டார்.

நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
அவர்களிடத்திலேயும் விவரங்கள் கேட்டு, காலையிலே டில்லிக்குச்
செல்வதற்கு முன்கூட, அரசு அதிகாரிகளிடத்திலே விவரமான
அறிக்கைகள் பெற்று, அந்த அறிக்கைகளைத் தரும்படி
கேட்டுக்கொண்டார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர்
இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஜி. பழனிசாமி, திரு. சொ. கருப்பசாமி.
திரு. இ. கணேசன், திரு. டி. மணி, திரு. சி. வேலாயுதன், திரு. எல்.
சந்தானம் ஆகிய அனைத்து உறுப்பினர்களும் கொண்டு வந்துள்ள
இந்த சிறப்புக் கவன ஈர்ப்பின்மீது அரசுக்குக் கிடைத்த தகவல்களை
இந்த அவைக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*16-4-1997* அன்று காலை 9-15 மணிக்கு சேலம் மண்டல உதவி
வனப் பாதுகாவலர் செல்வராஜ் என்பவர், சேலம் மாவட்டக் காவல்



கண்காணிப்பாளரின் முகாம் அலுவலகத்திற்குச் சென்று வாழப்பாடி
வனச் சரகர் அலுவலகத்தில் சின்னக்குட்டைமடுவைச் சேர்ந்த 30
வயதுள்ள செல்வம் என்பவர் இறந்து கிடக்கிறார் என்று தகவல்
கொடுத்தார்.

முற்பகல் *11-15*

அவரது புகாரின் பேரில் வாழப்பாடி காவல் நிலைய குற்ற எண்
*579/97* ஐ.பி.சி. *174*-வது பிரிவின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது.
செல்வம் சந்தனக் கட்டை கடத்திய வழக்கு சமீபத்தில் நிலுவையில்
இருந்தது என்றாலும், வனக் காவலர் நஞ்சுண்டன் என்பவர்
செல்வத்தைப் பிடித்து வந்ததாகவும் வனத்துறை அலுவலர்களால்
தெரிவிக்கப்பட்டது. வனச் சரக அலுவலகத்தில் செல்வத்தின் உடல்
புகைக்கூண்டினுள் தொங்கிய நிலையில் காணப்பட்டது. சம்பவம்
பற்றி சேலம் வருவாய்த் துறைக் கோட்டாட்சியருக்குத் தெரிவிக்கப்பட்டு,
அவர் பிற்பகல் 3 மணியளவில் வாழப்பாடி வந்துள்ளார். அங்கு
ஏற்காடு தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், அ.தி.மு.க.வைச்
சார்ந்தவர் திரு. பெருமாள் தலைமையில் ஒரு கும்பல் போக்குவரத்தைத்
தடை செய்ததைக் கண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
கூட்டத்தினரை அணுகி, மரணத்திற்குக் காரணமானவர்களைக்
கண்டுபிடித்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்
என்று உறுதி கூறி சமாதானப்படுத்தியும், அவர்கள் போக்குவரத்தை
அனுமதிக்கவில்லை. வருவாய்க் கோட்டாட்சியர் சம்பவ இடமான
வனச் சரக அலுவலகத்தில் செல்வத்தின் உடலைக் கீழே இறக்கிப்
பார்க்க, செல்வம் உயிருடன் இருப்பது தெரியவந்தது. உடனே,
கோட்டாட்சியர் அவரை சேலம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக
அனுப்பி வைத்தார். அச்சமயத்தில் அங்கு கூடி இருந்த கூட்டத்தினர்,
அவர்களது கையில் உருட்டுக் கட்டை, அரிவாள், கல் ஆகியவற்றை
ஏந்திக் கொண்டு, அரசு அதிகாரிகள்மீது சரமாரியாகக் கல் எறிவதில்
ஈடுபட்டனர். கோட்டாட்சியர் கூட்டத்தினரை எச்சரித்தும்கூட, அதைக்
கேளாமல் அரசு அதிகாரிகளைத் தாக்க முன்னேறி வந்தவர்களை
கோட்டாட்சியர் மீண்டும் எச்சரித்துள்ளார். எச்சரிக்கை எந்தப் பலனும்
அளிக்காததால், காவல் துறையினர் 8 கண்ணீர்ப் புகைக் குண்டுகளை
ஒன்றின்பின் ஒன்றாக முறையான எச்சரிக்கையுடன் கூட்டத்தினர்
மீது வீசினர். இருப்பினும், கும்பல் கலையாமல், கல்லெறிச் சம்பவத்தில்
தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. இக்கல்லெறிச் சம்பவத்தினால் காவல்
துறை மற்றும் வருவாய்த் துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்கள்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 17

அ. பெரியசாமி, துணைக் காவல் கண்காணிப்பாளர். ஆத்தூர்: சி. துரைராஜ், வட்டாட்சியர், சேலம்; சுகுமார், பயிற்சி உதவியாளர். வாழப்பாடி மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த 9 காவலர்களும், கோட்டாட்சியர் அலுவலக உதவியாளர் ஒருவரும் காயம் அடைந்ததால், முன்னேறி வரும் கல்லெறி கும்பலைக் கலைக்க கோட்டாட்சியர் உத்தரவுப்படி 5 ரவை குண்டுகள் வானத்தை நோக்கிச் சுடப்பட்டன. இருப்பினும், கலகக் கும்பல், அரசு அதிகாரிகளைத் தாக்கும் முகத்தான் மிக அருகில் நெருங்கிவிட்ட காரணத்தாலும், அரசு அதிகாரிகள் உயிருக்குப் பாதுகாப்புத் தேடும் நிலை ஏற்பட்டதாலும், கலவரம் மேலும் தொடராமல் தடுக்கவும், தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கோட்டாட்சியரின் உத்தரவுப்படி காவல் துறையினர், கூட்டத்தினர்மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பெரியகுட்டைமடுவைச் சேர்ந்த வரதனின் மகன் 30 வயதுள்ள கணேசன் குண்டடிபட்டு சம்பவ இடத்திலேயே மாலை 4-25 மணிக்கு இறந்தார். தடியடியில் 10 பேர் காயம் அடைந்தனர். கணேசன் பிரேதம் சேலம் மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. கோட்டாட்சியரின் புகாரின் பேரில் வாழப்பாடி காவல் நிலைய குற்ற எண் 580/97, இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 427, 332, 336 மற்றும் 307 ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிகிச்சைக்குப் பிறகு செல்வத்தின் உடல்நிலை முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆய்வாளரிடம் அவர் அளித்த வாக்குமூலத்தின்பேரில், வனத் துறை வனக் காப்பாளர் நஞ்சுண்டன், வனக் காவலர் காந்தி ஆகியோர்மீது வாழப்பாடி காவல் நிலைய குற்ற எண் 581/97, இந்திய தண்டனைச் சட்டம்—342 மற்றும் 307-வது பிரிவின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து வனக் காவலர் நஞ்சுண்டன் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளார். மற்றொரு வனக் காவலர் காந்தி தலைமறைவாக உள்ளார். இவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூடுதல் காவல் பாதுகாப்பும், ரோந்துப் பணிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நிலைமை இப்பொழுது கண்காணிக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் அரசுக்கு முழுத் தகவல் கிடைப்பதற்காகவும், மேல் நடவடிக்கைக்காகவும் மாவட்டக் கூடுதல் நீதிபதியான மாவட்ட வருவாய் அதிகாரியை விசாரணை அதிகாரியாகவும் நியமித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதுபோல் குண்டடிபட்டு இறந்த கணேசன் குடும்பத்திற்கு முதலமைச்சருடைய நிவாரண



1997 ஏப்ரல் 17] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நிதியிலேயிருந்து உடனடியாக ரூ.50,000 வழங்கப்படுவதற்கு ஆணை இடப்பட்டுள்ளது. காயமுற்றோருக்கு, காயத்தின் தன்மைப் பொறுத்து நிதி வழங்கப்படும்.

## 3. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு - தொடர்ச்சி

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நேற்றையதினம் நடந்த 51-வது எண் மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரின் பதிலுரை. (குறுக்கீடு) அது அவர் பேசி முடித்ததற்குப் பிறகு. It is yesterday's left-over business. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை சார்பில் நாங்கள் முன்வைத்த மானியக் கோரிக்கையின்மீது அதற்கான விடையுரையை வழங்குவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'தென்னவளே பாரிற் சிறந்தவளே என்றுமே
என்னவளே நெஞ்சில் இனிக்கும் தமிழ் என்னும்
பெண்ணவளே கூப்புகிறேன் கை'

என்று தமிழ் அன்னையையும்,

'என்னை நன்றாகக் கலைஞர் படைத்தார்
அன்னைத் தமிழுக்கு அணி செய்யுமாறே'

என்ற 'மந்தர' மொழியையும் வாழ்த்தாகச் சொல்லி இன்றைய மானியக் கோரிக்கைக்கு என்னுடைய விடையை இங்கே வழங்க விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் உட்பட 17 பேர் நேற்று இதன்மீது உரையாற்றினார்கள். அவர்களில் 9 பேர் தமிழ் வளர்ச்சித் துறை சார்பாகத் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் எடுத்து வைத்த கருத்துகளுக்கு விடை சொல்லும் முன்னால் தமிழுக்கு இருக்கிற பெரிய சிறப்புகளை உறுப்பினர்களும் உணர்ந்து, இந்த நாடும் உணர்ந்து, உலகமும் உணர்ந்து இருக்கிறது என்பதை நாம் யாரும் மறந்துவிட முடியாது. வேறுபாடாக வெளிநாடுகளிலும் இதை உணர்ந்தவர்கள் என்றும், வட மாநிலங்களிலும் இதை உணர்ந்தவர்கள் என்றும், தமிழகத்தில் இதைப் புரிந்தவர்கள் என்றும் இருக்கின்ற எண்ணற்ற உறவுகள் காரணமாகத்தான் தமிழுக்கு இருக்கிற ஏற்றத்தை, இழந்துவிட்ட நிலைகளை, மீண்டும் அதற்குரிய இடத்தில் வைக்க வேண்டும் என்ற முயற்சியில் இந்தத் துறை இறங்கியிருக்கிறது.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

நம்முடைய பெருமதிப்பிற்குரிய வள்ளலார் அவர்கள் எப்படி தான் தமிழ்த் தாய்க்குப் பிறந்த மகன் என்று பெருமை கொள்கிறார் என்பதைப் பார்த்தால் அதுவே நமக்கு ஊக்கம் தருவதாக இருக்கும். அவர் குறிப்பிடுகிறார் :—

'இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் பொழுதுபோக்கையும் உண்டுபண்ணுகிற பிற பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாமல் பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய் சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழியாகிய தமிழ் ஒன்றினிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழியால் பலவகை தோத்திரப் பாடல்களைப் பாடுவித்து அருளினீர்' என்று தெய்வத்தைப் பார்த்து மனம் உருகிப் பாடுகிறார். அந்த அளவுக்குத் தமிழினுடைய பெருமையை அவர் உணர்த்தியிருக்கிறார். இது, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல.

அதே நேரத்தில் நம் அனைவராலும் போற்றத்தக்க பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தமிழ்தான் இந்தியா முழுவதையும் ஆட்கொண்ட மொழி என்பதைத் தெளிவுபடுத்தி இருக்கிறார் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போலவோ, மாண்புமிகு



உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தக் கோணத்திலோ நான் இதை எடுத்து வைக்கவில்லை. நான் ஏற்கெனவே ஒருமுறை குறிப்பிட்டதைப்போல, புறநானூற்றிலே-

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்

தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும் '

என்று சொல்லப்படுகிற எல்லை, தமிழ் ஆண்ட முழு எல்லையாக இருந்தது என்பதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் உறுதிப்படுத்துகிறார் என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

``Historically it was the Tamil speaking people who had spread all over India and they were speaking Tamil as their mother-tongue beginning from Kashmir to Cape Comerin" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பிட்டது மட்டும் அல்லாமல், `So, the greater India concept was because of the Tamils` என்றும் குறிபபிட்டிருக்கிறார். ஒரே இந்தியாவைக் கண்டவர்களே தமிழர்கள்தான் என்பதை அவர் குறிப்பிடுவதைப் போலவே, அன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போலவே, அதே உணர்வோடும் இந்தியத்தின் ஒருமைப்பாட்டுக்குள், இறையாண்மைக்குள் கட்டுப்பட்ட ஒரு தன்னாட்சித் தன்மை படைத்த தமிழகம் என்ற முறையில் இந்தக் கருத்துக்களை எடுத்து வைக்க வேண்டியது என்னுடைய கடமையாகும். மொழியை நாம் மட்டுமே ஏதோ கடுமையாகக் கையாள்வது போலவும், ஒரு வகையிலே அது ஒரு வேகமான, ஒரு வெறித்தன்மை உடையதைப் போலவும் சிலபேர் அவ்வப்போது சுட்டிக்காட்டுவதை நாங்களும் பார்க்கிறோம்; கேட்கிறோம். ஆனால் அவரவர்களுடைய மொழியை எப்படிப் பாராட்டுகிறார்கள் என்பதை ஒப்புநோக்கினால் நாம் அதிலே பின்தங்கியிருக்கிறோம் என்பதைத்தான் சொல்ல வேண்டும். கன்பூசியசு (Confucious) என்ற சீன தத்துவ ஞானியைப் பார்த்து "பெரியீர் ! சமுதாயத்தை ஆளும் பொறுப்பு உம்மிடம் விடப்பட்டால் நீர் என்ன செய்வீர் ?" என்று கேட்டதற்கு அவர் சொன்னார்: "நான் முதற்கண் என் மொழியைத் திருத்துவேன்" என்று கூறித்தான் விளக்கம் கொடுத்திருக்கிறார். 'I will correct the language. If language is not correct; what is said is not, what is meant' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதுபோல அயர்லாந்து நாட்டினுடைய விடுதலை வீரனாகத் திகழ்ந்த டீ'வேலராவிடம், "உங்களுக்கு விடுதலை தருகிறோம் ஆனால் உங்கள் மொழியை நீங்கள் பேசக் கூடாது, இது தேவையா: அல்லது சிறைக் கம்பிகளுக்குள் அடைத்து விடுவோம், அப்போது உங்கள் மொழியைப் பேசலாம், அது தேவையா ?" என்று கேட்டபோது அவர் உடனே இறுத்த விடை "என்னைச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தள்ளுங்கள், என் மொழியைப் பேசுகிற உரிமை எனக்கு வேண்டும்" என்றுதான் அவர் குறிப்பிட்டார். எனவே, எந்த நிலையிலும் அவரவர்களுடைய மொழியைப் போற்றுகிற அதே உணர்வுகள் இருக்கிற காரணத்தால்தான் இங்கே தொன்மை மொழிகளுக்குத் தொன்மை மொழியாக, அதேநேரத்தில் இன்றைக்கு இருக்கிற இமயம் வரைக்கும் கொண்டு செல்கிற புதுமை மொழியாக இருக்கிற தமிழை நாம் போற்ற வேண்டிய, அதற்குரிய இடத்தைத் தரவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்பதை உணர்த்துவது எங்களுடைய கடமை.

இடைக்காலத்தில் இந்த ஆட்சி தொடங்கிய 13-5-1996-லிருந்து இன்றைக்கு வரைக்கும், தொடக்கத்திலே போன முறை மானியக் கோரிக்கை வைப்பதற்கு முன்னாலும், அதையொட்டியும், ஏராளமான இதழ்களும், பல பேரும் எங்களைக் கிண்டல் செய்தது உண்டு; கேலி செய்தது உண்டு; அதேநேரத்தில் இந்த மொழி உரிமையையே கொச்சைப்படுத்தியதும் உண்டு. ஆனால் எனக்கு இருக்கிற மகிழ்ச்சி எல்லாம் இந்த முறை அந்தச் சூழல் இல்லாமல் கடுமையாகத் தாக்கியவர்கள்கூட எங்களுடைய தருக்கங்களைப் புரிந்துகொண்டு, உண்மை நோக்கங்களை ஒப்புக்கொண்டு, நாங்கள் அவசரப்பட்டு விட்டோம், தமிழ்த் துறை எடுக்கிற முயற்சிகளைப் பாராட்டி வரவேற்கிறோம் என்ற அளவுக்கு இன்றைக்கு ஒரு இனிமையான சூழல் எழுந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கருத்து வேறுபாடுகள் இல்லாமல், இதிலே நாங்கள் வேறுபடுகிறோம் என்று சொல்வதற்கான வாய்ப்பே இல்லாமல், எந்தக் கட்சியும் வேறுபாடு இல்லாமல் தமிழை நோக்கி இந்த அரசு எடுக்கிற எல்லா முயற்சிகளுக்கும் எங்களுடைய முழு ஒத்துழைப்பு உண்டு என்பதை ஓங்கிய குரலிலே எடுத்துச் சொல்லுவதைப் பார்க்கிறோம். அதேநேரத்தில் இந்த முயற்சிகளை நாங்கள் மேற்கொள்கிறபோது ஏளனங்களைப் பற்றியோ, கேலிகளைப் பற்றியோ, நாங்கள் கவலைப்பட மாட்டோம். அப்படிக் கவலைப்படத் தேவையில்லை. காரணம் மறைமலை அடிகள் இந்த முயற்சியை மேற்கொண்ட காலத்தில்





இந்தக் கேலி எந்த அளவுக்கு உச்சத்தில் இருந்தது என்பதை அன்றைய கால நூல்களை—இதழ்களைப் படித்துப் பார்த்தால் தெரியும். ஆனால் அவருடைய மையக் கருத்தை, அவருடைய தனித் தமிழ்ப் போக்கை ஏற்றுக்கொண்ட பிறகு தான்—அதைத் திராவிட இயக்கம் கையில் எடுத்துக்கொண்ட பிறகுதான் பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டது என்பதை யாரும் வரலாற்றிலிருந்து மறந்து விட முடியாது. அப்படி அந்த வரலாற்றினுடைய வடிவமாகத்தான் இராமையா என்ற பெயர் படைத்த நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அன்பழகன் ஆனார்; சாத்தையா தமிழ்க்குடிமகன் ஆனார். இப்படி எண்ணற்ற மாறுதல்களை உண்டாக்கிய பெருமை, அதற்கு வித்திட்ட பெருமை மறைமலை அடிகளைச் சாரும். அந்த மறைமலை அடிகளுக்கு மிகப் பெரிய அளவிலே இன்றைக்குச் சிறப்புச் சேர்த்து இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரலாற்றில் நிலைத்த புகழுக்கு உரியவர் ஆவார். காரணம், எங்களுடைய பெயரை நாங்கள் இட்டுக்கொள்வதற்குக் காரணமாக இருந்தவர் மறைமலை அடிகள். அந்த மறைமலை அடிகளின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவர்களுடைய குடும்பத்தாருக்கு 20 லட்சம் ரூபாயைப் பரிவுத் தொகையாக வழங்கி இன்றைக்கு வரலாற்றில் பொன் எழுத்துக்களில் பொறிக்கக்கூடிய பெயரைப் பெற்றுக் கொண்டவர் மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்பதை (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) யாரும் வரலாற்றிலிருந்து மறைத்து விட முடியாது. அப்படிப்பட்ட மறைமலை அடிகளைப் பற்றி நான் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை, நேரம் இன்மை காரணமாக. தமிழ்த் தென்றல் திரு. வி.க. அவர்கள் மிக அருமையாகக் கூறினார். அதுதான் பொருத்தமாக இருக்கும். "தென் நாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக்கு உண்டு. அவர் தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும் தென் நாட்டை விழிக்கச் செய்தன. தென் நாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும், மரமும் முழங்கும்" என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், "அடிகள் பேச்சு பல பேச்சாளர்களைப் படைத்தது; எழுத்து பல எழுத்தாளர்களை ஈன்றது; நூல் பல நூல் ஆசிரியன்மாரை அளித்தது. அடிகளே தென் நாடு, தென் நாடே அடிகள் என்று கூறல் மிகையாகாது" என்று குறிப்பிட்டார். அந்த அளவுக்கு ஆற்றல் மிக்க மறைமலை அடிகள் நூல்களை நாட்டுடைமையாக்குகிற வாய்ப்பை, அவருடைய வழித்தோன்றலாக இருக்கின்ற பாவாணருடைய நூல்களை நாட்டுடைமையாக்குகிற வாய்ப்பை, இரண்டு பேரையும் பாராட்டி, தனித் தமிழ்

இயக்கத்திற்காகப் பாடுபட்ட, தமிழ் இயக்கத்தை முன் நடத்திச் சென்ற பாவேந்தருடைய பாடல்களை நாட்டுடைமையாக்குகிற வாய்ப்பை இந்த அரசு தொடர்ந்து பெற்று வந்திருக்கிறது, இந்த நாட்டுக்குத் தந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

அதேநேரத்தில் அந்தக் குடும்பத்திற்குப் பரிவுத் தொகை வழங்குவது மட்டுமல்ல; நம்முடைய வடசென்னைப் பகுதியிலே போய் மறைமலையடிகள் பெயரிலே உள்ள நூலகத்தைப் பார்த்தால் மிகுந்த வியப்பாக இருக்கிறது. அடிகள் பயன்படுத்திய 4,500 நூல்கள் அந்த நூலகத்திலே இடம் பெற்றிருக்கின்றன. அதில் வியப்பு என்னவென்றால், அவர் பயன்படுத்திய நூல்களில் 500 நூல்கள் தமிழ் நூல்கள். 4,000 நூல்கள் ஆங்கில நூல்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த அளவிற்கு ஆழ்ந்த புலமையோடு, தன்னுடைய ஒவ்வொரு தமிழ் நூலுக்கும் ஆங்கிலத்திலே ஒரு முன்னுரை எழுதி, தன் கருத்துக்களை இங்கே மட்டுமல்ல; உலகெங்கிலும் உள்ள எல்லா இனத்தவரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உயர்நோக்கோடு அதைச் செயல்படுத்தினார் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

எனவே, இந்தப் பரிவுத் தொகை வழங்குகிற அதேநேரத்தில், மாண்புமிகு முத்தமிழறிஞர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கையாக நாங்கள் வைத்திருக்கிறோம். அதை அவருடைய ஒப்புதல் பெற்று, பின்னால் செயல்படுத்த விரும்புகிறோம். இந்த மறைமலையடிகள் நூலகம்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன கேட்கிறீர்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டரா, கிளாரிஃபிகேஷனா? திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே கூறுகிறபொழுது, கிண்டலும் கேலியும் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். கிண்டல் என்பது தமிழ் வார்த்தையா என்பதை முதலில் அறிய விரும்புகிறேன். அது ஒன்று. இரண்டாவது, மறைமலையடிகள் அவர்கள் பல ஆங்கில நூல்களைப் பயன்படுத்தி தன்னுடைய கருத்துக்களெல்லாம் ஆங்கில நாட்டுக்கு, மற்ற எல்லா நாடுகளுக்கும் போக வேண்டுமென்று விரும்பியதைப்போல, கிண்டல்



என்பது அந்த ஆங்கில வார்த்தையாக இருந்தாலும்கூட அதையும் நாம் நம்முடைய தமிழ் வழக்கிலே பயன்படுத்தலாமா என்பதை....

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதுபோன்று திசை திருப்ப வேண்டாம். கிண்டல் என்பது, மாலையில் ரவா உப்புமாவைக் கிண்டிப் பார்த்தால் உங்களுக்குத் தெரியும். எனவே, கிண்டல் என்பது நல்ல தமிழ்ச் சொல். அதுபற்றிக் கவலைப்பட வேண்டாம். (குறுக்கீடு) யார் சொன்னது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் மாலையில் கிண்டிப் பார்த்துத் தெரிந்து கொள்ளச் சொன்னார் அல்லவா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** துணைத் தலைவர் அவர்களே, அவர் கிண்டர் கார்டனிலே இருக்கிறார் என்று நினைக்கிறேன். அதனாலேதான் கிண்டிக்கொண்டிருக்கிறார். இடையிலே தொய்வு ஏற்பட்டுப் போய்விடும்; தேவையில்லாமல் குறுக்கிட வேண்டாம்.

அப்படிப்பட்ட அந்த நூலகத்திற்கும் இப்பொழுது நாம் நம்முடைய அறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலிருந்து தொடர் மானியமாக பத்தாயிரம் ரூபாய்தான் தருகிறோம். உள்ளபடியே அந்த நூலகத்தைப் பேணுவதற்கே பல ஆயிரக்கணக்கான ரூபாய் ஆகும். எனவே, அதையும் இந்த அரசு மனத்தில் வைத்துக் கொண்டு, மாண்புமிகு கலைஞரவர்களுடைய ஒப்புதலோடு, உரிய சிறப்பை அதற்கு வழங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அவருடைய பல்லாவரம் இல்லம், அவராலேயே திட்டமிட்டுக் கட்டப்பட்ட அந்த இல்லம் ; முறைப்படி பேணப்படுவதற்கும் இந்த அரசு உரிய முயற்சிகளைச் செய்யும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைமலையடிகள் அவர்களே, அவரே தன்னுடைய நூலில்—இது அவர் கைப்பட எழுதிய அவருடைய நூல். அவருடைய நூல் எல்லாம் தொட்டு எழுதுகிற தூவலால் தொட்டு—உங்களுக்குத் தெரியும், அப்பொழுது தொட்டுத்தான் எழுத வேண்டும் ; அந்தத் தூவலால் எழுதப்பட்ட இந்தக் கட்டுரை.

"தமிழர் மதம்" என்ற நூலில் அவரே ஒரு அருமையான கருத்தை நமக்கு வழங்கியிருக்கிறார்:

[முனைவர் மு. தமிழ்க்குடிமகன்] [1997 ஏப்ரல் 17

'நம் தமிழர்கள் ஈகை அறங்களை அறவே மறந்து விட்டார்கள். தமிழ் கற்பார்க்கும், தமிழ் நூல் வரைவார்க்கும் உதவி புரிந்தவரைக் காண்பது அரிதிலும் அரிதாகி விட்டது. துறந்தாரையும், துவ்வாதவரையும் கண் எடுத்துப் பார்ப்பவரும் இல்லை. அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருந்துயர் களைவார் அற்றே போயினர்' என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார். இல்லை, இல்லை. நீங்கள் அன்றைக்கு ஆதங்கப்பட்டாலும், உங்களையும் பார்த்துப் பாராட்டி, வாய்ப்புத் தந்து, வாழ்த்துவதற்கு கலைஞர் அவர்களுடைய அரசு என்றைக்கும் அணியமாகக் காத்திருக்கிறது என்பதைத்தான் இங்கே அவருக்குக் காணிக்கையாக்க விரும்புகிறோம்.

அதேநேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம், அரசு அமைப்பதற்கு முன்னால் தேர்தல் அறிக்கையிலே சொல்கிற செய்திகளை ஏதோவொரு ஆர்வத்தின் காரணமாக, ஒரு ஆரவாரத்தின் காரணமாகச் சொல்வதில்லை. தமிழ் வளர்ச்சித் துறையை மட்டும் எடுத்துக் கொண்டால், தமிழ் மேம்பாட்டுத் திட்டம் என்று 1996-வது ஆண்டிலே தரப்பட்ட தேர்தல் அறிக்கையை நான் மீண்டும் உங்களுக்குப் படித்துக் காண்பிக்க விரும்புகிறேன்.

கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, இடையில் நிறுத்தப்பட்ட தமிழ்நாட்டு வரலாற்றினை எழுதி வெளியிடும் முயற்சி தொடங்கப்படும். மொழி ஞாயிறு பாவாணர் தலைமையில் தொடங்கப்பட்ட அகர முதலித் துறை, புத்துயிர் தந்து செயல்படுத்தப்படும். 1956-இல் சட்டமாக்கப்பட்டு, இதுவரை பல அரசாணைகள் பிறப்பித்தும் ஆட்சிமொழிச் சட்டம் முழுமையாக நடைபெறவில்லை. அதற்கு ஆவன செய்யப்படும். சுருக்கமாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். கோயில்கள், நீதிமன்றங்கள் ஆகியவற்றிலும் தமிழைப் பயன்படுத்தி, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலையை உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உலகத்தின் பல பகுதிகளில் தமிழ் மொழி பேசுவோர் பரந்து காணப்பட்டாலும், தமிழை அவர்கள் சிறப்பான முறையில் பயில்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, அதற்கு ஆவன செய்யப்படும். தமிழகத்தில் கல்வி பயிலும் அனைவரும் மழலையர் பள்ளி முதல் 5-ஆம் வகுப்பு வரை தமிழை ஒரு பாடமாகப் படிக்குமாறு வலியுறுத்தப்படும். மொழிச் சிறுபான்மை உரிமைகளை பாதிக்காமல், ஆங்கிலப் பள்ளிகளிலும் தமிழுக்கு முதலிடம் அமையுமாறு கல்வித் திட்டம் வகுக்கப்படும் என்பது 1996-ஆம் ஆண்டினுடைய தேர்தல் அறிக்கை. உறுப்பினர்கள் அனைவருக்கும்



1997 ஏப்ரல் 17] [முனைவர் மு. தமிழ்க்குடிமகன்]

நன்றாகத் தெரியும். இவை அத்தனையையும் இந்த அரசு இந்த 11 மாதத்திற்குள் நிறைவேற்றியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தேர்தல் அறிக்கையில் நிறைவேற்றப்படுவதற்கு, புதியதாக நாங்கள் கோரிக்கை வைத்தால்தான் முடியும். அந்த அளவிற்குக் கழக அரசு ஒவ்வொன்றையும் கவனித்து ஆவன செய்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-35*

எடுத்துக்காட்டுக்குச் சொல்லப் போனால், வரலாற்று நூலைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே அதையும் தொடங்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் அவர்களைத்தான் சாரும். 1970-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16-ஆம் நாள் அறிஞர் மு.வ. அவர்களைக் கொண்டு இந்த வரலாற்று நூலை எழுதுகிற குழு தொடங்கப்பட்டது. அந்த அடிப்படையில் தொல்பழங்காலம், அரசியல் வாழ்வியல் என்று சொல்லப்படுகிற சங்ககாலம், பல்லவர், பாண்டியர் காலத்தின் இரண்டு தொகுதிகள் இன்றைக்கு வரைக்கும் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஒருமுறை ஆட்சி ஏறுகின்றபோது வேகமாகப் பணிகள் நடக்கின்றன. இடையில் மற்றொரு ஆட்சி வருகிறது, தொய்வு ஏற்படுகிறது. இது எல்லாத் துறைக்கும் பொருந்தும். அது என்னுடைய துறையில் அதிகமாகவே பொருந்தும். அப்படிப்பட்ட நிலையில், இப்போது சோழப் பெருவேந்தர் காலம். காரணம், பிற்காலத்தில் ஒரு பொற்காலத்தை உருவாக்கிய ராஜராஜ சோழனைப் போல இந்த இருண்ட காலத்திற்குப் பின்னால், இந்தத் தேர்தலுக்குப் பின்னால், தமிழகத்தில் ஒரு பொற்காலத்தை, இந்தியாவினுடைய பொற்காலத்தை உருவாக்குகின்ற நோக்கிலும் செயல்படுகின்ற * முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் வெளியிடப் போகின்ற நூல், அவருக்கே உரித்தான, பொருத்தமான சோழப் பெருவேந்தர் காலம். எனவே, ராஜராஜ சோழன் கால வரலாறு, அறிஞர் அண்ணாவினுடைய பிறந்த நாளிலும், அதனுடைய பிற்பகுதி தமிழ்த் திருநாளான தை முதல் நாளிலும் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்த அடிப்படையில் முதல்வர் அவர்கள் இந்த நூல்களை வெளியிடுவதற்காக 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

அதேபோல, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி. இதைத் தொடங்கியவரும் நம்முடைய முதல்வர் அவர்கள்தான். 8-5-1974-ல் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. தேவநேயப் பாவாணர் அவர்களே இயக்குநராக இருந்தார். அவருடைய காலத்திற்குப் பின்னால், மிசா நெருக்கடிகள், ஆட்சி மாற்றங்கள். எனவே, அதனால் ஏற்பட்ட தொய்வில் 23 ஆண்டுகாலத்தில் இரண்டே இரண்டு தொகுதிகள் வந்திருக்கின்றன. அவருடைய திட்டப்படிப் பார்த்தால் 31 தொகுதிகள் வர வேண்டும். இன்னும் ஒரு 100 ஆண்டுகாலமாகும். ஆனால், முதல்வர் கலைஞர் அவர்கள் இதில் தொய்வு ஏற்படக்கூடாது என்பதற்காகக் கடந்த வரவு-செலவுத் திட்டத்தின்போது 4 இலட்சம் ரூபாய் நிதியாக ஒதுக்கித் தந்தது மட்டுமல்லாமல், என்ன எஞ்சியிருக்கிறது என்று பார்த்து, இந்த நான்கு ஆண்டுகாலத்திற்குள் அனைத்துத் தொகுதிகளும் முடிக்கப்பட வேண்டுமென்று கட்டளை பிறப்பித்து இன்றைக்கு வெகு விரைவில் வெளியிடுவதற்கு மூன்றாவது தொகுதி தயாராக இருக்கிறது என்பதைப் பெருமையுடன் படைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில், இப்படிப்பட்ட திட்டங்களை முந்தைய ஆட்சிகள் தருகின்றபோது என்ன நிலை என்று சொன்னால், ஒரு வரியை மட்டும் முந்தைய ஆட்சியினுடைய வரவு-செலவுத் திட்டத்திலிருந்து சுட்டிக்காட்ட வேண்டும், அதிக நேரம் எடுக்காமல்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

“தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிப் பணிகளை முடிப்பதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது” என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது நிதியா, ஒதுக்கமா, இல்லை ஒதுக்கப்பட்ட நிதியா என்பதை நாடு அறியும் என்பதை மட்டும் சுட்டி அந்த அளவோடு அதை நிறுத்துகிறேன்.

ஆட்சிமொழியைச் செயற்படுத்துவதற்கு 40 ஆண்டுகாலம், 1956-வது ஆண்டில் தொடங்கி, இந்த 40 ஆண்டு காலமாக முறைப்படிச் செயற்படுத்தப்படவில்லையென்ற ஆதங்கம் அனைவருக்கும் உண்டு. அந்த வகையில் கடந்த முறையே முதல்வர் கலைஞர் அவர்கள் 500 தட்டச்சுப் பொறிகளை வழங்கினார்கள். அத்தனை பொறிகளும் தலைமைச் செயலகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. காரணம், 65 விழுக்காடு தமிழ் மொழி, தமிழில் தட்டச்சுப் பொறிகள் இருக்க வேண்டுமென்ற நிலைமைக்கு நூற்றுக்கு நூறு தமிழ் மொழி இருக்க வேண்டுமென்ற தலைமைச் செயலகத்தில், 25 விழுக்காடுதான் தமிழ்



மொழி, நாங்கள் இதைத் தொடங்குகிறபோது இருந்தது. ஆனால், இப்போது 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் உள்ளே தரப்பட்டு, 500 ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகள் வெளியே எடுக்கப்பட்டிருக்கின்றன. வெளியே எடுக்கப்பட்டதையும் விசைப் பலகையை மாற்றி, ஆங்கில விசைப் பலகையை மாற்றி, தமிழ் விசைப் பலகையாக மாற்றுவதற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் 10 இலட்சம் ரூபாயை நிதியாகத் தந்திருக்கிறார். அதுமட்டுமல்ல, இதோடு நிற்கவில்லை. மாவட்ட முதன்மை அலுவலகங்களில் 75 விழுக்காடு ஆட்சிமொழி பயன்பாடு இருக்க வேண்டும். அதே நேரத்தில் தமிழகமெங்கும் இருக்கின்ற சார் நிலை அலுவலகங்களில் நூறு விழுக்காடு ஆட்சிமொழிபயன்பாடு இருக்க வேண்டும். எனவே, அதற்கே எங்களுக்கு இன்னும் ஒரு 10 ஆயிரம் அலுவலகத்திற்கு வேண்டியிருக்கிறது. ஆனாலும், முதல்வர் அவர்கள், இந்த ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளை, விசைப் பலகையை மாற்றுவதன் வாயிலாக ஒரு 500 அதோடு மேலும் ஒரு 500 தட்டச்சுப் பொறிகளுக்கு மீண்டும் ஒரு 40 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, ஆட்சிச் சொல்லகராதி. 89 வகையான அகராதிகள் இருக்கின்றன, சிறு சிறு பதிப்புகளாக, சிறு சிறு துறைவாரியாக. ஒரே அகராதியும் இருக்கிறது. 1983-லே வெளிவந்ததைப் புதுப்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. முதல்வர் அவர்கள், `நீங்கள் புதுப்பியுங்கள், எவ்வளவு தொகை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளுங்கள்' என்று கட்டளையிட்டிருக்கிறார்கள். அந்தப் பணியும் நடந்துகொண்டிருக்கிறது.

அதேநேரத்தில், கோவில்களில் தமிழில் அர்ச்சனை வர வேண்டும். நேற்றுக்கூடச் சொன்னார்கள். “தமிழிலும் அர்ச்சனை” என்று. இதை நான் அதிக நேரம் விளக்கக்கூடாது, ஆனாலும் சொல்கிறேன்.

முற்பகல் 11-40

‘உம்’ என்பதிலே இழிவுச் சிறப்பு உம்மையும் உண்டு; உயர்வுச் சிறப்பு உம்மையும் உண்டு. “தமிழிலும் அர்ச்சனை செய்வார்கள்” என்று சொன்னால், அது தமிழுக்குத் தரப்படுகிற முதல் தரமான இழிவு என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. எனவே, அந்த இழிவைப் போக்குவதற்கு இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக தமிழில் அர்ச்சனை

[முனைவர் மு. தமிழ்க்குடிமகன்] [1997 ஏப்ரல் 17

செய்யப்படும் என்று தமிழிலும், அதேநேரத்தில் வடமொழியில் அர்ச்சனை செய்யப்படும் என்று வடமொழியிலும் எழுதி வைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு *முதல்வர் அவர்கள் ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதற்காகத்தான் 150 தமிழ்ப் புலவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறார்கள். வெகு விரைவிலேயே—நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட ஒரு பாட்டைப் பாடிக் காண்பித்தார்கள். பல பேரும் சுட்டிக்காட்டினார்கள். வெகு விரைவில்—எல்லாக் கோவில்களிலும் தேவாரமும், திருவாசகமும், திருவாய்மொழியும், நாலாயிர திவ்வியப்பிரபந்தமும் ஓதுகிற காட்சிகளை இந்த நாட்டு மக்கள் காணப் போகிறார்கள் என்பதைப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், கோலாலம்பூரிலே இருக்கின்ற மாரியம்மன் கோவிலிலேயே தமிழிலே ஓதுகின்றபோது, நாம் இன்னும் அதிலே பின்தங்கியிருக்கிறோம் என்று சொன்னால், அவர்கள் பார்த்து நகைப்பதற்கு இந்த தாய்த் தமிழகம் இடம் தரக்கூடாது என்பதையும் நாம் மனதில் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் உலகத்தின் பிற பகுதிகளுக்கு என்ன சிறப்புச் செய்ய வேண்டும் என்னும்போது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒன்றை அறிவித்தார்கள்; மொரீசியஸ் நாட்டை முதற்கண் எடுத்துக்கொண்டோம். அவர்கள் ஏற்கெனவே அவர்களுடைய கிரியோலி மொழியில் எழுதி வைத்துக்கொண்டு, தேவாரப் பாடல்களைப் பாடுகிறார்கள். திருவாசகப் பாடல்களைப் பாடுகிறார்கள். ஏனென்றால் தமிழில் எழுதி வைத்துக்கொண்டு படிக்க முடியாது, அந்தத் தமிழர்களால். தேவாரம் தெரிகிறது; ஓத வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது, ஆனால் தமிழில் எழுதமுடியவில்லை. இந்தக் குறையைக் களைவதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மொரீசியசுக்கு முறைப்படி மடல் எழுதி, அங்கேயிருக்கிற துணைப் பிரதமர் அவர்கள் எங்களுக்கு விடையெழுதி, இதற்கு விரைவில் இங்கிருந்து குழு செல்கிறபோது, அவர்களுக்குத் தேவையான நூல்கள், ஒலி நாடாக்கள், ஒளிப் பேழைகள், இன்னும் அவர்களுக்கு என்னென்ன தேவை என்று கேட்கிறார்களோ, அத்தனையும் தருவதற்கு இந்த அரசு தாராளமாக நிதியுதவி வழங்கத் தயாராக இருக்கிறது. இந்தத் திட்டம் உலகத்தின் அத்தனை நாடுகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இவை அத்தனையும் எங்களுடைய தேர்தல் அறிக்கையிலேயிருந்து தரப்படுகிற கருத்துக்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



1997 ஏப்ரல் 17] [முனைவர் மு. தமிழ்க்குடிமகன்]

அதேபோல், தமிழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, ஐந்தாம் வகுப்பு முதல் கட்டாயக் கல்வி. ஏனென்றால், அறிஞர் அண்ணா அவர்கள் 23-1-1968-ல் இரு மொழிச் சட்டத்தைப் பிறப்பித்து, நல்ல நோக்கத்தோடு பிறப்பித்தபோதுகூட, பின்னால் வந்த பெருமக்கள், ஆணைகளைப் பிறப்பித்த நம்முடைய அலுவலகப் பெருமக்கள், மிகக் கவனமாகச் செய்தார்களா அல்லது வேண்டுமென்றே செய்தார்களா என்று தெரியவில்லை; தமிழைக் கட்டாயம் என்று எங்கேயும் குறிப்பிடாமல் விட்டுவிட்டார்கள். அதனுடைய விளைவாக இன்றைக்குப் பல்வேறு சீர்கேடுகள் உள்ளதைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனாலும் இன்றைக்கு அரசு, பாகம் ஒன்று–தமிழைக் கட்டாயப் பாடமாகவும், பாகம் இரண்டு - ஆங்கிலம் கட்டாயப் பாடமாகவும் தருவதோடு, சிறுபான்மையினர் 15 பேருக்கு மேல் மாணவர்கள் இருந்தால், எங்களுக்கு ஆசிரியரைக் கொடுங்கள் என்று கேட்டால், அந்த மொழியைக் கற்றுக் கொடுப்பதற்கும் ஆசிரியர்களை இந்த அரசு தரும். அவர்களுக்கும் அந்தப் பாதுகாப்பைத் தந்திருக்கிறது. அந்த அடிப்படையில் தெலுங்கு சம்மேளனத்தைச் சேர்ந்த பெருமக்கள் அனைவரும் என்னைப் போன்றவர்களைச் சந்தித்து, அளவளாவி, எங்களிடத்திலே ஏறத்தாழ 800 பள்ளிகள் இருக்கின்றன, இந்த 800 பள்ளிகளுக்கும் உரிய ஆசிரியர்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதற்கு உரிய வாய்ப்பை வழங்குவார்கள், நாங்கள் தந்த உறுதிமொழியின் அடிப்படையில் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அடிப்படையில் நம்முடைய நாட்டில் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிற துறைகள் பணிகளைச் செய்கின்றன என்று குறிப்பிட வேண்டும்.

தொல்பொருள் ஆய்வுத் துறை என்பது இன்றைக்கு உள்ளபடியே அரிய பணிகளைச் செய்கிறது. என் கையில் இருக்கின்ற இரண்டு நாணயங்களை, எல்லோராலும் பார்க்க முடியாவிட்டாலும், சொல்கிறேன். ஒன்று கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த மௌரியர் காலத்து நாணயம். மற்றொன்று, ஒரு பக்கத்திலே யானை, இன்னொரு பக்கத்தில் மீன் வடிவம் கொண்ட பாண்டியருடைய பொற்காசு. இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இரண்டுமே இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்ற அழகன்குளம் என்ற இடத்தில் அகழ் வாராய்ச்சியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, இத்துறை கடலிலிருந்து புறப்பட்டு வான் வரைக்கும் நிமிர்ந்து நிற்கிறது என்பதைச் சொல்லுவது தவறாக இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆராய்ச்சிகள் நம்முடைய உண்மையான வரலாற்றைச் சுட்டிக்காட்டுவதற்கும், வெளிப்படுத்துவதற்கும், உலகமெங்கும் நாம் வாணிபத் தொடர்புகளை வைத்திருந்ததை நிலைநாட்டுவதற்கும், தொடர்ந்து வரலாற்று மூலங்களாகத் தரப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேகமாக, இந்தத் துறையிலே எங்களுக்கு இருக்கிற பெரிய வாய்ப்பு 11 திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒத்துக்கொண்டு, அதற்கு ரூ.63.27 இலட்சத்தை தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு மட்டும் வழங்கியிருக்கிறார்கள். அதிலே அழகன்குளம், கொடுமணல்– ஈரோட்டில் இருக்கிற கொடுமணல்—ஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்வதற்கு ரூ.6 இலட்சமும், தரங்கம்பாடியில் இருக்கிற டேனிஷ்கோட்டையைப் பாதுகாப்பதற்கு ரூ. 5 இலட்சமும், பூம்புகாரில் கடல் அகழ்வாராய்ச்சி குறித்த அருங்காட்சியகம் தொடங்குவதற்கு ரூ.9.58 இலட்சமும் கொடுத்து, அதோடு தஞ்சை, கோவையில் இருக்கிற மண்டல அலுவலகங்களுக்கு ரூ.5.85 இலட்சமும், கல்வெட்டு ஆய்வாளர் பதவிகளை உதவி இயக்குநராக நிலை உயர்த்துவதற்கும் என்று அனுமதியும் தரப்பட்டுள்ளது. அதுபோக இன்னொன்றும், அதாவது இராமநாதபுரத்தில் இராமலிங்கவிலாச அரண்மனை ஏற்கெனவே புகழ் பெற்ற வரலாற்றுச் சிறப்புடைய இடம்; அதற்கு 25 இலட்சம் ரூபாயை இந்த அரசு ஒதுக்கி, இப்போது 15 இலட்சம் ரூபாயில் புதுப்பிக்கின்ற பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 11-45

இதன் கீழேயிருக்கிற இன்னொரு அமைப்பு, கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம். அதிலே ஏறக்குறைய 71 ஆயிரம் ஓலைச்சுவடிகள் இருக்கின்றன. அவை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், கடந்த காலத்தில் அதற்கு குளிர்பதன வசதி செய்யப்பட்டிருந்தது. ஆனாலும், பல ஆய்வாளர்களால் அவற்றை எடுத்துப் பயன்படுத்திக்கொள்வதற்கு முடியாமல், அந்த ஏடுகள் சரிந்து போய்விட்டன. திருவாளர்கள் சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதர் போன்றவர்கள் 'எந்த அளவுக்கு அந்த ஏடுகளைத் தேடிப் பிடித்து இடர்ப்பட்டோம்' என்று எழுதியிருப்பார்கள். எனவே, நம்முடைய * முதல்வர் கலைஞர் அவர்கள், அந்த ஏடுகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், இங்கிருக்கிற 71 ஆயிரம் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள உ.வே. சாமிநாதர் நூலகம், வேறு சில இடங்களில் இருக்கிற பல ஆயிரக்கணக்கான ஏடுகள், அதுமட்டுமல்லாமல், வெளி நாடுகளில்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.





மட்டும் கிட்டத்தட்ட 34 நாடுகளில் இருக்கிற 569 ஓலைச் சுவடிகள், ஆக இவை அத்தனையும் நுண்படச் சுருளாகக் கொண்டுவரப்பட்டால், அவை அத்தனையும் பாதுகாக்கப்படும் என்றும் சொல்லி, இதற்காக 25.66 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இருக்கிற பெரிய நிறுவனம், அருங்காட்சியகம். ஏற்கெனவே சென்னையில் 1851-ல் அருங்காட்சியகம் தொடங்கப்பட்டது. அதனையடுத்து புதுக்கோட்டையில் 1911-ல் தொடங்கப்பட்டது. அதன் பிறகு எஞ்சிய 11 அருங்காட்சியகங்களும் நம்முடைய காலங்களில் தொடங்கப்பட்டன. இப்போது பழனியில் ஒன்று துவங்கப்பட்டு வேலை முடியும் தருவாயில் உள்ளது. இந்த ஆண்டு கூடுதலாக இரண்டு அருங்காட்சியங்களை நிறுவுவதற்கு * முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். அவற்றில் ஒன்று, திருவாரூரில் நிறுவப்படும். மற்றொன்று, மருதுபாண்டியர் பிறந்த மண்ணான சிவகங்கையில் நிறுவப்படும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞருக்குப் பிடித்த இடம் திருவாரூர், கவிஞர் கண்ணதாசனுக்குப் பிடித்த இடம் சிவகங்கை என்ற அடிப்படையில் இந்த இரண்டு அருங்காட்சியகங்களும் துவங்கப்படவிருக்கின்றன. மேலும் 13 மாவட்டங்களில் வருங்காலத்தில் நிறுவப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அருங்காட்சியகங்களுக்காக 19 திட்டங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக் கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், பழைய வெளியீடுகள் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பதாலும், அவைகள் கிடைக்கவில்லை என்பதாலும், அவற்றை மீண்டும் அச்சிட ரூ. 5 இலட்சம், சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் தேவையான வசதிகள் செய்து கொடுக்க ரூ. 8 இலட்சம் என்று இப்படியாகப் பல திட்டங்கள் விரிகின்றன. நேரத்தின் அருமை கருதி நான் சுருக்கிச் சொல்கிறேன்.

ஒன்றை மட்டும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். குறிஞ்சிப் பாட்டில் 90-க்கும் மேற்பட்ட பூக்கள் இருக்கின்றன. ஆனால் அந்தப் பூக்களுக்கு Botanical Names என்று, பயிரியல் பெயர்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. பயிரியல் பாடங்களைப் படிக்கின்ற மாணவர்களுக்குப் பயிரியல் பெயர் மட்டுமே தெரியும். ஆனால்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

அந்தப் பெயர்தானா அந்தப் பூவுக்கு இருக்கும் என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது. அதற்குத் தமிழில் என்ன பெயர் என்று மாணவர்களுக்குத் தெரியாது. வேம்பு பயிரியல் பெயர் என்றால், தமிழில் என்ன பெயர் என்று தெரியாது. எனவே, அருங்காட்சியகத்தில் நாங்கள் எடுத்த முயற்சியின் பயனாக, கபிலர் குறிப்பிட்ட அத்தனை பூக்களின் பெயர்களும் ஒரு கல்வெட்டில் பொறிக்கப்படும். அதற்கு இணையான பயிரியல் பெயர் இன்னொரு கல்வெட்டில் பொறிக்கப்படும். இந்த இரண்டினுடைய அடையாளப் பூக்கள் படம் பிடிக்கப்பட்டு பக்கத்திலேயே படமாகக் காட்சிக்கு வைக்கப்படும் என்று சொல்லி, * முதல்வர் கலைஞர் இதற்காக நிறைய தொகையை ஒதுக்கி, 'தொடக்கத்தில் இரண்டு இலட்சத்தில் தொடங்குங்கள், எவ்வளவு ஆனாலும் ஏற்றுக்கொள்கிறோம்' என்று * முதல்வர் கலைஞர் அவர்கள் புதுமைக்கும் பழமைக்கும் இடையே ஒரு இணைப்புப் பாலத்தைத் தொடுத்திருக்கிறார்கள்.

அதைப்போல, அருங்காட்சியகத்தில் முப்பட்டகப் பரிமாணம் என்ற அடிப்படையில் புதிய காட்சிகளை வைப்பதற்குப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். எப்படியென்றால், என் கையில் இருக்கின்ற இந்த நூலில், 'ஹோலோகிராபி' என்று சொல்லப்படும் முப்பரிமாணத்தில், நேரில் பார்த்தால் ஒன்றும் தெரியாது. ஆனால் அந்த ஒளியில் பார்த்தால், கலங்கரை விளக்கம் தெரியும். அது மட்டுமல்ல, என் கையில் இருக்கிற இந்த நூலில் ஒரு பக்கத்தில் அதற்குள் ஒரு படமும், அதற்கும் உள்ளே இன்னொரு படமும் தெரியும். எனவே, மூன்று பரிமாணங்களையும் இப்படி அருங்காட்சியகத்தில் வைப்பதில் பெருமகிழ்ச்சியாக இருக்கிறது. இந்தச் சிறப்புக்கள் எல்லோருக்கும் தெரியட்டும் என்று * முதல்வர் கலைஞர் அவர்கள் தொகையை வழங்கி, ஆவன செய்ய எங்களைப் பணித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இசைக் கல்லூரிகள். ஏற்கெனவே மூன்று இசைக் கல்லூரிகள் இருக்கின்றன. இப்பொழுது சத்திரமேலாண்மையில் இருந்து தனியாகப் பிரித்து, திருவையாறு அரசினர் இசைக் கல்லூரி என்ற பெயரில் இயங்குவதற்காக, * முதல்வர் கலைஞர் அவர்கள் 11.64 இலட்சத்தை வழங்கியிருக்கிறார்கள். இது நான்காவது இசைக் கல்லூரியாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்லூரி மட்டுமல்ல, ஐந்து இசைப் பள்ளிகளுக்கு

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், திருவாரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஐந்து இசைப் பள்ளிகள் தொடங்கப்படும். அதுமட்டுமல்ல, தமிழகம் முழுவதும் 29 மாவட்டங்களில் தொடர்ந்து உரிய காலத்தில் தமிழ் இசை விழாக்கள் அரசால் நடத்தப்படும். காரணம், *முதல்வர் அவர்கள் கடந்த முறை குறிப்பிட்டார்கள். 'எங்கு பார்த்தாலும் கர்நாடக இசை இருக்கிறது, தமிழ் இசை மெல்ல மெல்ல நலிந்து போய்க் கொண்டிருக்கிறது' என்று சொன்னார்கள். 1940-ல் அண்ணாமலையரசருக்கு ஏற்பட்ட அதே கவலை, 1997-ல் கலைஞர் அவர்களுக்கும் ஏற்படக்கூடிய சூழ்நிலை. நாங்கள் தியாகராயருக்கு எதிரானவர்கள் அல்ல. கர்நாடக இசையை முழுவதும் போற்றுபவர்கள், பாராட்டுபவர்கள் நாங்கள்.

ஆனால் நம்முடைய இசைவாணர்கள், அண்ணாமலை அரசர் அவர்கள் எடுத்த முயற்சியைப் போல, அந்த முயற்சிக்குத் தந்தை பெரியாரும், அண்ணாவும் கொடுத்த ஆதரவைப் போல, அந்த முயற்சிக்கு அன்றைக்கு கல்கியும், ராஜாஜியும் கொடுத்த ஆதரவைப் போல, தேவையான பாடல்களைத் தொகுத்துத் தந்த உ.வே.சா. அவர்களைப் போல, தேவையான இசைப் பாடல்களை ஆக்கித் தந்த லட்சுமணப் பிள்ளை அவர்களைப் போல, அத்தனை பேரும் சேர்ந்து மீண்டும் உருவாக்க வேண்டுமென்பதற்காக பல லட்சக்கணக்கான ரூபாயை இதற்காக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

இசைப் பள்ளிகளில் கடம், கஞ்சிரா, நுகர்சிங்கம் போன்றவைகளைப் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு இதுவரை 100 ரூபாய்தான் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. நட்டுவாங்கம் பயில்பவர்களுக்கு 150 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. நாங்கள் * முதல்வரிடம் கோரிக்கை வைத்தோம். அனைவருக்கும் 200 ரூபாய் உதவித் தொகையைத் தர வேண்டுமென்று. ஆனால் * முதல்வர் அவர்கள் கீழே குறிப்பெழுதி நான் 250 ரூபாயாகத் தருகிறேன் என்று வழங்கியிருக்கிறார்கள். எனவே தமிழ்நாடு முழுவதும் இருக்கிற இசை பயிலும் மாணவ, மாணவியர்க்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையான ரூ.100/-ஐ ரூ. 250/-ஆக உயர்த்தித் தந்திருக்கிறார்கள் நம்முடைய * முதல்வர் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

மேலும், இந்த இசை தொடர்பான 13 திட்டங்களுக்கு 51 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையில் மதுரைக்கு மட்டும் 3 லட்ச ரூபாயும், கோவைக்கு 5 லட்ச ரூபாயும், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை உட்பட வெவ்வேறு நிலைகளில் இவற்றையெல்லாம் தொடங்கி, வேறு சில ஆய்வுகளும் செய்வதற்கான உதவிகளை இந்த அரசு வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இயல், இசை, நாடக மன்றத்தைப் பற்றி நிறையச் செய்திகளை நான் இந்த மன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். அண்மையில் நடந்த விழாவிலும் சொல்லியிருக்கிறேன். 8 திட்டங்களுக்கு 21.98 லட்ச ரூபாயை இயல், இசை, நாடகத்திற்கு மட்டும் தமிழக அரசு வழங்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு சிறந்த கலைக்கூடத்தை அங்கே கட்ட, முதல் தளத்தைக் கட்ட ரூ.16 லட்ச ஒதுக்கீட்டில், முதற்கட்டமாக ரூ.6.48 லட்சத்தை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது ஓவிய நுண்கலைக் குழு. இது நம்முடைய துறையிலே இருக்கிற சிறப்பான துறை. கடந்த 5 ஆண்டுகளாக இது இயங்கவே இல்லை. யாரும் அதை எட்டிப்பார்க்கவில்லை. அதற்கென்று குழுவே கிடையாது. இந்த ஆட்சி தொடங்கிய பிறகு, மீண்டும் ஒரு குழுவை அமைத்து, அதிலே புகழ்பெற்ற நடிகராக இருக்கிற திரு. சிவகுமார்—ஓவியர் சிவகுமார்—அவர்கள் பொறுப் பேற்றிருக்கிறார்கள். நம்முடைய * முதல்வர் கலைஞர் அவர்கள் அங்கே கட்டடம் கட்டுவதற்காக 5 லட்ச ரூபாயும், நிர்வாகச் செலவுகளுக்காக ரூ. 10 லட்சமும் ஒதுக்கித் தந்து, ஓவிய நுண்கலை தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் பரவ, தேவையான பணிகளைச் செய்வதற்கு வாய்ப்பளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சவகர் சிறுவர் இல்லம். நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் அடிக்கடி என்னிடத்திலே சொல்கிற ஒரு பகுதி. இந்த ஆட்சி தொடங்குவதற்கு முன்னால் இருந்தவை மூன்றுதான். சென்னை, புதுக்கோட்டை மற்றும் மதுரை ஆகிய இடங்களில்தான் இருந்தன. கடந்த ஆட்சியில் கோவை, திருச்சி, உதகமண்டலம், நாகர்கோவில் மற்றும் கடலூர் ஆகிய 5 இடங்களிலும், இந்த வரவு-செலவுத்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



திட்டத்தில் தஞ்சாவூர், சேலம், திருவண்ணாமலை, சிவகங்கை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 5 இடங்களிலும் இந்த இல்லங்கள் அமைக்க — மூன்றாக இருந்ததை ஒரே ஆண்டில் 13-ஆக உயர்த்தி — உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அங்கே பணியாற்றுகிறவர்கள் குறித்து கடந்த அரசு திடீரென்று ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அதற்கு முன்னால் அனைவரும் தொகுப்பூதியத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடந்த முறை இருந்த அரசு, மிகுந்த கருணையோடு, 1-8-1994 அன்று திடீரென்று ஒரு ஆணையை இட்டு, அந்தப் பணியாளர்கள் அனைவரையும் தினக் கூலிகளாக மாற்றி ஒரு பெருமையைச் சேர்த்துக்கொண்டது. * முதல்வர் கலைஞர் அவர்கள், இந்தக் காலத்தில் தினக் கூலியா ? அதுவும் தமிழக அரசு நிறுவனத்தில் இப்படி ஒரு இழிநிலையா என்று சொல்லி—நம்முடைய சுப்பராயன் அவர்களுக்கும் இது தெரியும்; அவரும் முதல்வரிடம் இதுகுறித்து நான் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன்—அந்த ஒரு நிறுவனத்திற்கு மட்டுமல்லாமல், 13 நிறுவனங்களிலும் பணியாற்றுகின்ற அத்தனை பேர்களுக்கும், இனிபணியில் சேருகின்றவர்களுக்கும் ரூ.900 தொகுப்பூதியம் என நிர்ணயித்து வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அவர்களுக்கு வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை அளிக்கப்படும். 12 நாட்கள் சிறு விடுப்பு அளிக்கப்படும் என்பதையும் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அவர்களுடைய நீண்டநாள் வேண்டுகோள் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி இயக்ககம் முறைப்படி எல்லா மாவட்டங்களிலும் இயங்க வேண்டும். ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் இதைப்பற்றி கவலைப்படாத தன்மையின் காரணமாக, 14 இடங்களில் உதவி இயக்குநர்கள் பணியிடங்கள் காலியாக வைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் நம்முடைய பேராசிரியர் அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறையையும் சேர்த்து அவர்களுடைய பொறுப்பிலே வைத்திருந்த காலத்தில், தமிழ் ஆய்வு அலுவலர் என்ற பதவியை ஏற்படுத்தி, பல பேரைப் பணியில் அமர்த்தி ஆணை பிறப்பித்திருந்தார்கள். இத்தனை ஆண்டுகளாக அவர்கள் அனைவரும் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். பதவி உயர்வோ, பணி வரன்முறையோ கிடையாது. நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு ஆணையைப்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[முனைவர் மு. தமிழ்க்குடிமகன்] [1997 ஏப்ரல் 17

பிறப்பித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருடைய பணியும் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்; புதிதாக 14 உதவி இயக்குநர்களைப் பணியில் அமர்த்த வேண்டுமென்றும் ஆணையிட்டிருக்கிறார்கள். அங்கே பணிபுரியும் ஊழியர்கள் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அவர்களிடம் நேரிடையாகப் பேசி, அவர்களுக்கும் பதவி உயர்வு என்ற முறையில் 6 இடங்களையும், நேரிடை நியமனம், அதாவது வேலை வாய்ப்பகத்தின் மூலமாக, நேரிடை நியமனத்தில் 8 இடங்களையும் பூர்த்தி செய்யலாம் என்ற அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட்டு அனைத்து சிக்கல்களும் இன்றைக்குத் தீர்க்கப்பட்டிருக்கின்றன. உங்களுக்கு வேலையில்லாத கொடுமையைப் பற்றித் தெரியும். 300, 400 பேர் தமிழில் முனைவர் பட்டம் பெற்றவர்களே வேலையில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே முதன்முறையாக முனைவர் பட்டம் பெற்றவர்களுக்கு முதலிடம் என்ற முறையில், வேலைவாய்ப்பகத்திலிருந்து 100 பேர் கொண்ட பட்டியல் இப்போது பெறப்பட்டிருக்கிறது. விரைவில் முறைப்படி வேலைவாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்படும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

அடுத்து, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் உலகத் தமிழ்ச் சங்கம் ஆகிய இரண்டையும் இணைக்க வேண்டும் என்று நம்முடைய டாக்டர் இராமன் போன்ற உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். ஏற்கெனவே உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டபோது, அது எந்த அடிப்படையில் நிறுவப்பட்டது என்பதை எங்களால் தெளிவுபடுத்த முடியவில்லை. காரணம், ஏற்கெனவே தமிழ்ப் பல்கலைக்கழகம் இருக்கின்றது. கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அது இயங்குகின்றது. அதுவும் நம்முடைய மாண்பமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்டதுதான். அதேநேரத்தில், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையமும் இருக்கின்றது. இது பேரறிஞர் அண்ணா அவர்களால் 1968-இல் அறிவிக்கப்பட்டு, 1970-இல் நம்முடைய * முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் பதிவு செய்யப்பட்டது. ஆனாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல், உலகத் தமிழ்ச் சங்கம் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. ஆனாலும், நாங்கள் அதைப் புறக்கணித்து விடவில்லை. இந்த இரண்டு நிறுவனங்களும் என்னென்ன பணிகளைச் செய்கின்றன என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டு, இவை செய்யாத பணிகளை அந்த அமைப்பின் மூலம் செய்ய

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



1997 ஏப்ரல் 17] [முனைவர் மு. தமிழ்க்குடிமகன்]

முடியுமா என்பதைத் தெளிவுபடுத்தி வருகிறோம். அப்படித் தெளிவுபடுத்தினால்தான் வருங்காலத்தில் நிறுவனங்களை ஒழுங்காகப் பேணமுடியும் என்ற அடிப்படையில், உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கி, அந்த இடத்தைப் பதிவு செய்து, அக்கட்டடத்திற்கான சுற்றுச்சுவர் கட்டுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. அதோடு மட்டுமல்லாமல் நம்முடைய *முதல்வர் அவர்களே நிதிநிலை அறிக்கையில், 83-வது பத்தியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்குப் புத்துயிர் ஊட்டி, அது முழுவீச்சில் செயல்படுவதற்குத் துணை செய்யப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்ப் பல்கலைக் கழகம் 250-க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கின்றது. சிலபேர், அகராதிகள் இன்னும் வெளிவரவில்லையே என்றெல்லாம் ஆதங்கப்படுகிறார்கள், அப்படி ஒரு நிலை இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே அந்த நிறுவனத்தின் வாயிலாகப் பெருஞ்சொல் அகராதிகளின் பல தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன. அதேநேரத்தில், தூய தமிழ்ச்சொல் அகராதி ஒன்று உருவாகி, அதன் முதற்பதிப்பு வெளிவரத் தயாராக இருக்கின்றது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 'தமிழ்-தமிழ்' என்ற அகராதியை வெளியிட்டிருக்கின்றது. இத்தனை நூல்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தமிழ்ப் பல்கலைக்கழகம், இப்பொழுது வேறுசில புதிய திட்டங்களையும் செயற்படுத்தி, பல நிலைகளிலும் தன்னுடைய நிலையைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமென்று முயலுகின்றது. இடைக்காலத்தில் ஏற்பட்ட கோளாறுகளினால் — இடைக்காலத்தில் எவ்வளவோ கோளாறுகள் இருந்தன. ஏனென்றால், அது ஒரு இருண்ட காலம் என்பதனால் — தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே ஏராளமான பேர் எந்த வரன்முறையும் இல்லாமல் பணியமர்த்தப்பட்டார்கள். அவர்களது பணி, பல ஆண்டுகாலமாக வரன்முறைப்படுத்தப்படாமல், தொகுப்பு ஊதியத்தின் அடிப்படையிலே அவர்கள் வேலை பார்த்து வந்தார்கள். ஆனால், 51 பணியிடங்கள் காலியாக இருந்தன. எனவே, இந்த அரசு ஆட்சிக்கு வந்த உடன், திரு. வா.செ. குழந்தைசாமி அவர்களுடைய அறிக்கையைப் பெற்று, அந்த அடிப்படையில் ஆட்சிக் குழுவும் கூடி, 51 பேருக்கு, ஏற்கெனவே அவர்கள் பெற்றுவந்த தொகுப்பூதிய நிலையை மாற்றி, முறையான ஊதியத்தினை வரன்முறைப்படுத்தி, வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய நண்பர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் அடிக்கடி ஒரு குரலை எழுப்பி வந்தார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடு அங்கு புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்தார்கள். புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பார்த்தால், கடந்த ஆண்டுகளில், அவர் சொன்னதுதான் நூற்றுக்கு நூறு உண்மை. அதை நான் ஒப்புக் கொள்கிறேன். எனவே, ஆசிரியர் பணியிடங்களிலே, இப்போது இருக்கின்ற இந்த ஆசிரியர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் யாருமில்லை. அது முற்றிலும் இட ஒதுக்கீட்டு முறைக்கு முரணானதுதான். எனவே, கடந்த ஆட்சிக் காலத்திலே அப்படியெல்லாம் நடந்தது; எந்தவிதமான வரன்முறையும் இல்லாமல் போய்விட்டது. எனவே, நிரப்பப்படாமல் உள்ள இந்த 16 ஆசிரியர் பணியிடங்களிலும் முறைப்படி, சுழற்சி முறைப்படி, தாழ்த்தப்பட்டவர்களும், மலைவாழ் மக்களும் இடம்பெறக்கூடிய அளவிற்கு இட ஒதுக்கீட்டை இந்த அரசு உறுதிப்படுத்தும் என்று நான் இந்த அவைக்கு உறுதியளிக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள பல்வேறு துறைகளுக்கு அதிகமான நிதியை ஒதுக்குவதற்கு *முதல்வர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கலைப் பண்பாட்டு இயக்ககத்தின் சார்பில் நிறைவேற்றவுள்ள 10 திட்டங்களுக்கு ரூ. 55 இலட்சத்தை *முதல்வர் அவர்கள் ஒதுக்கி, அறிவித்திருக்கிறார்கள். அதிலே, புதிய இயக்ககப் பணிகளுக்காகவும், காஞ்சிபுரம் உட்பட நான்கு மாவட்டத் தலைநகரங்களில் மண்டல மையங்கள், மாவட்டப் பண்பாட்டு மையங்கள் அமைத்திட 9 இலட்சம் ரூபாயை *முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏனென்றால், பண்பாட்டைப் பற்றிப் பெரிதும் கவலைப்பட்டார்கள், நம்முடைய திரு. வேலாயுதன் அவர்கள். எனவே, பண்பாடு என்பது ஒரேயொரு கட்டிடத்திற்குள் மட்டும் நுழையாமல், 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டால், பல்வேறு உதவி இயக்குநர் அலுவலகங்கள் அதனோடு தொடர்பு கொண்டு பணிகளை விரிவுபடுத்தலாம் என்பதற்காக 9 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். நண்பர் திரு. மணிமாறன் அவர்கள் எழுப்பிய குரலுக்காகவும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்களுடைய வேண்டுகோளை மதித்தும், ஒரு எடுத்துக்காட்டாக, முதற்கட்டமாக, முதல் தவணையாக, எந்தவித வசதி வாய்ப்பும் இல்லாத ஒரு மாவட்டமாக உருவாகியிருக்கின்ற திண்டுக்கல்-மன்னர்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.





திருமலை மாவட்டத்தில் 2.5 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பெரிய கலையரங்கம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே நடுவண் அரசு 12 இலட்சம் ரூபாயையும், தமிழக அரசு 12 இலட்சம் ரூபாயையும் வழங்குகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, சென்னையிலே இருக்கின்ற கலைத் தொழில் கல்லூரி — உங்களுக்குத் தெரியும், ஆர்ட்ஸ் அண்டு க்ராஃப்ட்ஸ் காலேஜ் — 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட மிகப் பழைய கல்லூரி. அதிலே, இதுவரைக்கும் இளங்கலைப் பட்டப்படிப்பு மட்டும்தான் இருந்தது. முதல் தடவையாக, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, சென்னை கலைத் தொழில் கல்லூரிக்கும், அதேநேரத்தில், கும்பகோணத்தில் இருக்கின்ற கலைத் தொழில் கல்லூரிக்கும், இரண்டிற்குமாகச் சேர்த்து, வரலாற்றில் முதல் தடவையாக, ஓவியத் துறையில் முதுகலை வகுப்புகள் துவங்கப்பட இருக்கின்றன. அதற்கு இந்த அரசு, 4.58 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அதுமட்டுமல்லாமல், சென்னை, அரசினர் கலைத் தொழில் கல்லூரியினுடைய விரிவுக்காக, *முதல்வர் கலைஞர் அவர்கள், 15 இலட்சம் ரூபாயை, அதனுடைய முதிர்ச்சி கருதி, வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோலவே, மாமல்லபுரத்திலே இருக்கிற சிற்பக் கல்லூரிக்கு, 5 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். இந்த அடிப்படையில், நாங்கள் பல திட்டங்களை எங்களுடைய துறையினுடைய சார்பிலே செயற்படுத்தினாலும், எத்தனையோ வகையான துறைகளை நாங்களே வலிந்து எடுத்துக்கொண்டு, அதற்குள் புகுந்து செயல்படுத்துகிறோம் என்பதை நீங்கள் யாரும் மறந்திருக்க மாட்டீர்கள்.

அந்தவகையில் பார்த்தால், உலகத் தமிழ் மாநாடு என்பது, முறைப்படி அரசு நடத்துவது அல்ல; அது உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் — ஐ.ஐ.டி.ஆர். — என்ற அமைப்பு நடத்துவது. ஆனாலும், முறைப்படி 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அது நடத்தப்பட வேண்டும். காலப்போக்கிலே, அந்த ஆண்டுகள் நீண்டுபோய் விட்டன. 1966-லே

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

தொடங்கப்பட்டு, கோலாலம்பூரிலிருந்து ஒழுங்காக வந்து கொண்டிருந்தது. 1968-லே சென்னைக்கு வந்தது. பிறகு, மாறிப்போய் விட்டது. அந்த உலகத் தமிழ் மாநாடு என்று சொல்கிறபோது, வெறுமனே மாநாடு நடத்துவது மட்டும் போதும் என்ற நிலைமை மாறி, தமிழை வைத்தும் கொள்ளையடிக்கலாம் என்பதை நமக்குச் சிலபேர் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். 'தமிழ்' என்பது புலவருக்குள்ள வறுமை மொழி. அந்தத் தமிழை வைத்தும் கொள்ளையடிக்கலாம்; அதுவும் 74 கோடி ரூபாய் செலவிட்டதிலே, எப்படியெல்லாம் அந்தத் தொகை வரம்புமீறி கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது என்பதை, நம்முடைய அனைத்து உறுப்பினர்களுக்கும் தெளிவாக்க வேண்டியது என்னுடைய கடமை, சுருக்கமாக.

நிர்வாக ஒப்புதலைவிட—நான் சொல்வது நெடுஞ்சாலை துறையைப் பற்றியது—நிர்வாக ஒப்புதலைவிட, 10 விழுக்காட்டிற்கு மேல் செலவிட்டது—10 விழுக்காடுதான் இருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும்—ஆனால், அந்த நிர்வாக ஒப்புதலைவிட, 10 விழுக்காட்டிற்கு மேல் செலவிட்டது, திருத்தப்பட்ட மதிப்பு மற்றும் தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்படாமல் செலவிட்டது, 226 இலட்சம் ரூபாய். சாலைப் பணிகள் ஒப்பந்தக்காரர்களுக்குத் தொகை அதிகமாக வழங்கப்பட்டது, 19 இலட்சம் ரூபாய் இழப்பு. மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பொருள்களின் முடிவு இருப்பு, தீர்ப்பு செய்யப்பட வேண்டியது, 13 இலட்சம் ரூபாய். வேலைகளுக்குரிய மதிப்பீட்டிற்கு, நிர்வாக ஒப்புதல் பெறப்படாமலேயே செய்யப்பட்டது, 73 இலட்சம் ரூபாய். வேலைகளுக்கு முடிவு அறிக்கை தயார் செய்யப்படாமலேயே வேலை செய்தது, 366 இலட்சம் ரூபாய். இப்படிக் கதை நீண்டுகொண்டே போகிறது. விரிவாகச் சொல்வதற்கு ஒரு பெரிய புத்தகமே இருக்கிறது. காரணம், தணிக்கையில் ஒவ்வொன்றும் கண்டிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு ஒரு கேவலமான நிலை. ஆனாலும், பலபேர் என்னிடத்திலே கேட்டார்கள்: "நீங்கள் எப்போது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தப் போகிறீர்கள்?" என்று. முறைப்படி 1-1-1997-இல் நடத்த வேண்டும், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்ற கணக்குப்படி. ஆனாலும், * முதல்வர் அவர்களோடு கலந்து கொண்டும், உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் என்ற அமைப்பினுடைய கருத்தை ஏற்றும், கண்டிப்பாக, உலகத் தமிழ் மாநாடு நடத்தப்படும். ஆனால், எங்கு, எப்போது என்பதை அரசு முறைப்படி ஆய்வு செய்துதான்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.





முடிவு செய்யும். காரணம், ஏற்கெனவே, போனமுறை தமிழ்நாட்டில் நடந்திருக்கிறது என்பதால், இம்முறையும் தமிழ்நாட்டிலேயே நடத்தப்பட வேண்டுமா; அல்லது, வெளிநாடுகளில் நடத்தப்பட வேண்டுமா என்பதை அரசும், அந்த ஆராய்ச்சிக் கழகமும் சேர்ந்து முடிவு செய்யும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை அடுத்து, ஒரு பெரிய மகிழ்ச்சிக்குரிய செய்தி என்னவென்றால், இந்திய ஆட்சிப் பணித் தேர்வினை, தமிழிலே எழுதுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு, 'இலக்கிய வரலாறு' நூலோ, 'மொழி வரலாறு' நூலோ, உதிரியாகக் கிடைக்கிறதேயொழிய, ஒட்டுமொத்தமான அளவில், அவர்களுடைய தேர்வுக் கண்ணோட்டத்தில் கிடைக்கவில்லை. 'மொழி வரலாறு' படிக்க வேண்டும் என்று சொன்னால், பல்வேறு நூல்களைப் படித்துத்தான் திரட்ட வேண்டும். வரலாறு படிக்கிற மாணவனும், தமிழிலே அதைப் படிக்கிறான். பொருளியல் படிக்கிற மாணவனும் படிக்கிறான். எனவே, ஒரு ஒட்டுமொத்தமான நூலைத் தர வேண்டும் என்பதற்காக *முதல்வர் கலைஞர் அவர்கள், இந்திய ஆட்சிப் பணித் தேர்வைத் தமிழிலே எழுதுவதற்கு வாய்ப்பாக நூல்களை வெளியிடுவதற்காக, இந்தத் துறைக்கு 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நண்பர்கள் சொன்னார்கள்; ஊர்ப் பெயர்கள் பல சிதைந்து காணப்படுகின்றன என்று. ஆம்; ஏற்கெனவே 'ட்ருவாண்ட்ரம்' திருவனந்தபுரம் ஆகிவிட்டது. 'கொய்லான்', கொல்லம் ஆகிவிட்டது. அதற்கு முறைப்படி ஆணைகள் பெறப்பட்டு எல்லா நாளிதழ்களும், அது 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'-ஆக இருந்தாலும் வேறெந்த நாளிதழாக இருந்தாலும், திருவனந்தபுரம் என்றுதான் தெளிவாகப் போட்டிருக்கிறார்கள். ஆனால், நம் ஊரிலே மட்டும் அந்த நிலைமை மாறவில்லை.

என்னிடத்திலே, ஒருமுறை ஒருவர் வானொலியிலே கேள்வி கேட்டபோது, "நான் ட்ரிப்ளிகேன்-லேலே இருந்து பேசுகிறேன்" என்று சொன்னார். நான் அதற்குச் சொன்னேன்; "முதலில், 'திருவல்லிக்கேணி' என்று சொல்லப் பழகிவிட்டு, பிறகு, தமிழ்க்குடிமகனிடம் கேள்வி கேளுங்கள்" என்று சொன்னேன். எனவே, நாம் தூத்துக்குடியை, 'ட்யூட்டிகுரின்' என்று சொல்வது, 'மதுரைக்குப் போகிறேன்' என்றுகூடச் சொல்வதில்லை; 'மஜுரா' போகிறேன்; ஆனால், நான் இதை இன்னும்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

அழுத்திச் சொல்ல விரும்பவில்லை; அது தவறான முறையில் இடம் கொடுத்துவிடும் என்பதற்காக; மதுரையை, மஜுரா என்றும், தஞ்சாவூரை, 'டாஞ்சூர்' என்றும் கூட சொல்கிற அளவுக்கு நிலைமைகள். ஏற்கெனவே, அதற்கான குழு அமைக்கப்பட்டு, முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு, பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. வெகுவிரைவில், நடுவண் அரசின் ஒப்புதலோடு, தமிழகத்தில் இருக்கிற எல்லா பெயர்களும், ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் எழுதுகிறபோது, தமிழின் ஒலிவடிவத்தில் மட்டும்தான் எழுதப்பட வேண்டும் என்ற ஆணையை அரசு பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கலைக் களஞ்சியத்தைப் பற்றிச் சொன்னார்கள், நம்முடைய அருமை நண்பர்கள்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், இன்னும் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வார்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** இன்னும் 10 மணித்துளிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்து மணித்துளிகளா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** சரி, ஒரு ஐந்து மணித் துளிகள். கலைக் களஞ்சியத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்தக் கலைக் களஞ்சியம் என்பது உள்ளபடியே நிறைய இடத்தில், நிறைய துறைகளில் வளர்ந்திருக்கின்றது என்பதை உறுப்பினர்களுக்கு நான் பெருமையோடு சுட்ட விரும்புகிறேன். பாரதிதாசன் பல்கலைக்கழகம், இசைக் கலைக் களஞ்சியத்தை வெளியிட்டிருக்கிறது, மூன்று தொகுப்புகளில்.

*பிற்பகல் 12-05*

அடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இந்து சமய கலைக் களஞ்சியம் என்று 3 தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறது. அதேநேரத்தில் நம்முடைய தமிழ்ப் பல்கலைக்கழகம் வாழ்வியல் களஞ்சியம் என்ற முறையில் 14 தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறது. அறிவியல் களஞ்சியம் என்ற முறையில் 9 தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற, மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைத் தலைமையாகக் கொண்ட அந்த அமைப்பு மருத்துவச் சொற்களஞ்சியம் என்று 4 தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறது. ஏற்கெனவே எல்லாப் பணிகளும் நடந்து



கொண்டிருக்கின்றன. உங்கள் கைக்குக் கிடைக்கவில்லையோ அல்லது உங்கள் கவனத்திற்கு வரவில்லையோ, அதனால்தான் கலைக் களஞ்சியப் பணிகள் பின்தங்கி இருக்கின்றன என்று நீங்கள் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். ஆனாலும் இவை முன்னேறி இருப்பது மட்டுமல்லாமல், இதற்கும் மேலாக புதிய கலைக் களஞ்சியத்தைத் துவக்க வேண்டுமென்று அரசு விரும்பியதால், துறை விரும்பியதால், அதற்காகத் தமிழக அரசு 50 இலட்சம் ரூபாயை ஒப்பளித்து அதில் முதற்கட்டமாக 10 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே கலைக் களஞ்சியம் இல்லையென்ற குறையே இல்லாமல் திரு. பெரியசாமிதூரன் எதை மையமாக வைத்து 20 தொகுப்புகளை வெளியிட்டாரோ, அதைக் கிட்டத்தட்ட 50, 60, தொகுதிகளாக விரிவுபடுத்தி இந்த அரசு தரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதனை அடுத்து தமிழில் பொறியியல் வேண்டும், மற்ற துறைகள் தமிழில் வர வேண்டும் என்ற நீண்ட கால ஆதங்கத்தை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் அவருடைய மானியக் கோரிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் கல்வியில் சில குறிப்பிட்ட பாடத் திட்டங்களைத் தமிழ் மொழியில் பயிற்றுவிப்பதற்கு நடப்பாண்டில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோன்று இரண்டு தனியார் தன்னாட்சி உரிமை பெற்ற பொறியியல் கல்லூரிகளிலும், அரசுப் பொறியியல் கல்லூரி ஒன்றிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அந்த முயற்சிகள் இன்றைக்குத் தொடங்கியிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தமிழ் ஒலிப்புப் பயிற்சி. யாரும் சரியாகத் தமிழைப் பேசுவதில்லை. சில நேரங்களில் அது தமில் ஆகிறது. சில நேரங்களில் அது தமிள் ஆகிறது. இன்னும் பல இடங்களில் வாழைப்பழம் என்பது மெல்ல மெல்ல வழுவி 'வாளப்பளம்' என்றும் 'வாயப்பயம்' என்றும் ஆகிவிடுகிறது. இப்படிப் பல நிலைகளிலும் ஏற்படுவதற்கு முழுமுதற் காரணமாக இருப்பவர்கள் தொலைக்காட்சியில் அறிவிப்பாளர்கள் என்று நான்கூட குறிப்பிடவில்லை நம்முடைய *முதல்வர் அவர்கள் கவியரங்கத்தின்போது தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் பல இதழ்களும் சுட்டிக்காட்டியிருக்கின்றன. எனவே அதற்குச் சரியான பயிற்சி கொடுக்க வேண்டியதும், அதற்காக ஒரு திரைப்படச் சுருளை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

எடுத்து பயிற்சி கொடுக்க வேண்டியதும் இந்த அரசினுடைய கடமை என்ற முறையில் அதையும் செய்கிறோம். இதைச் சுட்டிக்காட்டி 'இந்து' இதழில்கூட 'You and Me' என்ற பகுதியில் பாராட்டி எழுதியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட வேண்டும். எனவே எல்லா இதழ்களிலும் வருகிற நல்ல செய்திகளை எல்லாம் எடுத்துக்கொண்டு செயல்படுத்துகிற அரசாக இது இருக்கிறது என்பதற்கு அது ஒரு எடுத்துக்காட்டு. நம்முடைய முக்கியமான பகுதி தேர்வாணையத்தில் இருக்கிறது. காரணம், தமிழிலே தேர்வு எழுதி வெற்றிபெற்றால்தான் அவர்கள் அலுவலகத்திற்கு வரும்போது தமிழிலே வரைவுகளை வரைவார்கள். அங்கேயே ஆங்கிலத்தில் எழுதிவிட்டு வருகிறபோது, ஆங்கிலத்திலிருந்து நேரடியாக வருகிறபோது ஆங்கிலத்தில் வரைவுகளை வரைகிறார்கள். எனவே தேர்வாணையக் குழுவுக்கும் நேரடியாகச் சென்று அவர்களோடு கலந்து பேசியிருக்கிறோம். விரைவில் அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்து அனைவரும் தமிழ் வடிவில் எழுதுவதற்கான முழு முயற்சியும் மேற்கொள்ளப்படும் என்று அந்த நிறுவனத்தினுடைய தலைவரும், உறுப்பினர்களும் உறுதியளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் எனக்கிருக்கிற வருத்தம். ஆட்சி மொழிச் சட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று நினைத்தாலும் நம்முடைய இந்திய ஆட்சிப் பணியாளர்களாக இருக்கிற பெரும் அலுவலர்கள் இன்னும் இவற்றைக் காதில் போட்டுக் கொள்ளவில்லையா, இல்லை கவனத்தில் கொள்ளவில்லையா என்று தெரியவில்லை. நான் துறையை எல்லாம் சுட்டிக்காட்டிக் கொச்சைப்படுத்த விரும்பவில்லை. எனக்கு வந்திருக்கிற ஒரு கோப்பிலே இரண்டு இந்திய ஆட்சிப் பணியாளர்கள் ஆங்கிலத்தில்தான் வரைவு எழுதியிருக்கிறார்கள். தமிழ்க்குடிமகன் என்ன சொன்னாலும் அதைக் காதில் வாங்கிக் கொள்ள வேண்டியதில்லை என்று அப்படி நினைக்கிறார்களா? எங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் என்று நினைக்கிறார்களா? இரண்டிலுமே மாற்றம் வேண்டும். பிற மொழியாளர்களாக இருக்கிற இந்திய ஆட்சிப் பணியாளர்களே 4 ஆண்டுகளுக்குள் தமிழைக் கற்றுக் கொண்டு தமிழில் வரைவுகள் எழுதத் தவறினால் அவர்கள் பதவியை இழப்பார்கள் என்று ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் எழுதி இருப்பவர்கள் மற்ற மாநிலங்களைச் சார்ந்தவர்கள் அல்ல. நம்முடைய தாய் மண்ணைச் சேர்ந்தவர்கள். எப்போதுமே, திரு.வி.க. சொன்னதைப் போல—



*'தமிழைப் போல் சிறந்த மொழி தரணியெங்கும் கண்டதில்லை*
*தமிழரைப் போல் மொழிக் கொலையில் தலை சிறந்தோர் எவருமில்லை'*

என்பதைத்தான் சுட்டிக்காட்ட வேண்டும். நம்முடைய இந்திய ஆட்சிப் பணியாளர்கள் இதைக் கவனத்தில் கொண்டு கண்டிப்பாக மாற்றங்கள் செய்வார்கள், இனிமேல் இப்படிப்பட்ட நிலைகளைச் சுட்டிக்காட்டுவதற்கு இடம் தர மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

5-ஆம் வகுப்பு வரை தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று கொண்டு வந்ததைப் பற்றி 'தமிழன் எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிகைகள் எல்லாம் பெரிதும் பாராட்டி எழுதியிருக்கின்றன, நம்பிக்கையோடு மெல்லத் தமிழ் இனி வாழும்" என்று. அதையும் நான் அதிகமாகப் படிக்க நேரமில்லை என்பதால் ஒரே வரியில் சொல்கிறேன். இவற்றை எல்லாம் மனதில் கொண்டு 5-ஆம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் பாடமாக்கினார் முதல்வர் என்றும், ஏற்கெனவே ஒரு தலைமுறை நர்சரி கலாச்சாரத்தால் தமிழைத் தள்ளி வைத்து விட்டது, இனியும் அது நிகழாது இருக்க வேண்டும் என்று கவனத்தோடு எழுதியிருக்கிறது. எனவே அதையும் நாங்கள் கவனத்தில் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக மழலையர் பள்ளிகளில், அது மாண்புமிகு பேராசிரியர் அவர்களுடைய நேரடித் துறையில் வந்தாலும், அது தொடர்பாக நாங்களும் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளுக்கு ஏற்ப இன்றைக்கு அவர்களும் கவனமாக என்னுடனும், நம்முடைய பேராசிரியர் அவர்களுடனும் பேசி தக்க முடிவுக்கு வந்திருக்கிறார்கள். விரைவில் நல்ல மாற்றங்கள் ஏற்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதை அந்த அளவோடு விட்டு விட்டு, விளம்பரப் பலகைககளில் தமிழ் என்பதைப் பற்றி நேற்று நம்முடைய உறுப்பினர்கள் பேசி, நமது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அதுகுறித்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய துறை தொழிலாளர் நலத் துறைதான். நம்முடைய முதல்வர் அவர்களும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் எனக்கு ஒரு வருத்தம். வெளிநாடுகளிலே இருக்கிற தமிழர்கள் எல்லாம் மிகச் சிறந்த ஆற்றலோடு இதைச் செயல்படுத்த வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால் உள்நாட்டில் இருக்கிற தமிழர்கள் இதைப்பற்றிக் கவலைப்படாமல் எந்தவித அக்கறையும்

இல்லாமல் இன்னும் மெத்தனம் காட்டுகிறார்கள். என் கையில் இருக்கிற தாள் சிங்கப்பூரைச் சார்ந்தது. அவர்கள் நகைக்கடையில் 'அணி மணி பொற்சாலை' என்று தமிழில் எழுதி வைத்ததோடு மட்டுமல்லாமல், ஆங்கிலத்திலும் "Ani Mani Porchalai" என்று எழுதியிருக்கிறார்கள். ஏதோ நாங்கள் எல்லாம் சொல்லி எழுதினார்கள் என்று நாங்கள் பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது. காரணம், அந்த நிறுவனம் 1948-லே தொடங்கப்பட்டு இன்றுவரை அந்தப் பெயரைத் தாங்கி இருக்கிறது என்பதுதான் சிங்கப்பூர் தமிழருக்கு இருக்கிற பெருமை.

பிற்பகல் 12-10

அடுத்து, மலேசியாவில் இருக்கிற தமிழர்கள் குறித்த விவரம் என் கையில் இருக்கிறது. 'தாமரை உணவகம்' என்று பெரிய எழுத்துக்களிலே எழுதிவிட்டு அதற்குப் பிறகுதான் ஆங்கிலத்திலே கீழே எழுதுகிறார்கள்; இது கோலாலம்பூரில். எனவே இப்படிப்பட்ட நிலை அங்கே இருக்கிறது.

அடுத்து, கனடா குறித்த செய்திக்கு உங்களை நான் கொஞ்சம் நேரம் அழைத்துச் செல்ல வேண்டும். இங்கே இருக்கிற சிக்கலைப்போல கனடாவினுடைய கியூபெக் மாநிலத்தில் ஒரு சிக்கல். அங்கே அதிகமாக வாழ்பவர்கள் பிரெஞ்சு மொழியினர். சிறுபான்மையினர் ஆங்கிலேயர்கள். கியூபெக் மாநிலத்தில் மட்டும் அங்கே அந்த மாநிலத்திற்கு இருக்கின்ற தன்னாட்சி உரிமையின் காரணமாக அவர்கள் ஒரு சட்டம் போட்டார்கள். பிரெஞ்சு மொழியில் மட்டும்தான் விளம்பரப் பலகைகள் இருக்க வேண்டும், ஆங்கிலத்தில் இடம்பெறக்கூடாது என்று சட்டம் போட்டார்கள். அப்படிச் சட்டம் போட்டதை எதிர்த்து அங்கே இருக்கிற சிறுபான்மை ஆங்கிலேயர்கள்—மறந்துவிடக்கூடாது—உச்சநீதிமன்றத்திற்குப் போனபோது உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. தெளிவாக அதை அப்படியே படித்து விடுகிறேன். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைவாக கியூபெக் மாநிலத்தின் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் பிரெஞ்சு மொழியிலும், ஆங்கில மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. அதாவது, முதலில் மேலே பிரெஞ்சு மொழியில் பெரியதாகவும்—இதை மிகவும் கவனிக்க வேண்டும். நாம் போட்ட அதையேதான்—அதற்குக் கீழே ஆங்கிலத்தில் சிறிய எழுத்துக்களில் எழுதப்படவேண்டும். இதைச் சுட்டிக்காட்டி அங்கே இருந்து எழுதிய





நண்பர் கரிகாலன் தெளிவுபடுத்தியிருக்கிறார். 'உள்ளபடியே நான் தமிழகத்தைப் பாராட்டுகிறேன்' என்று சொல்லிவிட்டு, தமிழுடன் ஆங்கிலமும், அவசியமானால் பிற மொழிகளும் இருக்கலாம் என்பது தமிழகத்தின் நாகரீகமான நிலைப்பாடு ; ஆனால் கியூபெக் மாநிலத்தின் நிலைப்பாடு; ஆங்கில துவேசத்தின் வெளிப்பாடு என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே நாங்கள் ஆங்கிலத்திற்கு எதிரிகள் அல்ல. நாங்கள் ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருக்கிறோம்.: 'ஆங்கிலத்தைக் கற்கையிலும், அயல் மொழியைக் கற்கையிலும் எந்த நாளும் தீங்கனியை, செந்தமிழை, தென் நாட்டின் பொன்னேட்டை உயிராய்க் கொள்வீர்' என்பதுதான் எங்களுடைய கொள்கையே தவிர அதற்கு நாங்கள் மாறுபட்டவர்கள் அல்ல. இன்னும் சொல்லப்போனால், ஆங்கிலத்தில் முழுமையாகப் பயின்று, ஒரு பாடமாக அதைப் பயின்று, அதில் முழுத் தேர்ச்சி பெற்று தமிழனுடைய வரலாற்றை, தமிழ் இனத்தினுடைய மேம்பாட்டை உலகம் முழுவதும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய குறிக்கோள். எனவே அதற்குரியவர்கள் இந்த ஆங்கிலத்தை முழுமையாகப் படிக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை குழந்தைகளையும் இங்கிலாந்திற்கு அனுப்புகிற முயற்சியில் நாம் இறங்கக்கூடாது. அப்படி அனுப்பவும் முடியாது. எனவே அதை ஒரு பாடமாகப் படிக்கின்ற வாய்ப்பைப் பெறுவோம் என்று சொன்னால்—என்னுடைய மாணவர் ஒருவர் தமிழ் இளங்கலை படித்து, தமிழ் முதுகலை படித்து, இந்திய ஆட்சிப் பணித் தேர்வைத் தமிழிலேயே படித்து, தமிழிலேயே எழுதி வெற்றிபெற்றிருக்கிறார். தமிழ் இலக்கியத்தில் வெற்றி பெற்ற ஒரே ஒருவர் அவர்தான். அவர் இன்றைக்கு ஆங்கில மொழியிலும் சிறப்பாகப் பேசுகின்றார். ஒரிசா மாநிலத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் ஒரிய மொழியைக் கற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், ஒரிய மொழியிலே கவிதை எழுதவும் கற்றிருக்கிறார். எனவே எந்த மாநிலத்தில் நாம் வாழ்கிறோமோ அந்த மாநிலத்திற்கு ஏற்பவும் மொழியைக் கற்றுக் கொள்ள முடியும். எங்கே போனாலும் இந்த மொழியைக் கற்றுக் கொண்டு சிறப்புப் பெற முடியும் என்பதை நாம் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் இந்த முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. எனவே, இதுபோன்ற பல்வேறு துறைகளில் நாங்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு உங்களுடைய முழு ஒத்துழைப்பு வேண்டுமென்பது மட்டுமல்லாமல்

அந்த ஒத்துழைப்பைத் தருகின்றபோது நாங்கள் வேறு சில துறைகளில் ஊடுருவி, தருகின்ற அன்புத் தொல்லைகளுக்கு அனைத்து அமைச்சர்களும் எங்களுக்கு முழு ஒத்துழைப்பைத் தந்து. அதே நேரத்தில் அந்த ஒத்துழைப்பை எங்களுக்குச் செயல்பாடுகளாக, அரசாணைகளாகப் பிறப்பித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொடுத்தால்தான் அதன் அடிப்படையில் நாங்கள் செயல்பட முடியும். மற்றபடி இந்தத் துறையில் இருந்து செயல்படுவது என்பது, நான் சொன்ன குறிப்பிட்ட துறைகளில் மட்டும்தான். எனவே, தமிழை அப்படிக் கொண்டுவருகிறபோது விரிவாகச் செயல்படுகின்ற வாய்ப்பைப் பெறுவது மட்டுமல்லாமல், முதல்வர் கலைஞர் அவர்கள் மீண்டும் இதிலே ஒரு முத்திரையைப் படைத்திருக்கிறார்கள். எப்படி என்றால், வள்ளுவர் கோட்டத்தை நிறுவி ஒரு காலத்தில் சிறந்த முத்திரையைப் படைத்தார். பூம்புகார் கலைக் கூடத்தை நிறுவி, ஒரு எழு நிலை மாடத்தை நிறுவி, சிறந்த முத்திரையைப் படைத்தார். இப்போது எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க அத்தனை அமைப்புகளையும், தமிழ் வளர்ச்சியோடு தொடர்பு இருக்கின்ற அத்தனை அமைப்புகளையும், ஓவிய நுண்கலைக் குழு, தொல்பொருள் ஆய்வுத் துறை, தமிழ் வளர்ச்சி இயக்ககம், இவைகள் அனைத்தையும் ஒரே கட்டடத்தில் வரும்படி அருங்காட்சியக வளாகத்திலே அமைப்பதற்காக மாண்புமிகு கலைஞர் அவர்கள் 2 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் இப்போது பெருமையாகச் சொல்லிக்கொள்கிறேன். இந்த இரண்டு கோடி என்பது ஒப்பளிக்கப்பட்டதாகும். இந்த ஆண்டுக்கு 80 லட்ச ரூபாயை எடுத்துக் கொடுத்து இதை எழு நிலை மாடமாக உருவாக்குங்கள், எப்படி பூம்புகாருக்கு எழுநிலை மாடமோ, அதைப்போல சென்னை அருங்காட்சியகத்திலே 'தமிழ் வளர்ச்சி வளாகம்' என்ற பெயரில் ஒரு எழு நிலை மாடத்தை உருவாக்குங்கள் என்று அன்புக் கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். உள்ளபடியே சொல்கிறேன், இந்த ஆட்சி தொடங்குவதற்கு முன்னால் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை 9 கோடி. கடந்த முறை மானியக் கோரிக்கையில் நான் கோரியது 12 கோடி. இந்த முறை மானியக் கோரிக்கையில் இருப்பது 16 கோடி. ஆனால், *முதல்வர் கலைஞர் அவர்கள் டெல்லியிருந்து திரும்பி வந்து, இந்த இரண்டு நாட்களுக்குள் எங்களுக்கு மேலும் வழங்கியது 4

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



கோடி ரூபாய். எனவே, 9 கோடியில் இருந்ததை 20 கோடியாக உயர்த்திய முதல்வர் அவர்களை வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பொறிப்பதற்கு யாரும் தயங்க மாட்டார்கள். காரணம், அவரைப் போன்றவர்கள் எந்த உணர்ச்சியோடு செயல்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினால்தான், அந்த உணர்ச்சிகள் என்றைக்கும் தொய்வின்றித் தொடருகின்றன என்பது புரியும்.

பிற்பகல் 12-15

1973-ல் *முதல்வர் கலைஞர் அவர்களே, ஒரு கருத்தரங்கத்தில் பேசியதை நான் சுட்டிக்காட்டி முடிக்க விரும்புகிறேன். "நான் தமிழ், தமிழ் இனம், தமிழ்ச் சமுதாயம் என்று சொல்லி ஏதோ தனித்த இன உணர்ச்சியைக் கிளப்பி விடுவதாகக் கருதக்கூடாது. எந்த நிலையில் நான் இதைச் சொல்கிறேன் என்றால், விருகம்பாக்கம் மாநாட்டில் அறிஞர் அண்ணா எதைக் கோடிட்டுக் காட்டினாரோ, தமிழ் மரபு, தமிழன் பெருமை. இவைகளைக் காப்பாற்றத்தான் ஒரு ஆட்சி தேவை என்று சுட்டிக்காட்டினாரோ, அந்த இழையிலேதான் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ் நாடு—ஆம் தமிழை நாடு, தமிழ்க் கலாச்சாரத்தை நாடு, தமிழ்ப் பண்பை நாடு, தமிழ் உணர்ச்சியை நாடு, தமிழ் இலக்கியத்தை நாடு, தமிழ் உயர்வை நாடு என்பதற்காகத்தான் இந்த ஆட்சி அமைந்திருக்கின்றது. தமிழ் நாடு என்பதை ஒரு நிலத்தின் பெயராகக் கருதாதீர்கள். நமக்கு நாமே சொல்லிக் கொள்ளும் ஒரு அறிவுரை என்று கருதுங்கள். ஆகவே, தமிழ்ச் சமுதாயத்தைப் பேணிக் காப்பாற்றுவீர், அந்தத் தமிழ்ச் சமுதாயம் உலகத்தில் ஒரு காலத்தில் இருந்ததைப்போல இல்லாமல் இன்று மங்கிக் கிடக்கிறது. (நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கவலைப்பட்டதைப் போல)— அதை மீண்டும் ஒளிபெறச் செய்ய நாம் பாடுபட்டாக வேண்டும். அதற்கு வருகிற இடையூறுகளையெல்லாம் களைந்தாக வேண்டும். அந்த உறுதியை, அந்தச் சூளுரையை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று" குறிப்பிட்டு இருக்கிறார். அந்த அடிப்படையில் உள்ளபடியே ஊண் உறக்கம் இல்லாமல் 24 மணி நேரமும் மொழியை, இனத்தை, நாட்டைப்பற்றிச் சிந்திக்கிற *முதல்வர் கலைஞர் என்ற முறையில் கவிஞர் லாங் பெல்லோ குறிப்பிடுவதைக் கூற விரும்புகிறேன்:

"The height by great men reached and kept were not attained by sudden flight but while their companians slept, were toiling about by

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

night" என்று குறிப்பிட்டிருக்கிறார். இதைத் தமிழிலேயே சொல்லலாம். கண்ணதாசன் சொன்னதையே சொல்லி நான் முடிக்க விரும்புகிறேன். கண்ணதாசன் அவர்கள் தன்னுடைய அருமைத் தோழர், கலைஞரைப் பற்றிச் சொன்னார்.

"ஊர் உறங்கும் வேளையிலும், உள்ளம் உறங்காதான்
யார் மயங்குபோதினிலும் தான் மயங்கவில்லான்
சீர் விளங்கும் வீரர், புவிப்பேர் விளங்க வந்தான்,
வீரன் கருணாநிதி, எவ்வூரிலும் எழுந்தான்
இன்றைக்கு டெல்லியிலும் எழுந்தான்"

என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு அமர்கிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவிற்கு வாருங்கள்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன். 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பிறகு தமிழைக் காக்க சிறை சென்ற அந்தத் தியாகிகளுக்கு இன்னும் 32ஆண்டு காலமாக மானியம் வழங்கப்படாமல் உள்ளது. தமிழைக் காக்கச் சிறை சென்ற தியாகிகளுக்கு, சிறை சென்றவர்களுக்கு மானியம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் புரிந்துகொண்டேன்—இதுகுறித்து ஏற்கனவே வினா நேரத்தில் விடை சொல்லப்பட்டிருக்கிறது. அதுவே இப்போதும் விடை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி



**மாண்புமிகு திரு. பரிதி இளம் வழுதி(பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு சிறிய விளக்கம். பொருத்தமான அமைச்சர் என்பதால், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரிடம் கேட்க விரும்புகிறேன். தற்போது தமிழ்நாட்டிலே ஆறு மேயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தின் மேயர் என் அருகிலேயே இருக்கிறார். இந்த 'மேயர்' என்பதற்கு சரியான தமிழ்ச் சொல் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பொருத்தமான நேரத்தில் எழுப்பியமைக்காக என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். 'மே' என்பது ஆங்கிலத்தில் ஏற்கெனவே இருப்பது போல ஆங்கிலச் சொல்லினுடைய மூலமாக இருந்தாலும், தமிழிலும் 'மே' என்பதும் 'மேன்மை' என்பதும் அடிப்படைச் சொற்களாக அறிகின்றன. ஏற்கெனவே, நாம் ஒரு சொல்லை உருவாக்குகின்றபோது, அதனுடைய வேர்ச் சொல்லைத்தான் அமைப்பாக வைத்து ஒரு சொல்லை உருவாக்குகிறோம். 'Basic Vowel Root' அந்த அடிப்படையில் 'மே' என்பது 'மேன்மைக்குரியது'. 'எனவே, நாங்கள் கூட தொடக்கத்திலே கருதினோம், இதை 'மேன்மையர்' என்று போடலாமா என்று. ஆனால் நான் விளையாட்டிற்குச் சொல்லவில்லை. பாவாணர் அவர்களே இது பற்றி எங்களிடத்திலே உரையாற்றுகிறபோது, 'இதை அப்படியே நாம் எடுத்துக் கொள்ளலாம்' என்று கூறியிருக்கிறார். 'மேயர்' என்பது ஆங்கில வடிவத்தில் அப்படி வந்தால், தமிழ் வடிவத்திலும் 'மேயர்' என்பதே பொருத்தமான தமிழ்ச்சொல் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறார். எனவே, 'மேயரே' தமிழ்ச்சொல் என்று எடுத்துக் கொண்டு அது மேன்மையர் என்பதனுடைய சுருக்கம் என்று எடுத்துக் கொண்டு, 'மே' என்றாலே 'மேன்மை' என்று எடுத்துக் கொண்டு, எனவேதான் 'வணக்கத்திற்குரிய மேயரை' நாங்கள் 'வணக்கத்திற்குரிய மேயராகவே' அழைக்கிறோம் என்று கூறி அமைகிறேன்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலிலே பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லாமல் விட்டுவிட்டார்கள். நேற்றையதினம் பேச அனுமதித்திருந்தால் இவ்வளவு நேரம் பேசி இருக்க முடியாது.

[பேரவைத் தலைவர்] [1997 ஏப்ரல் 17

இரண்டாவதாக, கடந்த 10 மாத காலமாக நம்முடைய ஆலயங்களிலே தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்று சொல்வதை வன்மையாகக் கண்டித்து நானே ஒரு போராட்டம் துவங்குவேன் என்று பல மேடைகளிலே பேசியிருக்கிறேன். அதற்கு நல்ல பதிலைத் தரும் வகையில் அதை மாற்றியமைத்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சிறிய திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பேச்சிலே செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவகையிலே நான் அவருடைய விசிறி. ஆகவே, நேரம் போனதே தெரியாமல் அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தேன். இருந்தாலும், இந்த அவையினுடைய மரபின் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் எந்தெந்த இடங்களிலே * கலைஞர் என்று சொன்னார்களோ, அவை அத்தனையையும் 'முதல்வர் கலைஞர்' என்று மாற்றிக் கொள்ள வேண்டுமென்று இப்போது நான் உத்தரவிடுகிறேன் விவாதம் முடிவுற்றது.

### (அ) கோரிக்கை எண் 51. தமிழ் வளர்ச்சி பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது வாக்கெடுப்பு, கோரிக்கை எண் 51 — தமிழ் வளர்ச்சி பண்பாடு.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்:

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



1997 ஏப்ரல் 17]

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.16,88,39,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 4. அறிவிப்பு

### தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் — (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 17

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவினைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு.ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.



1997 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம். என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவினைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவினைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவினைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 31— பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 64,32,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2504, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவசப் பட்டா வழங்கி அவர்களுக்குத் தொகுப்பு வீடுகளைக் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 64,32,32,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2494, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் சமூகப் பிரிவு மாணவர் தங்கும் விடுதிகளில் மாணவர்களுக்கு வழங்கும் உணவு உதவிப்படி நாள் ஒன்றுக்கு ரூ.15/-க்குக் குறையாமல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 64,32,32,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2496, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'திருவள்ளுவர் மாவட்டம், ஆண்டிமடத்தில் புதிதாக மகளிர் விடுதி அமைய வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 64,32,32,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2488, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எடப்பாடி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக உள்ளதால், சித்தூர், கோனேறிப்பட்டி, பூலாம்பட்டி, செட்டிமாங்குறிச்சி, சமுத்திரம் ஆகிய ஊர்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து பயில மாணவ, மாணவிகள் தங்குவதற்காக மேற்கண்ட ஊர்களில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி துவங்கப்பட வேண்டியதன்

அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,32,32,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2899, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் போன்ற அனைத்து சமுதாயத்திற்கும்' வீடு இல்லாத ஏழைக் குடும்பங்களுக்கும் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கி தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,32,32,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2513, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், சி.முட்லூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,32,32,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2523, திரு. பி. வெங்கடசாமி.



**THIRU B. VENKATASAMY:** Hon'ble Speaker, Sir,

'To discuss the need to include Vakkaliga Community in the list of Most Backward Class due to their economical and educational backwardness' I move—

"That the sum of Rs. 64,32,32,000/- allocated under Demand No.31—Welfare of the Backward Classes, Most Backward Classes and Denotified Communities, be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதில் தமிழிலே அச்சடிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதன்மீது, தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்க இருக்கின்றது. விவாதத்தைத் தொடங்குவதற்கே 12-30 மணியாகிவிட்டது. ஆகவே உறுப்பினர்கள் அனைவரும் 2-00 மணிக்குள் தங்கள் கருத்துக்களைச் சொல்லி, 2-00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 12 உறுப்பினர்கள் பேச விருப்பம் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, கண்டிப்பாக எந்த உறுப்பினருக்கும் 7 நிமிடத்திற்குமேல் கொடுக்க முடியாது என்பதை இப்போதே தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலிலே திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

---

@ 431 முதல் 453 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[1997 ஏப்ரல் 17

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக நமது மானியக் கோரிக்கைக் குறிப்பிலே, மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை அமல் செய்து, 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுப்பதை இந்த அரசு கடமையாகக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்த 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைப் பாதுகாத்திட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது கண்டு நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

நமது செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் "துணை மக்கள் தொடர்பு அதிகாரிகள்" நியமிக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். துணை மக்கள் தொடர்பு அதிகாரிகளை பணியில் அமர்த்தும்போது, மிகவும் பிற்படுத்தப்பட்ட முத்தரையர் இனத்தைச் சேர்ந்தவர்களையும், பிறமலைக்கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்களையும் நியமிக்க வேண்டும். ஏ.பி.ஆர்.ஓ. பணிகளில் இவர்களை அமரச் செய்வதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு கன்ஃபர்டு ஐ.ஏ.எஸ். கொடுப்பதற்கும் நீங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்தத் தகுதிக்கு போட்டி போட்டு, வெற்றி பெற்று வருவதற்கு முடியாமல் இருக்கின்றார்கள். ஆகவே இதை அரசு உணர்ந்து அவர்களுக்கு இந்தத் தகுதியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர்மரபினருக்கும் 20 விழுக்காடு ஒதுக்கியுள்ளீர்கள். அதிலே முன்னேறிய சமுதாயத்தினர்கள் அதிகமான பயன்களை அடைகிறார்கள். அதிலே தமிழ்நாடு மருத்துவர்கள், வண்ணான்கள் மற்றும் முத்தரையர்கள்—இதுபோன்ற சாதியினர்கள்—இந்தப் போட்டியிலே கலந்துகொண்டு பலன் இல்லாமல் இருக்கிறார்கள். இந்த 20 விழுக்காட்டிலே 10 விழுக்காடு கல்வி, வேலை வாய்ப்பிலே அவர்களுக்கு ஒதுக்கிட சட்டம் இயற்றுவதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



1997 ஏப்ரல் 17] [திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்]

பிற்பகல் 12-30

மேலும், கல்லூரிக் கல்வித் துறையிலேயுள்ள விடுதியிலே பணிபுரியும் காப்பாளர்களுக்கும் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு தொழில் தொடங்குவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையிலே தனி நிதியம் ஒன்று தொடங்கி அதன்மூலம் புதிய தொழில்களை தொடங்குவதற்கு வசதியாக கடன்வசதி செய்துதர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த இளைஞர்கள் கூட்டு முயற்சியில் தொழில் தொடங்குவதற்கு, அந்த வட்டாரங்களிலே உள்ள திறமை மற்றும் வளங்களை வைத்து ஒரு தொழில் மையம் அமைத்து, அதன்மூலம் ஏற்றுமதி செய்வதற்குரிய வாய்ப்பை வழங்கினால், அங்குள்ள பிற்படுத்தப்பட்ட இனத்தவருக்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களுக்கு பல்வேறு துறைகளில் இருக்கும் காலி இடங்களில் முன்னுரிமை அடிப்படையிலே பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளை அதிகம் திறந்து, அங்கு பயிற்சி நிலையங்களை உருவாக்க வேண்டும். அதாவது டியூஷன் சொல்லித் தருவது மாதிரி, தொழில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை அவர்கள் பெறுவதற்கு அடிப்படை வசதிகளை அந்த விடுதிகளிலே செய்வதற்கு அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது மாணவ மாணவிகளுக்கு 85 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அது பற்றாக்குறையான தொகையாகும். ஆகவே மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 100 ரூபாயாவது மாணவ மாணவிகளுக்கு கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உங்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே உள்ள குரும்பர் இனத்தவரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்த்து இருக்கிறீர்கள். ஆனால், அவர்கள் இன்னும் அதிகமாக இருப்பதால் (மணியடிக்கப்பெற்றது) அவர்களை பட்டியல் சாதியிலே சேர்த்து, அவர்கள் முன்னேற்றம் அடைவதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்திலே குறவர்கள் மற்றும் காட்டுநாயக்கர்கள் என்ற இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அவர்களை நமது அரசு அங்கீகாரம் செய்து, மதுரை மாவட்டத்திலே அவர்களுக்கு கம்யூனிட்டி சர்ட்டிபிகேட் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மணி என்பவரை தமிழ்நாடு அரசு தேர்வாணையத்திலே உறுப்பினராகச் சேர்த்ததற்கு முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மதுரையிலே போன வருடம் கக்கன் சிலை வைப்பதற்கு நடவடிக்கையை மேற்கொண்டார்கள். இப்போது முதல்வர் அவர்கள் அந்த சிலையை திறந்து வைத்து திரு. கக்கன் அவர்களுக்கு பெருமை தேடித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது சில விவரங்களைச் சுருக்கமான நேரத்தில் சொல்லி முடிக்க விழைகிறேன். முதலாவதாக, ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு வழங்கியிருக்கின்ற வேலை ஒதுக்கீடு என்பது இன்று சரியாக இருந்தாலும் அதுகுறித்து நீதிமன்றங்களுக்குப் போய், அதற்குத் தடையாணை வாங்கிவிடுகிறார்கள். அதை நீக்குவதற்கான உரிய நடவடிக்கை அரசின் சார்பில் எடுக்கப்பட வேண்டும். அது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. அடுத்தது, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தங்கும் விடுதி பற்றாக்குறை இருக்கிறது. அதிகப்படியான விடுதிகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இப்போது இருக்கக்கூடிய விடுதிகளின் உள்ளே போய் பார்த்தால் யாரும் குடியிருக்க முடியாது. அந்த அளவுக்குப் படுமோசமான நிலையில் இருக்கிறது. எனவே அதை நல்ல முறையில் பராமரிக்க உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

மாவட்டங்களில் வீட்டுமனை வழங்குகிற ஒரு ஏற்பாடு சம்பந்தமாக ஏற்கெனவே பழங்குடியினர் பற்றி விவகாரம் வந்தபோது இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நில ஆர்ஜிதம் செய்வது





பற்றியெல்லாம் சொன்னார்கள். என்னுடைய வேண்டுகோள் எல்லாம் என்னவென்றால் நில ஆர்ஜிதம் செய்யும்போது அதனுடைய சொந்தக்காரர்கள் நீதிமன்றங்களுக்குப் போய்விடுவதால், அது வருடக்கணக்கில் தாமதமாகி காலாவதியாகிவிடுகிறது. அரசாங்கத்தின் புறம்போக்கு நிலங்கள் பல்வேறு பகுதிகளில் ஏராளமாக இருக்கின்றன. தவறான கிளாசிபிகேஷன் காரணமாக, அந்தப் புறம்போக்கு நிலங்களை எடுத்துக் கொள்ள முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மனை வழங்குகிறபோது ஒரு பகுதியில் உள்ள நிலங்களை எடுக்கும் முன்பாக, நில ஆர்ஜிதம் என்ற நிலைக்குப் போகாமல், அந்தப் பகுதியில் இருக்கிற அரசு நிலங்களை எடுத்து, கிளாசிபிகேஷனை மாற்றி, வழங்கினால் போதும். அதாவது, இப்போது ஏரிப் புறம்போக்கு என்று வைத்திருக்கிறார்கள் என்றால், அங்கே ஏரியே இருக்காது, அந்த ஏரியை பிளாட் போட்டு வசதி படைத்தவர்கள் விற்றுவிட்ட நிலைமைதான் இருக்கிறது. ஆனால் ரிக்கார்டில் ஏரிப் புறம்போக்கு என்று இருக்கும். இவைகளைக் கண்டறிந்து எடுத்தாலே, நில ஆர்ஜிதம் செய்யாமலேயே விஷயங்களை உரிய காலத்தில் செய்து முடிக்க முடியும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்தது மாணவர்களுக்கு வழங்குகிற உதவித் தொகை. நாம் ஒரு நாளைக்கு இரண்டு காப்பி சாப்பிடுவதென்றாலே மூன்றும், மூன்றும் 6 ரூபாய் ஆகிவிடும். ஆனால் அந்த மாணவர்களின் செலவுக்காகக் கொடுக்கிற உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு 150 அல்லது 180 ரூபாய்தான். ஆகவே குறைந்தபட்சம் பள்ளி மாணவர்களுக்கு ஒரு நாளைக்கு 10 ரூபாயும், கல்லூரி மாணவர்களுக்கு ஒரு நாளைக்கு குறைந்தபட்சமாக 15 ரூபாயும் தரக்கூடிய அளவுக்கு உயர்த்தலாம். இதைச் செய்தால் நாம் அவர்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய உதவியாக இருக்கும். அந்த அடிப்படையில் நாம் இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் கூட 198 ரூபாய், 180 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்ததாக பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்குகிற கருவிகள் சம்பந்தமாகச் சொல்ல வேண்டும். இவைகள் காலாகாலத்தில் கொடுக்கப்படவில்லை என்ற கருத்து இருக்கிறது. சரியான நேரத்தில் கொடுப்பதாக குறிப்புகளில் இருக்கிறது. குறிப்பாக என்ன நடக்கிறது என்றால், இஸ்திரிப் பெட்டி, மற்றும் கல் உடைக்கும் கருவிகள் என்று சொல்லப்பட்டிருந்தாலும், அதை வழங்க அமைச்சர் பெருமக்கள் வருவதாகச் சொல்லி, அதற்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

[திரு. டி. மணி] [1997 ஏப்ரல் 17

தூத்துக்குடிக்கு இங்கேயிருந்து சென்ற ஒரு குழு போய் பார்வையிட்டபோது, அந்த வளாகத்தில் பரண் மேல் 200 அயர்ன் பாக்ஸ் வீணாகி, தூசு படிந்து இருக்கிறது என்று இங்கே கொடுக்கப்பட்ட ஒரு அறிக்கையிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அமைச்சர் பெருமக்கள் வருகைக்காகக் காத்திருக்காமல் உரிய காலத்தில் அந்தக் கருவிகளை விநியோகம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தூத்துக்குடியில் அந்த விடுதி ஒன்றின் பரண் மேல் 200 அயர்ன் பாக்ஸ் தூசு படிந்து வைக்கப்பட்டிருந்தது என்பது கடந்த காலத்தில் நடந்த சில நல்ல காரியங்களுடைய அறிகுறி. ஆகவே, அதிலே நாம் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டமாதிரி விடுதிகளைச் சரிவர பராமரிக்க வேண்டும். மனிதன் குடியிருக்கிற மாதிரி இருக்க வேண்டும். மாணவர்கள் தங்கக்கூடிய விடுதியை நம்முடைய அமைச்சர் பெருமக்கள் சென்று பார்த்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை மட்டும் இங்கே சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பாட்டாளி வர்க்கம் என்பது உழைப்பின் சின்னமாகும். அதனாலே இது பிற்படுத்தப்பட்ட வகுப்பாகிப்போனது என்பதே இமாலய உண்மை. அதைப்போல

'காலுக்கு செருப்பும் இல்லை, கால் வயிற்றுக்கு ஊணும் இல்லை
ஜீவனுக்கு உழைத்தோமடா தோழா'

என்று ஜீவா அவர்கள்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'வீணுக்கு உழைத்தோமடா விழலுக்கு இறைத்தோமடா..' என்று சொல்லுங்கள்.



1997 ஏப்ரல் 17]

**திரு. ஜி.கே. மணி:** விளக்கத்திற்கு நன்றி. நான் அதைச் சுருக்கி விட்டேன். ஜீவா அவர்களுடைய பாடல் மட்டுமல்ல, பிற்பட்டோருடைய நிலையும் அப்படியே இருக்கிறது என்பதை இங்கே சொல்கிற நேரத்தில்..

'தாமரை பூத்தத் தடாகங்களே
நீங்கள் தழைத்த அக்காலத்திலே
எங்கள் ஊர்த்தொழிலாளர் தூர்ந்து மடிந்ததை
சொல்லவா இந்த ஞாலத்திலே..'

என்று பாரதிதாசன் அவர்கள் வடித்த கண்ணீரும் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. ஆகவே, பிற்படுத்தப்பட்டோர் நலன் என்பது உழைக்கும் வர்க்கத்தினரின் நலன். எனவே உழைக்கும் வர்க்கத்தினரின் நலனைப் பற்றி இங்கே விளக்கமாகச் சொல்வதற்கு, இடஒதுக்கீடு முறையைப்பற்றி பேசுகிற நேரத்தில், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூடுதலாக நேரம் ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலன் பற்றி வள்ளுவர் கூட அழகாகச் சொல்கிறார்.

'கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி'

என்று அதாவது கொடை உள்ளம், அருள் தன்மை, நேர்மையான ஆட்சி, தளர்ந்த பின்தங்கிய குடிகளைப் பேணுதல் ஆகிய நான்கு நல்ல அம்சங்களை உடைய அரசன்தான் இந்த நாட்டிலே இருக்கிற அரசர்களுக்கு எல்லாம் ஒளி ஆவார்கள், விளக்கு ஆவார்கள் என்று அழகாக திருவள்ளுவர் கூறி இருக்கிறார்.

ஆகவே, இன்றைக்கு நமது அரசானது பிற்படுத்தப்பட்டோர் நலனில் மிகவும் அக்கறை செலுத்துகிற இந்த நேரத்தில் நல்லபல ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்காக எவ்வளவு எல்லாம் அரும்பாடுபட்டதோ அதைப்போலத்தான் இதற்கு முந்தைய வரலாற்றில் இந்த இட ஒதுக்கீடு என்று சொல்லக்கூடிய சமூக நீதிப் போரானது—பல காலகட்டங்களில் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து – இந்த நாட்டில் சுதந்திரப் போரைப் போல அதற்கு ஒரு உரிமைப் போரை நடத்தி, அதற்குப் பிறகு 1989-ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்

அவர்கள் அன்று ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் இந்த இட ஒதுக்கீடு கொள்கை வழங்கப்பட்டது என்பது நாடு அறிந்த உண்மை. அப்படி இருந்தாலும்கூட இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எங்களுடைய வழிகாட்டி, மக்கள் காவலர், மனிதநேயப் பற்றாளர், டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்கள் எவ்வளவு அரும்பாடுபட்டார்கள் என்பதையெல்லாம் இந்த நாடு நன்றாக அறியும். ஆகவே, அந்த வழியிலே பல்வேறு தியாகங்களைச் செய்து, பல உயிர்த் தியாகங்களைச் செய்து இந்த இட ஒதுக்கீட்டைப் பெற்றோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989-ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த இட ஒதுக்கீடு திட்டத்தை 107 ஜாதி மக்களுக்கு 20 சதவிகிதம் என்று அறிவித்த நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள். இப்போது இந்த நாட்டு மக்களுக்கு ஒரு மாங்கனியைத் தருகிறேன். அந்த மாங்கனியைச் சுவைத்துப் பார்த்துச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். இந்த நாட்டு மக்களாகிய நாங்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பின்தங்கிய மக்களாகிய நாங்கள் இந்த மாங்கனியைச் சுவைத்தோம். ஓரளவுக்கு தித்திப்பாக இருந்தது. நாங்கள் வரவேற்கிறோம். இருந்தாலும்கூட இது முழுமையாக சுவையளிக்கக்கூடிய மாங்கனியாக இருக்க மறுபரிசீலனை செய்து இதை மாற்றி அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டில் பின்தங்கிய மக்கள் என்று சொல்லக்கூடிய மிகவும் பின்தங்கிய மக்கள், சீர்மரபினர் ஏறக்குறைய பாதிக்கு மேல் என்று சொல்லக்கூடிய அளவுக்கு, 70 சதவிகிதம், 75 சதவிகிதம் அளவில் இருக்கிறார்கள். இவ்வளவு மக்கள் தொகையைக் கொண்ட இந்த மக்களுக்கு, 107 ஜாதி மக்களுக்கு 20 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்பது போதாததாக இருக்கிறது. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து 30 சதவிகிதமாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 30 சதவிகிதம் என்று சொன்னாலும்கூட 107 ஜாதி மக்களிலே வலிமை வாய்ந்தவர்கள் யாரோ அவர்கள் அதை எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றாலும்கூட, 107 பேரை நிறுத்தி 20 தேங்காயை வைத்துக் கொண்டு, ஓட்டப் பந்தயத்தில் எடுக்க வேண்டுமென்று சொன்னால், இதிலே வலிமை வாய்ந்தவர்கள் யாரோ அவர்களே எடுத்துக்கொள்ளக்கூடும். ஆகவே இதை மறுபரிசீலனை செய்து கம்பார்ட்மென்ட் ரிசர்வேஷன் என்று சொல்லக்கூடிய தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையை இங்கே அமல்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். கர்நாடக மாநிலத்தில்கூட அவ்வாறு இருக்கிறது. ஆகவே அதுபோன்ற தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையை இங்கே



அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம்கூட, கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், இந்த 69% இட ஒதுக்கீட்டிற்காகப் போராடியதுபற்றி நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இருந்தும்கூட இப்போது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைத்து 10 மாதங்கள் ஆகியும், இரண்டாவது கல்வியாண்டு தொடங்கி இருக்கிற இந்த நேரத்திலேகூட 69% இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படாமல் 50%-ல் இருக்கக்கூடியது வருத்தப்படத்தக்கது. அதைத்தான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 16(4) பிரிவு சொல்கிறது. மாநிலங்களே இட ஒதுக்கீட்டை வகுத்துக் கொள்வதற்கு அதிகாரம் இருக்கிறது என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் 16, பிரிவு 4 சொல்கிறது.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 16, உட்பிரிவு 4 என்று சொல்ல வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 16, உட்பிரிவு 4, மாநிலங்களுக்கு முழு அதிகாரம் இட ஒதுக்கீடு செய்வதற்கு இருக்கிறது என்பதைச் சொல்கிறது.

அதைப்போல அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 12, மாநிலங்கள் என்று சொல்கிற நேரத்திலே மாநிலச் சட்டமன்றங்களும், இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகள் வேண்டுமானாலும்கூட இந்த இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை வகுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறது.

ஆகவே மாநில அரசுக்கும் அதிகாரம் இருக்கிறது. உள்ளாட்சி மன்றங்களுக்குக்கூட அவர்களுக்குத் தேவையான வகையிலே இட ஒதுக்கீட்டை வைத்துக்கொள்ளக்கூடிய அதிகாரம் இருக்கின்ற இந்த நேரத்திலே உச்சநீதிமன்றத்திலே தீர்ப்பு இருக்கிறது என்று சொல்லி, அதை நம்முடைய மத்திய அரசும், மாநில அரசும் காலம் தாழ்த்தி இருப்பது நம்முடைய மக்களுக்குக் கிடைக்ககூடிய உரிமை பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு தலமைச்சர் அவர்கள் எப்பாடுபட்டாவது வரக்கூடிய கல்வி ஆண்டிலேயே இந்த 69% இட ஒதுக்கீட்டை முழுமையாக அமலாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேசுவதற்கு நிறைய இருக்கிறது, இட ஒதுக்கீட்டைப் பற்றிப் பேசுவதற்கு எங்களுக்கு கால நேரத்தை ஒதுக்கி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய, சீர்மரபினர், தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம் கிராமங்களிலே வாழ்கிறார்கள். இவர்களுக்கு குடிசை வீடு, கோரை வீடுகளைத் தவிர வேறு வழி கிடையாது. இந்த வீடுகளில் நிரந்தரமாக, ஒரு இடத்தில் வாழ்வதற்கு வழியில்லாத நிலை இருக்கிற காரணத்தால் நம்முடைய அரசாங்கம் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, சீர்மரபினருக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கக்கூடிய இலவச வீட்டுமனைப் பட்டாவை எல்லா இடங்களிலும் உடனடியாக, நிச்சயமாக வழங்க வேண்டும். அதேநேரத்தில், இது ஒரு நிரந்தரமான, பாதுகாப்பு அளிக்கக்கூடிய வீடு என்று சொல்லக்கூடிய வகையில் அங்கே கோரை வீடுகளே இல்லாத நிலையை உருவாக்கிட நம்முடைய அரசாங்கமானது பாதி மானியத் தொகையுடன்கூடிய கடனை வழங்கி கோரை வீடுகளை அகற்றக்கூடிய நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தனியார் பாலிடெக்னிக்குகளில் இட ஒதுக்கீடு முறையை பின்பற்றுவது கிடையாது. ஆகவே அரசு பாலிடெக்னிக்குகளில், ஐ.டி.ஐ. போன்றவற்றில் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றுவதுபோல... *(மணியடிக்கப்பெற்றது)* பேசுவதற்கு நிறைய இருக்கிறது. மேலும் 5 மணித்துளிகள் கொடுக்கவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் தொடங்குவதற்கு முன்னால், பேரவைத் தலைவர் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். எல்லோருக்கும் சரியாக 7 நிமிடங்கள்தான்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனியார் பாலிடெக்னிக்குகளில் அதிகமான மாணவர்கள் சேருகின்ற காரணத்தால் அங்கேயும் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டும். அதைப்போல மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் படிக்கின்றவர்கள்தான் எம்.பி.பி.எஸ்., பி.எஸ்.சி.(அக்ரி), பி.வி.எஸ்.சி. போன்ற பட்டப் படிப்புக்கு செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் கட்டாயம் இட ஒதுக்கீட்டு முறையை பின்பற்ற வேண்டும் என்று ஒரு ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மத்திய அரசினுடய சார்பு நிறுவனங்கள், மாநில அரசினுடைய சார்பு நிறுவனங்கள் என்று சொல்லக்கூடிய கூட்டுறவுத் துறை, போக்குவரத்துக் கழகங்கள் இன்னும் இருக்கக்கூடிய மின்துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் ஏற்படும் வேலைவாய்ப்புகளிலும், பதவி உயர்விலும் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல மாநில அரசிலே இருக்கக்கூடிய நெடுஞ்சாலைத் துறை, வணிகவரித் துறை போன்ற 4 துறைகளில் மட்டும் பதவி உயர்வில் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுகிறது. அதைப்போலவே எல்லாத் துறைகளிலும் பதவி உயர்வில் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை போன்ற ஒருசில பல்கலைக் கழகங்களில் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றுவதே கிடையாது. ஆகவே, அங்கே பேராசிரியர்கள், பணியாளர்கள் ஆகியோர்களை நியமனம் செய்யக்கூடிய நேரத்திலும், பதவி உயர்வு வழங்கக்கூடிய நேரத்திலும் இட ஒதுக்கீட்டு முறை முறையாகப் பின்பற்றப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. ஏழைகள் வாழக்கூடிய பகுதி. இங்கே வீட்டுமனைப் பட்டா இல்லாத...

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. இராமசாமி.

***திரு. வை. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயிரினும் இனிய தமிழக முதல்வர் அவர்களை வணங்கி நன்றி தெரிவித்து, ஊக்கம் அளித்து வரும் இனமானப் பேராசிரியர், அவை முன்னவர் அவர்களை நன்றி உணர்வோடு வணங்கி, உற்சாகமூட்டிவரும் சென்னை மேயர் தளபதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, பண்ருட்டி தொகுதிவாழ் மக்களுக்கு என் கடமையை உணர்ந்து, நன்றியைச் சமர்ப்பித்து என் உரையைத் தொடங்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லாவற்றையும் 7 நிமிடங்களுக்குள்ளே பேசி முடிக்கவேண்டும்.

**திரு. வை. இராமசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வியை ஊக்குவிக்கும் முகத்தான் நம்முடைய அரசு கல்வியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கல்விச் சலுகைகளையும், உணவுக் கட்டணங்களையும் வழங்கி, அவர்களுக்கு ஹாஸ்டல் வசதிகளையும் வழங்கி வருகிறது. அந்தமுறையில் பார்த்தால் நமக்கு இப்போது மொத்தமுள்ள அரசு நடத்தும் மாணவர் இல்லங்கள் 880, கடந்த ஆண்டு வரை. இந்த

ஆண்டு 62 கூடுதலாகக் கொடுத்து இருக்கிறார்கள். இவைகளிலே சொந்தக் கட்டிடங்களிலே இயங்குவது 138 தான். விடுதியைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு 9 விடுதிகளும், இந்த ஆண்டு 13 விடுதிகளும், ஆக மொத்தம் 22 விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. மொத்தத்தில் 742 புதிய கட்டடங்கள் இப்போது தேவைப்படுகின்றன. இப்போது கட்டிக் கொடுக்கின்ற முறையிலே போனால் இன்னும் 10, 15 ஆண்டுகளிலேகூட இவைகளை முழுமையாக கட்டி முடிக்கப்பட முடியாத நிலைமை ஏற்படும். எனவே, ஹட்கோ, எல்.ஐ.சி. உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களோடு தொடர்புகொண்டு, அவர்களுடைய உதவியைப் பெற்று, பேஸ்டு மேனர் என்ற முறையிலே 3 அல்லது 5 ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கவேண்டும் என்ற முனைப்போடு இந்த அரசு செயல்படுமானால் தேவையான விடுதிகளைக் கட்டி முடித்து விடலாம் என்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு சென்ற ஆண்டு 45 விடுதிகளை ஏற்படுத்தியமைக்காக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்தச் சமூகத்தின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறைக்கு சென்னையிலே பார்த்தால் தலைமைச் செயலகத்தில் செயலாளர், தவிர பி.சி.க்கு, எம்.பி.சிக்கு என்று இரண்டு டைரக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் மாவட்ட அளவிலே இப்போது இந்தத் துறைக்கு என்று தனியாக டெபுட்டி கலெக்டர் ரேங்கிலே ஒருவரை ரிடையரிங் ஸ்டேஜிலே அமர்த்துகிறார்கள். அவர்கள் சரியான முறையிலே இதையும் சேர்த்துப் பார்ப்பதற்கு இயலாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, இதற்காக, இந்தத் துறைக்கு என்றே தனியாகவே, ஒரு டெபுடி கலெக்டர் ரேங்கிலே டிஸ்ட்டிரிக்ட் வெல்பேர் பேக்வார்ட் கிளாஸ் ஆபீசர்களை நியமிக்கலாம் என்ற இந்த யோசனையையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே அலுவலர்கள் சரியான எண்ணிக்கையில் இல்லாத நிலை உள்ளது. இப்போதுகூட, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையினுடைய மேம்பாட்டிற்காக கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கியிருக்கிறோம். இவைகள் எல்லாம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களைச் சென்று அடையவேண்டுமானால், அந்த நன்மை கிடைக்கவேண்டுமானால் அலுவலர்கள் ஆங்காங்கே இருக்க வேண்டும். எனவே, தகுந்த பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



உணவுக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் கல்லூரியில் படிக்கின்றவர்களுக்கு, நகரத்தில் இருப்பவர்களுக்கு 198 ரூபாயும், மற்ற இடங்களில், மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு 193 ரூபாயும், சென்னை நகரில் தொழிற் பயிற்சி பயில்பவர்களுக்கு 198 ரூபாயும், மற்ற இடங்களில் பயில்பவர்களுக்கு 193 ரூபாயும், அதேபோல் சென்னையில் உயர்நிலைப் பள்ளியிலே படிப்பவர்களுக்கு 180 ரூபாயும், மாவட்டங்களிலே இருப்பவர்களுக்கு 180 ரூபாய் வரையிலும் வழங்கப்படுகின்றது. இந்த உணவுக் கட்டணம் என்பது போதுமானதாக இல்லை. அண்டை மாநிலமான ஆந்திராவில்கூட இந்த உணவுக் கட்டணத்தை கிட்டத்தட்ட 500 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். ஆகவே, இந்த உணவுக் கட்டணத்தை குறைந்தது இந்த நிதிநிலை ஆண்டில் 300 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக் கட்டணச் சலுகை என்பதில் இதற்கு முன்னாலே 12 ஆயிரத்தை வருமான விளிம்பாக வைத்திருந்தார்கள். சென்ற ஆண்டுதான் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருணையினால், அந்த உச்சவரம்பை 12 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரமாக உயர்த்தினார்கள். இது கல்விக் கட்டணச் சலுகையோடுதான் இருக்கிறதே தவிர, மற்ற சலுகைகளைப் பெறுவதற்கு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையிலேயிருந்து மற்ற சலுகைகளை எல்லாம் பெறுகிறார்களே, அவர்களுக்கு இந்த உச்சவரம்பு கூட்டப்படவில்லை. எல்லாச் சலுகைகளுக்குமே இந்த வருமான உச்ச வரம்பு ரூ.25,000/-ஆக இருக்க வேண்டுமென்ற என்னுடைய யோசனையைத் தெரிவிக்க முற்படுகின்றேன்.

பிற்பகல் 12-55

அதேபோல 'டியூஷன் ஃபீஸ்'. அந்தக் காலத்திலே ரூ.320, ரூ.330 அல்லது ரூ.400 ஆக இருந்த காலத்திலே உதவித்தொகையாக வழங்கியது ஏறக்குறைய ரூ.250. இப்போது கலைக் கல்லூரிகளில் எல்லாம் டியூஷன் ஃபீஸ் ரூ.750 ஆகிறது. இன்னும் உதவித்தொகை ரூ.250-லேயே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அந்தத் தொகையை உயர்த்தித் தர வேண்டும். அதேபோல் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பு டாக்டர் பட்டம் படிக்கின்றவர்களுக்கும் ரூ.4000 டியூஷன் ஃபீஸ்; அதேபோல் இன்ஜினியரிங் படிப்பவர்களுக்கும், ரூ.2,000-ஆக டியூஷன் ஃபீஸ் என்று இருக்கின்றது. இவர்களுக்கு உதவித் தொகை ரூ.600 அல்லது ரூ.500

[திரு. வை. இராமசாமி] [1997 ஏப்ரல் 17

ஆக இருக்கின்றது. இவைகளை உயர்த்தித் தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைகள் நிறைய வழங்குவதாகக் கடந்த ஆண்டு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்த வீட்டுமனைகள் எல்லா மாவட்டங்களிலும் சரியாகப் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை. என்னுடைய தொகுதிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மாணவர் விடுதி வேண்டுமென்று கடந்த ஆண்டிலே கேட்டிருந்தேன். அதை இந்த ஆண்டிலாவது நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐ.ஏ.எஸ். கோச்சிங் சென்டர் சென்னையிலே இருக்கிறது. இன்று 50 பேர்களைக் கொண்டு சென்னையிலே இருக்கின்றதைப் போலவே, மற்ற மற்ற, பெரிய பெரிய நகரங்களிலும்—மதுரை, திருச்சி, போன்ற நகரங்களிலும்—செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.

ஐ-ஆர்.டி. டிரெயினிங்கில், பிற்படுத்தப்பட்டோருக்கு 250 நபர்களுக்குத் தான் கன ரக வாகனங்களின் ஓட்டுநர் பயிற்சியை இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 4 கோடி மக்கள் இருக்கின்ற இந்த இடத்தில் 250 நபர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அது அவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய எண்ணிக்கை அல்ல. குறைந்தது 1000 நபர்களுக்காவது தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் நிரந்தரமான ஒரு ஆணையமாக, மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகள் பேரில் ஏற்படுத்தப்பட்டது. அதனுடைய முழுக் கடமைகளையும் நிறைவேற்றுவதற்காக ரூ.4 லட்சம் கூடுதலாகக் கேட்டிருக்கிறது அந்தத் துறை. அந்தத் தொகையை அதற்கு அளிப்பார்களேயானால் அந்தச் செயல் முழுமையாக வெற்றிபெறும். அந்தப் பட்டியலிலே வரக்கூடிய மொத்த மக்கட்தொகை கணக்கைப் பார்த்தால் 6, 7, 10, 12 கோடி என்று வருகிறது. அதையெல்லாம் தனியாகப் பிரித்து உள்ளபடியே கணக்குப் பார்த்து, களப் பணியாளர்களை வைத்து ஆய்வு செய்து நிறைவு செய்ய வேண்டுமென்றால், இந்தத் தொகையை ஒதுக்கித் தந்து, அந்தத் துறையை சீர்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி.



1997 ஏப்ரல் 17]

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் உள்ள பல நல்ல கருத்துக்களை வரவேற்கின்றோம். அதேபோல நீண்ட நாட்களாகப் போராடிப் பெற்ற உரிமைகளிலிருந்து பிற்படுத்தப்பட்டோருக்கு 30 விழுக்காடும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடும் உட்பட்டு, கல்வி வேலைவாய்ப்பில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு வகைசெய்யும் விதத்தில் இதே மாமன்றத்தில் அனைத்து அரசியல் கட்சிகளின் பேராதரவுடன் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் இதனை உச்ச நீதிமன்றத்தில் உரிய காலத்தில் முந்தைய அரசு எடுத்துக் கூறாத நிலையில் அதன் முழுப் பயனையும் அனுபவிக்க இயலாத நிலை தொடர்கிறது. இந்த நிலையில் 69 விழுக்காடு இட ஒதுக்கீடு அளவு முழுவதிலும் பிற்படுத்தப்பட்டோருக்கும், மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கும் பயன்படும் வகையில் பாதுகாக்க இந்த அரசு உறுதிபூண்டுள்ளதை வரவேற்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோரின் சமூக நிலை முன்னேற பெருமளவில் கல்விப் பணிகளில் இந்தத் துறை கவனம். செலுத்துகிறது. அது வரவேற்கத்தக்க நடவடிக்கைதான்.

பிற்பகல் 1-00

பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர் மற்றும் சீர் மரபினர் சமுதாயத்தினர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போர் பயன்பெறத்தக்க வகையில் அவர்களின் வயது வரம்பை மேலும் தளர்த்திட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.85 உணவுக் கட்டணமாக வழங்கியிருப்பதை குறைந்தபட்சம் 300 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், இச்சலுகையைப் பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தின் வரம்பு ரூ.1,500 என்பதை ரூ.25,000 ஆக உயர்த்த வேண்டும். இப்பிரிவில் வரும் சமுதாயத்தின் வளரும் தலைமுறையின் கல்வி ஆர்வத்தை அதிகரிக்க பரிசு வழங்கும் திட்டங்கள் என்பது வரவேற்க வேண்டிய ஒன்று. பரிசுத் தொகையை அதிகரிப்பதன்

[திரு. வி. அய்யலுசாமி] [1997 ஏப்ரல் 17

மூலம் ஊக்கமளிக்கும் வகையில் அது அமையும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு அரசு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதை, நகரங்களிலும், பெரு நகரங்களிலும் அமல்படுத்துவது அவசியம் என்று கூறிக்கொள்கிறேன். இந்த இலவச வீட்டுமனைப் பட்டாவைப் பெறுவதற்கு ஆண்டு வருமானம் ரூ.12,000 என்று இருப்பது சரியல்ல. அதனை ரூ.25,000 என்ற அளவிற்கு உயர்த்திட வேண்டும். பிற்படுத்தப்பட்டவர் சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள், முடி திருத்துவோர் நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்த ஆண்டுக்கு 400 நபர்களுக்கு மட்டுமே நிதியுதவி வழங்குவது என்பது சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்கு ஏற்புடைதல்ல. எனவே, பயனடைவோரின் எண்ணிக்கையை உயர்த்தி, அதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தினர், தொழில் முதலீட்டுக்கு உதவும் உதவித் திட்டத்தில் அதிகமாக முன்னேற நிதியுதவி கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முடி திருத்துதல், சலவை செய்தல் போன்ற பணியில் ஈடுபடுபவர்களுக்கு அரசு வழங்கும் இலவசக் கருவிகளின் எண்ணிக்கையை உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான கோவில்பட்டியில், சீர்மரபினர் அரசு மாணவர் விடுதி ஒன்று இருக்கின்றது. இவ்விடுதியில் உள்ள மாணவர்களுக்குக் குடிதண்ணீர் கிடையாது. எனவே, கோடைக்காலத்தில் தண்ணீர் இல்லாமல், என்னிடத்தில் வந்து முறையிட்டார்கள். நகராட்சி மூலமாக ஏற்பாடு செய்து, வண்டி மூலமாக தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. ஆகையால், அந்த மாணவர் இல்லத்திற்கு நல்ல குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், சீர்மரபினர் அரசு மாணவியர் விடுதி ஒன்றை புதியதாக ஏற்படுத்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் சீர்மரபினரின் எண்ணிக்கை நாட்டில் 75 சதவிகிதமாக இருக்கின்றது. உழைக்கக் கூடிய அவர்களுக்கு வீடு என்பது, நல்ல வீடாக இல்லாத நிலையில் அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும்போது குடியிருக்க லாயக்கான நல்ல வீடுகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது ஒவ்வொரு ஒன்றியத்திலும் 25-லிருந்து 30 வீடுகள் தான் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, சீர்மரபினருக்கு கொடுக்கப்படுகின்றது. (மணியடிக்கப்பெற்றது). அதை அதிகப்படுத்தி கொடுக்க வேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



1997 ஏப்ரல் 17]

பிற்பகல் 1-05

**Mr. Deputy Speaker:** Mrs. Anne D' Monte.

***Tmt. Anne D' Monte**: Hon. Deputy Speaker, Sir, While the subject of Backward Classes Welfare is being discussed, I am taking the liberty of bringing up my long standing demand of the Anglo Indian Community, to be given all aids and concessions applicable to the backward classes.

As you are aware, the Anglo Indian Community came into existence in 1639. Since then, the Community has gone through various stages of development from high level of prosperity to low ebb of degeneration-economically, educationally and socially. The largest concentration of the community is in Chennai scattered all over with an estimate of 40,000 Anglo Indians in our State. As Chennai was the first centre for growth and development, there is a strong presence here. Basically an urban community which is strongly represented in various parts of the city such as Purasawalkam, Vepery, Perambur, Thiru.Vi.Ka. Nagar, Royapuram, etc. there are large number of the community settled in Coimbatore, Trichy, Madurai and other hill stations like the Nilgiris.

Since Independence, there had been constitutional reservation of jobs in the Railways, Customs, Posts and Telegraphs, Police, etc. From 1947 to 1960, the community had no problem in getting employment and they were able to lead a prosperous life. Once the job reservation ceased, the community began to deteriorate economically, educationally and socially. In the 1960's, a large number had left the country, migrating to various other countries like Australia, Canada and England; but those who were left behind had to face the realities. The community began to face the grim struggle and took up whatever employment is available. It was a tough economic battle that set into motion with a circle of poverty and a life of frustration. Today the living conditions are bad with a vast majority of the community living in huts, with a major percentage holding

[Tmt. Anne D' Monte] [1997 ஏப்ரல் 17

small jobs like Waiters, Cleaners, etc. It may be said that there are only 5% of our community who work in factories, colleges, schools, companies, etc. The vast majority of our community are in grim life of poverty and unemployment - they lack housing, education and basic necessities. From 1960 the community has lost the educational grant for their children and reservations both in the Government of India and in the States. Consequently there was unemployment and poverty and the very existence of survival is at stake here.

Sir, I would like to bring, a few of the problems that our community face, to the attention of the Government. There is the problem of poverty which is widespread with 70 per cent lack in regular jobs. The families make do with one meal a day and the conditions are deplorable. Added to this is the poor educational qualification with no job reservation resulting in unemployment. So severe is the frustration that it has lead lot of homes being broken. This problem of unemployment has been explained earlier. By nature, the Anglo Indian is an hard-worker who excels in skilled labour. Lack of technical training and limited opportunities for jobs are the other problems that this Community had to face.

It is very difficult to get admission into the Government recognised diploma courses, as a result, they are at the mercy of the private businessmen who exploit them. They are also unable to compete with the backward classes and Scheduled Caste people, who are already given the benefits of reservation.

As regards seats in professional courses such as Medical, and Engineering, our community had been deprived of the reservation applicable to backward classes.

Sir, housing is a very acute problem which is widespread. Most of our community live in huts, church compounds and pavements.

Sir, from the problems mentioned above, there is no doubt that this community is socially, economically and educationally very



1997 ஏப்ரல் 17] [Tmt. Anne D' Monte]

backward. I may make a special plea to our Government that they should come to the aid of this community so that we may get the benefit of concessions applicable to the backward classes. This is a long pending demand, dating back to November 1974, when my father Mr. D' Monte, as an Ex. M.L.C. made a representative to our Hon. Chief Minister with 4000 signatures, asking for this concession to be made.

Sir, this community remains in an economically crippled state. The fruits of education and employment have been denied to us for the last 23 years. All these facts speak abundantly of our present situation. We have only one index which can be practically applied and that is the general backwardness and circumstances of our community and under this rule the Anglo Indian Community should be considered one of the most deserving minorities in India. I have nothing more to say Sir. Thank you.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அடுத்து, திரு. பி.ஆர். சுந்தரம்.*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். முதலில் என்னுடைய தொகுதிப் பிரச்சினை தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று என்னுடைய தொகுதிக்கு இலவச வேட்டி, சேலைகளை எல்லாம் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே சென்ற ஆண்டு கொடுத்த வேட்டி, சேலையில் தற்போது 36 சதவிகிதம்தான் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே எல்லாம் பிரச்சினைகள் ஏற்பட்டு, போலீஸை வைத்துக்கொண்டு ஏகப்பட்ட தடியடிப் பிரயோகம் எல்லாம் நடந்து இருக்கிறது. ஆகவே தங்கள் மூலமாக—முதலமைச்சர் அவர்களும் அவையிலே இல்லை; வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் அவையிலே இல்லை—மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிற காரணத்தால்....(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *இப்போது உங்களைப் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கையில்தான் பேசுவதற்கு அழைத்தேன். ஆனால் நீங்கள் இப்போது கூறுவது சம்பந்தமாக*

முதலில் என்னிடம் சொல்லி அனுமதி வாங்கினீர்களா? எதுவும் இல்லாமல் எழுந்து இப்படி பொத்தாம் பொதுவாகப் பேசுவது முறைதானா? இது நியாயம்தானா? மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள்.

* **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுந்தரம் அவர்கள், பொதுவாகவே வாக் அவுட் சுந்தரமாக இருக்கிறார்கள். இப்போது ஏதோ வாக் அவுட்டுக்கு ஏற்பாடு செய்து தொடக்கத்திலேயே இத்தகைய தகராறைத் தொடங்கியிருக்கிறார்களோ என்று சந்தேகம் எனக்கு எழுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொன்றிற்கும் ஒரு விதி இருக்கிறது. அந்த விதியின்கீழ் எழுதிக்கொடுத்துவிட்டு நாளைக்கு வந்து கேளுங்கள். பதில் கிடைக்கும். அதை விட்டுவிட்டு கண்ட நேரத்தில் எழுந்து எப்படி வேண்டுமானாலும் பேச முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அந்த மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச நேரம் கிடைக்காததால் தற்போது அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வேட்டி சேலைகளைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு கொடுத்ததில், 30 சதவீதம்தான் கொடுத்திருக்கிறார்கள். அதை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்கு தங்கள் மூலமாக கொண்டு வர விரும்புகிறேன். அதைத்தான் சொல்ல வந்தேன்.

அடுத்தபடியாக, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையைப் பொறுத்தவரையில் கொங்கு வேளாளர் சமுதாயம் தற்போது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறது. அதை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கொங்கு வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த இந்த நாட்டுக்காகப் பாடுபட்ட தீரன் சின்னமலை கவுண்டருடைய சிலையானது எங்களுடைய ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்டு, அதை சென்னையில் வைக்கவேண்டுமென்று இருந்தார்கள். தற்போது அந்த சிலை பற்றி இந்த ஆட்சியில், கவர்னர் உரையாக இருந்தாலும் சரி, பட்ஜெட் உரையாக இருந்தாலும் சரி, எதிலும் குறிப்பிடப்படவில்லை.



ஆகவே, தீரன் சின்னமலை கவுண்டர் சிலையை சென்னையில் அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்கள் தங்கிப் படிக்கும்போது, அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற உணவுக் கட்டணம் 180 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற முறைமாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க 135 ரூபாயிலிருந்து 180 ரூபாயாக இந்த அரசு மாற்றிக் கொடுத்திருக்கிறது. இருந்தபோதிலும் 180 ரூபாய் என்பது, கணக்குப் பார்த்தால் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 6 ரூபாய் ஆகிறது. இந்த 6 ரூபாயை வைத்துக் கொண்டு எந்த விதத்திலும் அந்த மாணவர்களுடைய உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆகவே அதற்கு அதிகத் தொகையை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர் விடுதிகளில் முதன் முதலில் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினை குடிநீர்ப் பிரச்சினை. அந்த விடுதிகளில் எல்லாம் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிற காரணத்தால் அந்த மாணவர்கள் அங்கே சரியாகத் தங்கிப் படிக்க முடியவில்லை என்ற ஒரு கருத்து இருக்கிறது. இந்தத் துறையானது உடனடியாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பக்கம் 13-ல் மாணவர் விடுதிகளுக்கு எல்லாம் ஆங்கில நாளிதழ் ஒன்றும், தமிழ் நாளிதழ் இரண்டும் வழங்கப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்படி இந்து பத்திரிகையும், தினமணி பத்திரிகையும், தினத்தந்தி பத்திரிகையும் அந்த விடுதிகளுக்கு எல்லாம் கொடுக்கப்படுகிறது.

ஆனால், தற்பொழுது நம்முடைய அமைச்சரவர்கள், கடந்த 19-3-1997 அன்று, மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர் அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி, அந்தக் கூட்டத்திலே, தினமணி பத்திரிகைக்குப் பதிலாக முரசொலி பத்திரிகையை வாங்க வேண்டுமென்று அவர்கள் கூறியதாகத் தெரிகின்றது......

பிற்பகல் 1-15

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறான தகவலை இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார். ஒரு ஆங்கிலப் பத்திரிகை மற்றும் தினமணி பத்திரிகை வாங்க வேண்டுமென்று ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டு வாங்கப்பட்டு வந்தது. இதற்கிடையில் இன்னும் ஒரு பத்திரிகை வேண்டும் - தமிழ்ப் பத்திரிகை வேண்டும் என்று மாணவர்கள் கேட்ட காரணத்தால், முரசொலி பத்திரிகை அந்த விடுதிகளுக்கு வாங்குவதற்குப் புதியதாக ஆணையிடப்பட்டிருக்கிறது. இதற்குமுன்பு, தினத்தந்தி பத்திரிகை வாங்கியதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அது தவறான தகவல். ஒரு ஆங்கிலப் பத்திரிகையும், ஒரு தமிழ்ப் பத்திரிகையும்தான் வழங்க வேண்டுமென்று முன்பு ஆணை இருந்தது. இப்பொழுது புதிதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகையும், 2 தமிழ்ப் பத்திரிகைகளும் வாங்கலாம் என்று அனுமதிக்கப்பட்டு, அதிலே முரசொலி இடம் பெற்றிருக்கிறது. முரசொலி இடம் பெற்றது ஏதோவொரு பாவ காரியம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் கட்சி ஆளுங்கட்சியாக இருந்தபொழுது, அவர்களுடைய கட்சிப் பத்திரிகையும், அவர்களை ஆதரிக்கின்ற கட்சிப் பத்திரிகைகள்கூட அப்பொழுது அந்த ஹாஸ்டல்களிலே, விடுதிகளிலே வழங்கப்பட்டு வந்தது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 2 தமிழ்ப் பத்திரிகைகள் என்றால் முரசொலியைத் தவிர வேறு பத்திரிகைகள் இல்லையா? தினமலர் பத்திரிகை இருக்கின்றது; தினகரன் பத்திரிகை இருக்கின்றது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தப் பத்திரிகையை வாங்கிக் கொடுப்பது என்பது, படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்தது; நடத்துகின்ற அரசாங்கத்தைப் பொறுத்ததே தவிர மாண்புமிகு உறுப்பினர் விரும்புகின்ற பத்திரிகைகளையெல்லாம் அரசாங்கம் அங்கே அனுமதிக்க முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாணவர்கள் முரசொலிப் பத்திரிகையை மட்டும் விரும்பிக் கேட்கிறார்கள் என்று அமைச்சர் கூறுகின்றார்கள். அந்த



ஹாஸ்டலிலே படிக்கின்ற மாணவர்கள் அனைவருமே முரசொலி பத்திரிகையை மட்டும் விரும்பிக் கேட்கவில்லை. நீங்கள் உங்களுடைய கட்சியினுடைய கொள்கைகளை, கோட்பாடுகளை அந்த மாணவர்களுக்குப் புகுத்த வேண்டுமென்ற எண்ணத்திற்காகத்தான் முரசொலி பத்திரிகையை அந்தப் பிற்படுத்தப்பட்டோர்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாணவர்கள் விரும்பிக் கேட்டார்கள். ஆளுங்கட்சியினுடைய கொள்கைகளை அங்கே புகுத்துவதற்காக ஏதோ இந்த அரசாங்கம் பத்திரிகை கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அது தவறு. ஆளுங்கட்சிப் பத்திரிகைகள் கொடுப்பது என்பது புதிது அல்ல; மாண்புமிகு உறுப்பினருடைய கட்சி 5 ஆண்டுக்காலம் ஆட்சியிலே இருந்தது; அப்பொழுது என்னென்ன பத்திரிகைகளெல்லாம் வழங்கப்பட்டன என்பதைப் பார்த்துவிட்டுப் பேசுவது நல்லது. இரண்டாவது, அரசாங்க அறிவிப்புகள், முதலமைச்சருடைய அறிவிப்புகள் எல்லாம் ஆளுங்கட்சிப் பத்திரிகையிலேதான் இடம் பெறும். முழுமையாக எல்லாப் பத்திரிகைகளிலும் இடம் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. வெர்பாட்டம் என்று சொல்வார்களே, அப்படி முதலமைச்சர் பேசுகின்ற பேச்சுக்களெல்லாம் ஆளுங்கட்சிப் பத்திரிகையிலேதான் இடம் பெறுகிறது. எனவேதான் அந்தப் பத்திரிகையை மாணவர்கள் விரும்பிக் கேட்கிறார்கள். அரசாங்கம் அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறது.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், சிறைச்சாலையிலும் சரி, அரசு விடுதிகளிலேயும் சரி, அதற்கு முன்னர் எம்.ஜி.ஆர். ஆண்ட காலத்திலேயும் சரி, அண்ணா பத்திரிகையும், நமது எம்.ஜி.ஆர். போன்ற பத்திரிகைகளும்தான் திணிக்கப்பட்டன. அந்தத் திணிக்கப்பட்ட முறை தவறு என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவையில் ஒப்புக் கொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 5 வருஷமாக என்ன நடந்தது. அப்பொழுது என்னென்ன பத்திரிகை, எப்படி எப்படி வாங்கப்பட்டது என்பதெல்லாம் எனக்குத் தெரியும். நான் இந்த இருக்கையிலே இருப்பதனாலே அமைதியாக உட்கார்ந்து

கொண்டிருக்கிறேன். அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு அடுத்தப் பிரச்சினைக்கு வாருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்பதால் அந்தப் பிற்படுத்தப்பட்டோர் ஹாஸ்டலிலே இந்தப் பத்திரிகையைத் திணிக்கிறார்கள் என்பதால்தான் அதைப்பற்றி நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப்பராயன் கேட்டாரே.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திரு. சுப்பராயன் கேட்டார். அண்ணா பத்திரிகையும் இருந்தது. மீதி தமிழ்ப் பத்திரிகை, எல்லாப் பத்திரிகையும் இருந்தது. இப்பொழுது வந்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு, மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தவறான தகவலையே தந்து கொண்டிருக்கிறார். ஏதோ அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 'அண்ணா' பத்திரிகையும், ஆளுங்கட்சிப் பத்திரிகையும், தமிழ்நாட்டில் இருக்கிற எல்லாப் பத்திரிகைகளும் போடப்பட்டதாகச் சொல்கிறார். அப்படிப் போடப்படவில்லை. அப்படிப் போட்டிருந்தால் முரசொலியையும் அப்பொழுது போட்டிருக்க வேண்டும். எனவே, தமிழ்நாட்டிலேயிருந்து வெளியிடுகின்ற பத்திரிகைகளில் ஒரு ஆங்கிலப் பத்திரிகையும், ஒரு தமிழ்ப் பத்திரிகையும்தான் அனுமதிக்கப்பட்டது. அந்த நேரத்திலேகூட ஆளுங்கட்சிப் பத்திரிகை மட்டும்தான், அந்த ஆட்சி இருந்தபோது அனுமதிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத்தலைவரர் அவர்களே, 7 நிமிடம்தான் கொடுத்திருக்கிறீர்கள். இறுதியாக, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை. இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் முதன் முதலாக பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்காக 50 சதவிகிதம் என்று சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்பு, 1992-ஆம் ஆண்டு 16-(4)-ன்படி மொத்த இட ஒதுக்கீடு 50 சதவிகிதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 16(4) என்று சொன்னீர்களே, என்ன அது?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அரசமைப்புச் சட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைச் சொல்ல வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசமைப்புச் சட்டம் 16(4)-ன்படி இட ஒதுக்கீடானது 50 சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று சட்டத் திருத்தம் கொண்டு வந்த பிறகு தமிழகத்தில் ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. அந்தக் கொந்தளிப்பின் விளைவாக எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 69 சதவீத இட ஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டுமென்று இந்த அவையிலே ஒரு சட்டத்தை விவாதமின்றி நிறைவேற்றி அதைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பினார்கள். பாராளுமன்றத்திலும் அது நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதி ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, 9-வது அட்டவணையிலே சேர்த்தார்கள். அதற்குப் பின்பும் உச்ச நீதிமன்றம் அதற்கு அனுமதி தர மறுத்துவிட்டது. அப்போது எதிர்க் கட்சியிலேயிருந்த நம்முடைய முதல்வர் அவர்கள்கூட கூறினார்கள், விழுப்புரம் கூட்டத்திலே என்று நினைக்கிறேன், நாங்கள் மட்டும் பதவியிலே இருந்திருந்தால், இந்தப் பதவியையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, சிரித்த முகத்துடன் சிறை செல்வோம் என்றுகூட கூறியிருக்கிறார். நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரம் இல்லை. இருந்தாலும், சுருக்கமாகச் சொல்கிறேன். இந்த தி.மு.க. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் 69 சதவிகிதத்தை அமல்படுத்துவதுதான் லட்சியம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலிருந்து எப்போதும் இந்த அரசாங்கம் பின்வாங்கப் போவதில்லை. ஆனால், கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட கோளாறு காரணமாக, அவர்கள் நீதிமன்றத்திலே போய் அப்போது ஒப்புதல் தந்த காரணத்தினால் வேறு வழியில்லாமல் இந்த அரசாங்கம் இப்போது அதை நடைமுறைப்படுத்துகிறது. இருந்தாலும்கூட, உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் எப்போதும் 69 சதவிகிதம் கொடுப்பதற்கு

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 17

அனுமதி வேண்டும் என்று விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஃபுல் பெஞ்சிற்கு அந்த வழக்கு வரவிருக்கிறது. அப்போது இந்த அரசாங்கம் நிச்சயமாக 69 சதவிகிதத்தை பெற்றுத் தருவதற்கு முழுச் சக்தியையும் பயன்படுத்தி வாதாடும். அப்படியில்லையென்று சொன்னாலும், இந்த அரசமைப்புச் சட்டத்தைத் திருத்திதான் இந்தச் சலுகையை பெற முடியும் என்றால், அதற்குத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எந்த விலை கொடுத்தாகிலும்–விலை என்றால்—தியாகத்தைச் செய்தும், அதிகாரத்தைப் பயன்படுத்தியும், அந்த 69 சதவிகிதத்தை சட்ட ரீதியாகக் கொண்டுவந்து அமல்படுத்தத் தயாராக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதில் சில குளறுபடிகளை எங்கள் அரசு செய்தது என்று நீங்கள் கூறினீர்கள். அதை எதிர்த்து நாங்கள் ரெவியூ பெட்டிஷன் போட்டிருக்கிறோம் என்றுகூட கூறினீர்கள். நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்கூட, இங்கே கூறியிருக்கிறார்கள். நாங்கள் ரெவியூ பெட்டிஷன் போட்டிருக்கிறோம், அந்தக் குறையையெல்லாம் மாற்றியமைத்திருக்கிறோம், வெற்றி எங்களுக்கே கிடைக்கும் என்றுகூடக் கூறியிருக்கிறார்கள். அந்த ரெவியூ பெட்டிஷன் போடப்பட்டதற்குப் பின்பும், உச்ச நீதிமன்றம் அதைத் தள்ளுபடி செய்துவிட்டது. தற்போது தள்ளுபடி செய்து கிட்டத்தட்ட 5, 6, மாதங்கள் ஆகின்றன.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏன் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், மெயின் கேஸ் ஒரு பெஞ்சின்கீழ் விசாரணைக்கு வந்து இருக்கின்ற காரணத்தினால், அப்போது அனைத்தையுமே சேர்த்து விவாதிக்கலாம் என்றுதான் அது தள்ளுபடி செய்யப்பட்டதே தவிர, நமக்கு 69 சதவிகிதம் கேட்பதற்கு உரிமையில்லையென்று தள்ளுபடி செய்யப்படவில்லை. எனவே, ஃபுல்பெஞ்சிற்கு அந்த கேஸ் வரும்போது மிகச் சிறந்த வழக்கறிஞர்களை வைத்து இந்தச் சலுகையைப் பெறுவதற்கு இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை மட்டும் நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 69 சதவீதம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், அரசமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும், அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஒரே கோரிக்கை.



1997 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுபற்றித்தான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைத்தான் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே முன்பு, கடந்தகால ஆட்சியிலே ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றும்போது தெளிவாகச் சொன்னார்கள். ஆனால், அதை கேலி செய்தார்கள். ஆனால், இப்போது இந்த அரசாங்கம், அப்படி ஒரு சட்டத் திருத்தம் செய்தால்தான் அத்தகைய பாதுகாப்புக் கிடைக்கும் என்று கருதினால், அதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 10 மாத காலத்திலே நீங்கள் அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு, பாராளுமன்றத்திலே 8 அமைச்சர்கள் இருந்தும், இதுவரை அவர்களை அணுகவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. நீங்கள் அணுகிக் கேட்டிருந்தீர்களேயானால், அதற்கொரு முடிவு பெறப்பட்டிருக்கும். ஆகவே. இந்த அரசு அதற்குச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதை வைத்துக்கொண்டு அணுகவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்? தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் வேண்டுகோள் வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குக்கூட, அங்கே பாராளுமன்றத்திலே ஒப்புதல் தரவேண்டும் என்று எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் தனிப்பட்ட முறையிலே அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு கலைஞர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். ஆனால் அந்தச் சட்டத் திருத்தம் நமக்கு கைகொடுக்கவில்லை. எனவே, அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டும் என்று நாங்கள் முயற்சி எடுத்துக்கொள்வோம்.

பிற்பகல் 1-25

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், போதும், இதற்கு மேலும் விளக்கம் தேவையில்லை, உரையை முடித்துக் கொள்கிறீர்களா? சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் தயவால்தான் மத்திய அரசு நடந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் மீண்டும்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், இத்துடன் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. சண்முகம்.

**திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி. எனது திருப்பத்தூர் தொகுதியிலே சுமார் 3,000 குடும்பங்கள் சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. அந்தக் குடும்பங்களுடைய நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. அவர்களுக்கு இலவசமாக எல்லாத் தொழிற் கருவிகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூரிலே மட்டும் 600 சலவைத் தொழில் புரியும் குடும்பங்கள் உள்ளன. அவர்களது நீண்டகால கோரிக்கை என்னவென்றால், சலவை செய்வதற்கும், துணி துவைக்கவும் தனி இடத்தில் சலவைத் துறை ஒன்று அமைத்துக்கொடுக்க வேண்டும் என்பதுதான். இதை திருப்பத்தூர் சலவைத் தொழிலாளர்கள் சங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முடிதிருத்துவோர் மிகவும் ஏழைகள். நகர்ப்புறங்களிலே தொழில் செய்யும் அவர்களுக்கு எளிதில் மானியத்துடன் கூடிய கடன் உதவிகள் கிடைக்க ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திருப்பத்தூர் நகரிலே மருத்துவர்நகர் என்று ஒரு பகுதி உள்ளது. அங்கு சலவைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள அரசு உதவி செய்ய வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு அரசு பல உதவிகளைச் செய்துள்ளது. அதைப் பாராட்டுகிறோம். தமிழகத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு வாழ்வு அளித்து அவர்களை உயர்த்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களது ஆட்சிக் காலத்தில்தான் இவைகளைச் செய்ய முடியும். இந்த வாய்ப்பை அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார்.

• **திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 31-ன் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை ரூபாய் இரண்டு கோடியிலிருந்து ரூபாய் பத்து கோடியாக உயர்த்தி அளித்திருப்பதற்காக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, கல்லூரிகளில் உணவுக் கட்டணங்களுக்காக வழங்கப்படும் உதவித்தொகை, ரூபாய் 180, 193 என்று இருப்பதை ரூபாய் 250-ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னைப் பல்கலைக்கழகத்திலும், மற்ற பல்கலைக்கழகங்களிலும், மருத்துவம், பொறியியல் ஆகியவற்றுக்கான நுழைவுத் தேர்வுகள் எழுதப் பயிற்சி அளிக்கும் திட்டத்தில், ஆதிதிராவிட பழங்குடியின மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி அளிப்பதைப்போல மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் இலவசப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர்களுக்கு அனைத்து அரசுத்

துறைகளிலும், அரசுச் சார்புத் துறைகளிலும், தனியார் துறைகளிலும் வேலைவாய்ப்பில் கட்டாய இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாவட்டந்தோறும் அமைந்துள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் நேர்முகத் தேர்விற்கு அனுப்பப்படுபவர்களின் பட்டியலின்படியும், அவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்திட அமைக்கப்பட்டுள்ள ஆய்வுக்குழுவில் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்த இருவரையும் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கல்லூரிகள், ஐ.டி.ஐ., பாலிடெக்னிக்குகள், விவசாயப் பல்கலைக்கழகம், பொறியியல் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, சிற்பம், அறிவியல் மற்றும் கலைக் கல்லூரிகள் மற்றும் இதர அனைத்துக் கல்வி நிலையங்களிலும் படிக்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு, பெற்றோரின் வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் உணவு, விடுதி மற்றும் அனைத்துச் சலுகைகளையும் விரிவுபடுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் 20 சதவிகிதம் இட ஒதுக்கீடு மற்றும் பிற பிரிவினருக்குள்ள இட ஒதுக்கீட்டு முறைகள் அரசு மற்றும் அரசு சார்ந்த அனைத்துத் துறைகள், அரசு உதவி பெற்ற தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் சரியாக நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க மாநில மற்றும் மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** அந்தக் குழுக்களில் அனைத்துச் சாதியினரின் பிரதிநிதிகளுக்கும், பிரதிநிதித்துவம் கொடுத்து முறையாகச் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1997-98-ஆம் ஆண்டில் தமிழகத்தில் 62 பள்ளி மாணவர் இல்லங்களைத் தொடங்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.



அப்படித் தொடங்கும்போது, தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதியில் ஒரு மாணவர் இல்லம் தொடங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தஞ்சை மாவட்டம் பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலத்தில் ஒரு மாணவர் விடுதி அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. செ. இராமலிங்கம் தலைமை)**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் சட்டப் பட்டதாரிகள் படித்த பயிற்சி பெற 20 பேர் என்று அனுமதிக்கப்பட்டு இருப்பதை 50 பேர் என்று உயர்த்த வேண்டுமென்று இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பு பெண்களுக்கு தையற்பயிற்சி, கைத்திறன் போன்றவற்றை அனைத்து மாவட்டங்களுக்கும் இலவசமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் பிற துறைகளின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவினருக்கு இலவச வீடுகள் கட்டும்போது அவர்களுக்கு 50 சதவிகிதம் என்ற அளவில் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜீவன்தாரா திட்டத்தில் மானியததோடு கூடிய திட்டத்தை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவினருக்கு வழங்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, தாட்கோ நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு 50 சதவிகித மானியத்தோடு கடன் வழங்குவதைப் போல, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வழங்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் தொகுப்பு வீடுகளை ஒதுக்கும்போது, 50 சதவிகிதம் வீடுகளை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மேலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளவர்களின் வேலை வாய்ப்புக்கென்று 69% என்று இருப்பதுபோல், படிப்புக்கும் 69% என்று இட ஒதுக்கீடு செய்வதற்கும் அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி.

216832 600 008

**திரு. சி. சுப்பிரமணி என்கிற சி. சு. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தின் மூலமாக சமூக நீதியை நிலைநாட்டுகின்ற வகையில் நிதிநிலை அறிக்கையை அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய திருவள்ளூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைகளை வழங்குவதற்காக 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 2 கோடி என்று இருந்த ஒதுக்கீட்டை ரூ. 10 கோடி என்று உயர்த்திய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்டத் தலைநகரமாகத் திருவள்ளூர் இருப்பதால், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த பள்ளி மாணவ, மாணவியருக்காக இல்லங்களைத் தொடங்க வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-திரு. கே. சுப்பராயன் தலைமை)**

மேலும், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்படும் தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் விடுதிகளில் பணிபுரியும் சமையலர் பணி, காவலர் பணி ஆகிய பணிகளுக்கான சம்பள விகிதம் ரூ. 100 என்றும், 500 என்றும் உள்ளது. அதனை ஒரே விகிதாச்சாரத்தில் கொண்டு வந்து இருவருக்கும் சமமான ஊதியம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் பொறியியல், மருத்துவம் மற்றும் சட்டம் போன்ற பட்டப் படிப்புக்குத் தேவையான பெற்றோரின் ஆண்டு வருமானம் 20,000 ரூபாய் என்று இருப்பதை 50,000 ரூபாயாக உயர்த்தி ஆணையிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியரின் கல்வி ஊக்கப் பரிசான அண்ணா, பெரியார் நினைவுப் பரிசுகளுக்காக 1997-98-ஆம் ஆண்டுக்கு ரூ. 11.50 இலட்சம் என்று ஒதுக்கப்பட்டுள்ளதைப் பாராட்டி வரவேற்பதுடன், அதிக அளவு நிதி ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.



**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வை. இராமசாமி தலைமை)**

அதேபோல, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டத்திற்கு 1997-98-ஆம் ஆண்டு 48.23 இலட்சம் ஒதுக்கப்பட்டதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இதற்கு அதிக அளவு நிதியை ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் மற்றும் தனி நபர் கடன்களை விரைவுபடுத்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பல்தொழில் பயிற்சிப் பட்டயப் படிப்பு பயிலுகின்ற பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 1000 மாணவர்களுக்கு ரூ. 11.50 இலட்சம் செலவில் இலவசக் கல்விச் சலுகை வழங்கியதைப் பாராட்டுகின்றேன்.

தமிழகத்தில் வாழும் வெலம குலம் சார்ந்த கொப்புலா வெலம என்னும் சமூகத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காக ஒரு தனித்துறையையே ஏற்படுத்தி, அதற்கு ஒரு அமைச்சரையும் ஏற்படுத்திய டாக்டர் கலைஞர் ஆட்சியில் நூற்றுக்கணக்கான பிற்படுத்தப்பட்டோர் நலத் திட்டங்கள் அரசாங்கத்தால் வகுத்துக் கொடுக்கப்படுகின்றன. அரசின் நலத் திட்டங்கள், சம்பந்தப்பட்ட மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்பதில் இந்தத் துறையின் அதிகாரிகள் காட்டும் அக்கறை மிகவும் குறைவு என்பதை மிகுந்த மன வருத்தத்தோடு என் உரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட விரும்புகிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் தலைமை)**

மாற்றுத் தலைவர் அவர்களே, என் தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் மாவட்டத் தலைநகருக்கு வேண்டிய அனைத்து அலுவலகங்களையும் ஒன்றாக ஒரே வளாகத்தில் அமைக்க வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் மிகவும் பணிவன்புடன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். ரூ. 2.5 கோடியில் திருவள்ளூரில் 1997-98-ஆம் ஆண்டே இந்தப் பெருந்திட்ட வளாகம் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்துள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைநகரமாக உள்ள திருவள்ளூரில் பெண்களுக்கென்று தனிச் சிறைச்சாலை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தலைநகர் திருவள்ளூரில் ஏற்படுத்தியுள்ள மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நிரப்பப்படாமல் உள்ள மாவட்ட சிறப்புப் பிரிவு காவல்துறை, குற்றப்பிரிவு, வி.சி.ஆர். பெண்கள் காவல் பிரிவு, ஆயுதப்படை, போக்குவரத்துக் காவல் பிரிவு, மற்றும் மாவட்டக் குற்ற ஆவணக் கூடம் போன்ற பிரிவுகளையும், திருவள்ளூர் நகருக்கு என்று மாவட்ட துணைக் கண்காணிப்பாளர் பணியிடங்களையும் ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

திருவள்ளூர் - திருப்பதி நெடுஞ்சாலையில் உள்ள திருவள்ளூர் ரயில்வே மேம்பாலம் மத்திய அரசின் திட்டப் பணியில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்திட்டப் பணியில் மாநிலத்தின் பங்கை துரிதப்படுத்த வேண்டுமாய் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



மாவட்டத் தலைநகரமான திருவள்ளூரில் கல்லூரியோ, அரசு மேல்நிலைப் பள்ளியோ, தொழிற்சாலையோ மற்றும் தொழிற்பயிற்சி நிலையமோ இல்லை. பஸ் போக்குவரத்து சரிவர இல்லாத என் தொகுதியை மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி. கோவிந்தன்.

***திரு. வி. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நீதி எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பதில் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தணியாத அக்கறை கொண்டு, அதற்காகவே தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து இருக்கிறார்கள் என்பதை நாடறியும். சமூக நீதிக்காக, 1969-ஆம் ஆண்டு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்ற ஒரு துறையை ஆரம்பித்தது நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். 69 சதவிகித இட ஒதுக்கீட்டை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்தான் பெற்றுத்தர முடியும் என்று தமிழ்நாட்டிலுள்ள மக்களெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த பெருவாரியான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றனர் என்பதால், அவர்களுக்கு இலவச வீட்டுமனையும், அவர்கள் வீடு கட்டிக்கொள்ள நிதியும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவிகளைப் பெறுவதற்குரிய பயனாளிகளுக்கு நிர்ணயித்திருக்கின்ற ஆண்டு வருவாயை ரூ. 12,000/- லிருந்து, ரூ. 24,000/- ஆக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பயனாளிகளுக்கு எண்ணிக்கையிலான இலக்கினை நிர்ணயம் செய்யாமல், தகுதியுள்ள, வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள அனைவருக்கும் அந்தக் கடனுதவியினை வழங்கிட அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அரசின் மூலம் கடனுதவி அளிக்கின்றபோது, அவர்கள் பெறுகின்ற கடன் தொகையில் 50 விழுக்காட்டினை மானியமாக வழங்கிட

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறுபான்மையினர் நலன் காத்திட, அதற்கெனத் தனி ஆணையம் இயங்குவதை வரவேற்பதோடு, சிறுபான்மையினரின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக ஆணையம் அளித்துள்ள பரிந்துரைகளை உடனடியாகச் செயல்படுத்தி, சிறுபான்மை மக்களின் வாழ்விற்கு உயர்வளித்திடக் கோருகிறேன். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனி நபர்களுக்கும் கடன் வழங்கும்போது, அவர்களின் மனுக்களைத் துறைக்கு அனுப்பாமல், அங்கிருந்தே அனுமதி வழங்கப்படுகிறது. இந்நிலையை மாற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அளவிலேயே அந்த அனுமதியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீட்டுமனைப் பட்டா வழங்க தேர்வு செய்யும் பயனாளிகளின் ஆண்டு வருவாய் ரூ. 12,000 என நிர்ணயித்திருப்பதை ரூ. 25,000 என உயர்த்தி ஆணை பிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு, இலவச வீட்டுமனை பெறுகின்றவர்கள் விரும்பினால் வீடு கட்டுவதற்கு மானியத்துடன் கடனுதவி அளித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இலவசமாக வழங்கப்படும் கருவிகள் மற்றும் உதவிகள் காலதாமதமின்றிக் கிடைத்திடவும், முக்கியமாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்கின்ற பயனாளிகளுக்கு வழங்கிடவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயனாளிகளின் எண்ணிக்கையினை உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்திந்திய ஆட்சிப் பணிக்காக, சிறப்புப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயிற்சி பெறுகின்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகின்ற உதவித் தொகையான ரூ. 500/- ஐ ரூ. 1000/- ஆக உயர்த்தி வழங்கிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூக மக்களின் பிரதான தொழில் விவசாயம் என்பதால், அவர்களுக்கு வேண்டிய விவசாயக் கருவிகள் மற்றும் இடுபொருட்களை மானிய விலையில் வழங்கிடவும், இயற்கைச் சீற்றத்தால் விவசாயத்தில் ஏற்படுகின்ற நஷ்டத்தினை ஈடுசெய்திட பயிர்க் காப்பீடு செய்ய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், கல் உடைப்போர் ஆகியோர்கள், நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களின் நலனுக்காகப் பாடுபடுகின்றார்கள். எப்படி, நெசவாளர்களின் பங்கு மனித சமுதாயத்திற்குத் தேவையானதோ, அதேபோன்று சலவைத் தொழிலாளர்களின் பங்கும் இந்தச் சமுதாயத்திற்குத் தேவைப்படும் என்பதால், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், கல் உடைக்கும் இன மக்கள் ஆகியோருக்கு, அவர்களுடைய வயதான காலத்தில், உதவித் தொகை வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காகத் தனியாக ஒரு துறையை ஏற்படுத்திய பெருமை கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்கு உண்டு. நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில், எல்லா மக்களையும் உள்ளடக்கியது பெரும்பான்மை என்றும், மொழி, சமய வழிகளில் வந்திருப்பது சிறுபான்மை என்றும் கூறப்படுகிறது. எனவே, சிறுபான்மை என்று சொல்லப்படக்கூடிய மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய சிறுபான்மைத் துறை ஒன்றை அரசு ஏற்படுத்தி, அதற்குத் தனிச் செயலரை, துறையை இந்த அரசு ஏற்படுத்துமேயானால், அது அரசமைப்புச் சட்டத்திற்கு ஏற்புடையதாகவும் இருக்கும்; சிறுபான்மையின மக்களின் நலன் குறித்து இந்த அரசு தனிக் கவனம் செலுத்துகின்றது என்பதையும் மக்கள் ஏற்றுக்கொண்டு, பாராட்டுவார்கள். எனவே, ஒட்டுமொத்தமாக, பிற்படுத்தப்பட்டோர் என்று சொல்வதைவிட, நம்முடைய அரசமைப்புச் சட்டம் சொல்கின்ற சிறுபான்மையினத்தவர்களுக்கான — மைனாரிட்டியினரின் — உரிமைகளுக்காக அரசமைப்புச் சட்டம் பல விதிமுறைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. அவர்களுக்குத் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுதான் அரசமைப்புச் சட்டத்தினுடைய எதிர்பார்ப்பு. எனவே, மைனாரிட்டிக்காக தனித் துறை ஒன்று ஏற்படுத்த வேண்டும்; அது மிகவும் அவசியம்; அரசமைப்புச் சட்டத்தினுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்புடையது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லி, சிறுபான்மை மக்களுக்குத் தனியான ஒரு துறையை, தனிச் செயலரை, தனி அலுவலகத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மிகவும் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 1.45

இட ஒதுக்கீடு குறித்து இங்கே அதிகமாக நாம் பேசியிருக்கிறோம். நேரம் அதிகமில்லை; நான் அந்தப் பிரச்சினைக்குள் செல்ல விரும்பவில்லை. இட ஒதுக்கீடு பிரச்சினை என்பது, தமிழ்நாட்டு அரசினுடைய ஆதார சுருதியாக, அடிப்படையாக எப்போதுமே இருந்து வந்திருக்கிறது. அதுவும், நம்முடைய திராவிட இயக்கங்களினுடைய அச்சாணியே, இந்த இட ஒதுக்கீடு பிரச்சினை. ஆனால், இதிலே அண்மைக் காலத்திலே, என்னவோ தெரியவில்லை, சிலபேர் குறுக்கிட்டு, வேண்டுமென்றே குழப்பங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். பாராளுமன்றத்திலோ அல்லது சட்டமன்றத்திலோ இந்தப் பிரச்சினையை நாம் திசை திருப்பினால், அரசியல் ரீதியாக அது எடுபடாது; அதனுடைய விளைவைச் சந்திக்க வேண்டிவரும் என்று நினைக்கக்கூடிய சில சக்திகள், நீதிமன்றத்தைப் பயன்படுத்தி வருகிறார்களோ என்று நான் சந்தேகிக்கிறேன். நான் நீதிமன்றத்தின்மீது குற்றம் சொல்லவில்லை; I am very careful. I do not want to cast aspersions. அதேநேரத்திலே, எனக்கு அந்தச் சந்தேகம் பலமாக இருக்கிறது. எனவே, இதுகுறித்து நாம் எந்தவிதமான போராட்டத்திற்கும் தயாராக இருக்க வேண்டும். 69 சதவிகிதமே கூடாது என்று சொல்லக் கூடியவர்கள், சமூக நீதியை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஆண்டாண்டுக்காலமாக ஒடுக்கப்பட்ட அவர்கள், பிறக்கும்போதே தாழ்ந்தவர்களாகப் பிறக்கவில்லை; தாழ்த்தப்பட்டார்கள். பிறக்கும்போதே, பின்னே நின்று அவர்கள் பிறக்கவில்லை. 'நாங்கள் பின்னாலேதான் இருப்போம்; எந்த உற்சாகம் கொடுத்தாலும், முன்னேற மாட்டோம்' என்று அவர்கள் சொல்லவில்லை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, நம்முடைய சமுதாய அமைப்பு, பல பேரை நாட்டினுடைய பெரும்பாலான மக்களைத் தாழ்த்திவிட்டது. பெரும்பாலான மக்களைப் பின்னடையச் செய்துவிட்டது. எனவேதான், மீண்டும் அதற்குப் பரிகாரமாக அவர்களுக்கு இட ஒதுக்கீடு தர வேண்டும்; அதுதான் சமூக நீதி என்ற அடிப்படையில், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சமூக நீதித்திட்டத்தைத்—வேறுவிதமாக, கொல்லைப்புறமாக, அதைத் தகர்த்தெறிய வேண்டும் என்பதற்காக செய்யப்படுகின்ற சதிகளை முறியடித்து, நாம் நிச்சயமாக எந்த விலை கொடுத்தும், எந்தத் தியாகம் செய்தும், எந்த வகையிலேயும் அடைந்தே தீரவேண்டும்; அதற்கு நீதிமன்றத்திற்கு, இன்றைக்கு இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் சிக்கல்களோ, தர்மசங்கடங்களோ இருக்குமேயானால்,



அரசமைப்புச் சட்டத்தையே திருத்தி, நீதிமன்றத்திற்கு வழி ஏற்படுத்தும் வகையில் நாம் முயலவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நீதிமன்றத்தைப் பற்றி, இன்றைக்கு இருக்கிற தீர்ப்பைப் பற்றி நான் எதையும் வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஆனால் இது — this is our social aspiration. Even judiciary cannot, cannot just prevent social aspiration and social necessities என்ற அளவுக்குத்தான் நாம் சொல்லலாமே தவிர, நீதிமன்றத்தைப் பற்றி ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

அடுத்து, சிறுபான்மை மொழிகளைப் பற்றி நம்முடைய தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அதிகமாகப் பேசினார்கள். சிறுபான்மை மொழிகளிலே, தெலுங்கிற்கு, மலையாளத்திற்கு, கன்னடத்திற்கு சரியான இடம், முறையான இடம், நியாயமான இடம் நம்முடைய தமிழ்நாட்டிலே கொடுத்திருக்கிறோம். உருது மொழிக்கு — இங்கே இருக்கிற பெரியவர்களுக்குத் தெரியும்; நான் நம்முடைய பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் உள்ளடக்கித்தான் சொல்கிறேன்; பேராசிரியர் அவர்களைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை; ஏனென்றால், அவர் நீண்டகாலமாக அரசியலிலே இருப்பவர். இதே சென்னை நகரத்திலே, உருது மொழிப் பள்ளிகள் எவ்வளவு என்பது தெரியும். நம்முடைய மாநகராட்சி மன்றம் எத்தனை பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதை, மாண்புமிகு நம்முடைய போற்றுதற்குரிய மேயர் அவர்களேகூட இருக்கிறார்கள்; சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆயிரக்கணக்கான உருதுப் பள்ளிகள் மூடப்பட்டுவிட்டன; இன்றைக்கும் மூடப்பட்டு வருகின்றன. நடக்கின்ற பள்ளிகள்கூட, 'சவலைப்' பள்ளிகளாக, கால் இருந்தால் கை இல்லை; கை இருந்தால், கால் இல்லை; முகம் இருந்தால் கண் இல்லை என்ற அளவுக்குத்தான் இன்றைக்குச் சென்னை நகரில், உருதுப் பள்ளிகள் முடமாக்கப்பட்டிருக்கின்றன. கல்வி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், தயவுசெய்து உருதுப் பள்ளிகளுக்கு நியாயமான நிலையை வழங்க வேண்டும். உருதுப் பள்ளிகளில் அவர்கள் தேவைக்கு மேலான சலுகைகளை யாரும் கோரவில்லை. அதேநேரத்தில் அந்தப் பள்ளிகள் எல்லாம் நடப்பதற்கு, வாழ்வதற்கு என்ன என்ன வழிகள் இருக்கின்றனவோ அவற்றைச் செய்யுங்கள். நான் இன்றைக்கும் புள்ளிவிவரங்களை யாராவது கேட்டால் தரத் தயாராக இருக்கிறேன். எனக்குத் தெரிந்து நூற்றுக்கணக்கான உருதுப் பள்ளிகள் இன்றைக்கு மூடப்பட்டுவிட்டன. அவைகளை எல்லாம் மீண்டும் நடத்துவதற்கு,

அப்படி நடத்தினால் நியாயமாக நடப்பதற்கு நீங்கள் தயவுசெய்து ஆக்கம் தர வேண்டும். அதற்காகத்தான் ஒரு உருது அகாடமி கேட்டோம்.

பிற்பகல் 1-50

உருது அகாடமி என்றால் பெரிய செலவினம் இல்லை. போன ஆட்சியிலே அவர்கள் அறிவித்தார்கள் உருது அகாடமி ஏற்படுத்தப்படும் என்று. இந்த ஆட்சியிலே உருது மொழி வளர்ச்சிக்காக, அதனுடைய பாதுகாப்பிற்காக உருது அகாடமி ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை நான் மிகுந்த மரியாதையோடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவர்கள் ஆரம்பிக்கிறேன் என்றுதான் சொன்னார்கள். பல விஷயங்களில் ஆரம்பிக்கிறேன் என்றுதான் சொன்னார்கள். ஆனால் ஆரம்பித்ததெல்லாம் வேறு விஷயம். இப்போது பேசப்படுகின்ற விஷயங்களைத்தான் அவர்கள் ஆரம்பித்தார்கள். நான் அவர்களைப் பற்றி இப்போது பேசவிரும்பவில்லை. நேரம் எனக்குப் போதவில்லை. உருது அகாடமி மற்ற மாநிலங்களில் எல்லாம் இருக்கின்றது; கர்நாடகாவில் இருக்கின்றது; ஆந்திராவில் ஐதராபாத்தில் இருக்கின்றது; இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் அனைத்திலும் இருக்கின்றது. எனவே இந்த மாநிலத்தில் அந்தக் குறையை நீக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த தடவை கலைஞரிடத்தில் நாங்கள் சொன்னோம், சிறுபான்மை ஆணையம் வேண்டுமென்று. எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது என்று சொன்னோம். உடனடியாக அவர்கள் ஒரு சிறுபான்மை ஆணையத்தை ஏற்படுத்தித் தந்தார்கள். அது இப்போதும் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒன்று. சிறுபான்மை ஆணையத்திற்கு ஸ்டேச்சுட்டரி ஸ்டேட்டஸ் வேண்டும். அதாவது சட்ட அந்தஸ்து வேண்டும். இன்றைக்கும் அந்த அரசினுடைய பரிந்துரை பரிந்துரையாகத்தான் இருக்கிறது. உருதைப் படிப்பதே அபூர்வம், படித்துவிட்டாலும் அதை நடைமுறைப்படுத்துவது அபூர்வம் என்ற நிலையிலே சிறுபான்மை ஆணையம் இருந்து கொண்டிருக்கிறது. எனவே தயவுசெய்து சிறுபான்மை ஆணையத்திற்கு both in the Centre, as well as in the State — நான் மற்ற மாநிலங்களைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை—சிறுபான்மை ஆணையத்திற்கு அந்த ஸ்டேச்சுட்டரி ஸ்டேட்டஸ், சட்ட அந்தஸ்தை மாண்புமிகு கல்வி அமைச்சர்



பேராசிரியர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் இருங்கள், நான் இன்றைக்கு வந்ததே இதைப் பேசுவதற்காகத்தான். டாக்டர் என்னைப் போகக்கூடாது என்று சொன்னார். நான் இங்கு வந்து பேசவில்லையென்றால் வெளியில் என்னைத் திட்டுகிறார்கள். அதனால்தான் வந்திருக்கிறேன். இதோ முடித்துவிடுகிறேன். என்னைக் கடைசியாக அழைத்திருக்கிறீர்கள். எனவே தயவுசெய்து அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 23 ஆண்டுகள் ஆகிவிட்டன. உருது பேசுகிற முஸ்லீம்களை நீங்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துவிட்டீர்கள். அதற்காக நன்றி செலுத்துகிறோம். உருது பேசுகிற முஸ்லீம்கள் அல்லது முஸ்லீம்கள் எல்லோரையுமே ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது அப்படி அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்ததனால் அதில் எத்தனை பேர் பயனடைந்திருக்கிறார்கள்? அதற்கு முன்பு எத்தனை பேர் பயனடைந்தார்கள்? அவர்களை இப்படிச் சேர்த்த பிறகு, அந்த ஜி.ஓ. வெளியிட்ட பிறகு எத்தனை முஸ்லீம்களுக்கு இடம் கிடைத்திருக்கிறது என்று ஹையர்-அப்ஸ்தான் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நான் சொல்கிறேன் ஒன்றுமே இல்லை. அவர்களைச் சிறுபான்மை பட்டியலில், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்ததனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. முன்பு இருந்ததைவிட இப்போது ஒருவர்கூட அதிகமாகப் பயன் பெறவில்லை. இன்றைக்கு நான் சொல்கிறேன், இந்தியாவிலேயே மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள்கூட அல்ல, கேடுகெட்ட சமுதாயமே முஸ்லீம் சமுதாயம்தான். தாழ்ந்தவர்களிலேயே மிகவும் தாழ்ந்த சமுதாயம் முஸ்லீம் சமுதாயம். கீழக்கரைக்காரனையோ அல்லது காயல்பட்டினக்காரனையோ பார்த்துவிட்டு முஸ்லீம்கள் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள் என்று தயவுசெய்து நீங்கள் நினைத்துவிடக்கூடாது. அவர்கள் சிறுபான்மைதான். பிச்சையெடுப்பதில் மட்டும் பெரும்பான்மை. நாதாரியாக ஊர் சுற்றுவதிலே, தர்மம் கேட்பதிலே, கிழிந்த உடைகளை உடுத்திக் கொண்டு ஒருவேளை சாப்பிட்டு, மறுவேளை சாப்பிடாதவனாக இருக்கக்கூடிய சமுதாயம் இன்றைக்கு இந்தியாவிலே ஏதாவது இருக்கிறது என்று சொன்னால் அது இஸ்லாமிய சமுதாயம்தான். அவர்கள் என்றைக்கு வரையிலே இந்த நாட்டிலே பலகீனர்களாக, பிச்சைக்காரர்களாக இருக்கிறார்களோ அன்று வரையிலே இந்தியாவினுடைய ஒரு பகுதியே பலகீனமாக இருந்து கொண்டிருக்கும். எல்லாச் சமுதாயத்தையும் நான் கேட்டுக் கொள்கிறேன், அவர்களுடைய எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டாம், எண்ணிக்கையை வேண்டுமானால் குறைத்துக்

கொள்ளுங்கள். நாம் தயவுசெய்து அவர்களுடைய சதவிகிதத்தின் அடிப்படையில் இட ஒதுக்கீடு கொடுக்காத வரையில் அவர்கள் முன்னேற மாட்டார்கள். கேசரி அவர்கள் 10 சதவிகிதம், 10 சதவிகிதம் என்று சொல்லிக்கொண்டிருந்தார். இப்போது தலைவராக இருக்கிறார், பேசமாட்டேன் என்கிறார். முன்பு அந்தக் கட்சிக்குத் தலைவராக இருந்தபோது திரும்பத் திரும்பச் சொன்னார். 10 சதவிகிதம் சிறுபான்மை மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். இப்போது பேசுவதில்லை. பேசுகின்ற நேரம் அவருக்கு வரும் என்று நான் நினைக்கின்றேன். அதற்கான உத்தரவு போடுகின்ற இடம் வருகிறதோ இல்லையோ, அது எனக்குச் சந்தேகம். ஆனால் அவர் பேசுகின்ற நேரம் மறுபடியும் வரும். எவ்வளவு இருக்கிறோம் இந்த மாநிலத்திலே, 5 சதவிகிதமா, 7 சதவிகிதமா, 10 சதவிகிதமா அதிலே வேண்டுமானாலும் 2 சதவிகிதத்தைக் குறைத்துக்கொண்டு எங்களுக்கு இட ஒதுக்கீடு கொடுங்கள். கேரளாவில் அபிசியலாக 12 சதவிகிதம் கொடுத்திருக்கிறார்கள். கர்நாடகாவில் 8 சதவிகிதம் கொடுத்திருக்கிறார்கள். அது என்ன அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்பதை நான் விளக்க விரும்பவில்லை. பக்கத்தில் இருக்கிற கேரளாவில் இட ஒதுக்கீடு உள்ளது; கர்நாடகாவில் உள்ளது; வேறு மாநிலங்களிலே உள்ளது; ஆனால் சமூக நீதிக்காகப் போராடுகின்ற நம்முடைய தமிழகத்தில் அது இல்லை. அது இல்லாமல் ஆக்கப்பட வேண்டும்; அவ்வளவுதான். தயவுசெய்து பேராசிரியர் அவர்கள் இதை கவனத்தில் கொண்டு வழிகாண வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

தற்போது கலவரம் ஏற்பட்டால் உடனே அதை அடக்குவதற்காக ஒரு படையை போலீஸ் துறையிலே புதிதாகப் போடப் போகிறீர்கள். அதிலாவது முஸ்லீம்களுக்கு நீங்கள் அதிக இடம் கொடுங்கள். 1965-லே லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் ஒரு ஜீ.ஓ. அனுப்பினார்கள். நீங்கள் வேண்டுமானால் உங்கள் துறையிலே கேட்டுப்பாருங்கள்; அந்த ஜீ.ஓ.வை எடுத்துப் பாருங்கள். லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பிரதமர் என்ற முறையில் ஒரு ஆணையிட்டிருக்கிறார்கள். இரண்டு சதவிகிதம் இருக்கிற மாநிலத்திலேகூட போலீஸ் துறையிலே மட்டும் முஸ்லீம்களுக்கு 10 சதவிகிதம் கொடுத்தே ஆகவேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். இன்றைக்கும் அந்த ஆணை எக்ஸிஸ்டிங்கில் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் நாங்கள் 10 சதவிகிதம் இருக்கிறோமா? 3 சதவிகிதம், 4 சதவிகிதம் என்று இருந்து கொண்டிருக்கிறோம். இந்த



ஐ.ஏ.எஸ்.-ஐ எடுத்துக்கொண்டால் 9 பேரோ, 10 பேரோ இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரே ஒரு ஆள்தான் கலெக்டர். மற்றவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள், அவர்கள் யார் என்று தெரியவில்லை. ஐ.பி.எஸ். ஆபிசரை எடுத்துக் கொண்டால் எத்தனை பேர் ஐ.பி.எஸ். ஆபிசர்களாக இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு ஜில்லாவிலும் சூப்பரின்டெண்டென்டுகளாக அவர்கள் இல்லை. அவர்கள் எல்லாம் ஆங்காங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். எங்கே இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. கணக்கைப் போட்டுக் கொடுங்கள் என்று சொன்னால் நான் கொடுக்கிறேன். தயவுசெய்து எங்களுக்கு நீதி வழங்குங்கள். இந்த ஆட்சி சமூக நீதியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஆட்சி. எனவே இதையெல்லாம் கருத்தில்கொண்டு இப்போது எடுக்க இருக்கின்ற போலீஸ் வேலையிலாவது தயவுசெய்து 10 சதவிகிதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலவரத்தை அடக்கும்போது அதில் கொஞ்சம் முஸ்லீம்கள் இருந்தால் நன்றாக இருக்கும். சரியோ, தவறோ நான் எதையும் மறைக்க விரும்பவில்லை. கலவரம் வந்துவிட்டால் யாருமே மனிதர்களாக இருப்பதில்லை. ஜாதிக்காரர்களாக மாறிவிடுகிறார்கள். கலவரம் வந்துவிட்டால் அந்தக் கலவரத்திலே இருப்பவர்களை மனிதர்கள் என்று நினைப்பதில்லை. அவர்கள் யாராக இருந்தாலும் சரி, இந்துவாக இருந்தாலும் சரி, முஸ்லீமாக இருந்தாலும் சரி, சாதி உணர்வு மேலோங்கிப் போகின்ற ஒரு சமூகத்திலே அதைக் குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களுடைய சிறுபான்மை மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நேரம் அதிகம் இல்லாததாலும், உடல் நலம் இல்லாததாலும் (குறுக்கீடு) என்னுடைய ஹெல்த்தை நான் எப்படிப் பார்ப்பது? எங்களுடைய சமுதாயத்தினுடைய ஹெல்த் சரியில்லையே! அவர்களுடைய ஹெல்த் சரியானால்தானே என்னுடைய ஹெல்த் சரியாகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வந்துவிட்டார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அவர்களுக்கு நான் மேலும் தொந்தரவு கொடுக்காமல் நான் சொன்ன இந்தக் கோரிக்கைகள் குறித்து உங்களிடத்திலே வற்புறுத்துகிறேன். அனைவரும் எங்கள்மீது அனுதாபம் கொள்ளுங்கள். நாங்கள் எங்களுக்காகவே வாழவில்லை, எல்லோருக்காகவும் வாழ்கிறோம். இன்னும் நேரம் வந்தால் எங்களுக்குள்ளதை எல்லாம் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறோம். பெரும்பான்மையினர்

சிறுபான்மையினர் என்ற உணர்வுகள் எல்லாம் எங்களுக்கு இல்லை. நாங்கள் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். எனவே நான் கேட்டதை எங்களுக்குச் செய்துகொடுங்கள். கடைசியாக ஒன்று. கிழக்கிந்திய மொழிகளை எல்லாம் நாம் காப்பாற்ற வேண்டும். அதில் உருதுவும் ஒன்றாகும். அரபி இருக்கிறது. பார்சி இருக்கிறது. அரபியும் எங்களுக்கு முக்கியம்தான். தமிழை எப்படி நான் நேசிக்கிறேனோ அப்படி அரபியையும் நேசிக்க வேண்டும். காரணம் அது எங்களுடைய மறை மொழி. அதை நான் மறைக்க விரும்பவில்லை. எனவே காயிதே மில்லத் அவர்களுடைய பெயரிலே — பல பெயர்களில் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தியிருக்கிறோம் — ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தி, Quaid-e-Milleth College for Oriental Languages என்ற பெயரிலே ஒரு பல்கலைக் கழகத்தை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

***திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய உளப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் தமிழகத்திலே எவ்வளவு பேர்கள் வாழ்கிறார்கள் என்கிற குறிப்பில்லை. ஆதிதிராவிடர் பழங்குடியினர் துறையிலே அவர்கள் குறிப்பாக கணக்கு வைத்து, ஏறத்தாழ 20 சதவிகித மக்கள் வாழ்கிறார்கள் என்கின்ற குறிப்பைக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இந்தத் துறையைப் பொறுத்த அளவிலே இதிலே பிற்படுத்தப்பட்டோர் எவ்வளவு, சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எவ்வளவு என்கின்ற கணக்கு இல்லாத காரணத்தினாலே, இன்றைக்கு நமது அரசு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நன்மை செய்கின்ற அரசு என்கின்ற காரணத்தால், ஏறக்குறைய மிகப் பெரும்பான்மையாக உள்ள வகுப்பையெல்லாம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்த்திருக்கின்ற

ஆட்படுத்தப்பட்ட மக்கள், இராமநாதபுரம், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்களுடைய கல்வி, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக 1921-ஆம் ஆண்டு இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றதைப்போல சீர்மரபினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற கள்ளர் சீரமைப்புத் துறை என்பது இன்றைக்கும் மதுரை மாவட்டத்திலும், வீரன் அழகு முத்துக்கோன் மாவட்டத்திலும், திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டத்திலும், மூன்று மாவட்டங்களிலும் இருப்பவர்களுக்காக ஒரு துறை இருக்கிறது. கள்ளர் சீரமைப்புத் துறையிலே அதை ஆரம்பித்த காலத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னிடம் கேட்டது மூன்று நிமிடம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் பேசி முடித்து விடுகிறேன். இந்தக் கள்ளர் சீரமைப்புத் துறையிலே அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே அந்த இன மக்களை குறிப்பாக ரேகைச் சட்டத்தில் ஆழ்த்தப்பட்ட பின்தங்கிய மக்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட அந்தத் துறையிலே அவர்களுக்குத்தான் 65 சதவிகிதம் வரை வேலைவாய்ப்பிலும் மற்றும் கல்வியிலும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற நிலையிருந்தது. அது படிப்படியாகக் குறைந்துவந்து 20 சதவிகிதம் பிற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிலைதான், அந்தத் துறையிலும் இருக்கிறது. அதை மாற்றி முன்புபோல, சமூக ரீதியிலே பிற்படுத்தப்பட்ட அவர்களுக்கு முந்தைய காலத்தைப்போல 65 சதவிகிதம் இட ஒதுக்கீட்டைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழ்நாட்டில் தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் விட்டுச்சென்ற கொள்கைகளை, பணிகளைத் தொடர்ந்திட, அருமருந்தாய்த் தோன்றிய நம் முதல்வர் கலைஞர் அவர்கள் தன்னுடைய அமைச்சரவையில் என்னையும் இணைத்து, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்க வைத்து, இந்தப் பெருமைமிகு பேரவையில் இந்தத் துறையினுடைய



மானியக் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் எனக்கு இரண்டாவது முறையாகப் பேசுவதற்கு உரிமை தந்த தானைத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்த என்னை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக்கி, தமிழகத்தில் அதிகப்படியாக வாழும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நன்மை பெற நல்ல பல திட்டங்களைத் தந்துள்ளார்கள். ஆம். படிக்கின்ற மாணவன் படுந்துயரம் நீக்கிட படிப்பு உதவித் தொகை அளித்தல்; காலங்காலமாய் கல்வி பயின்றிட காசு பணம் கட்டிய நிலையை மாற்றி இலவசக் கல்வி அளித்தல்; கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாய்ப் பாடப் புத்தகங்கள் அளித்தல்; வீடின்றி வாழுகின்ற நாதியற்ற ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைத் திட்டம்; சலவை செய்யும் தொழிலாளி; சங்கடங்கள் தீர்ந்துவிட சலவைப் பெட்டிகள்; முடி திருத்தும் தோழனின் முகவாட்டம் போக்கிட. முடிதிருத்தும் கருவிகள்; கல்லுடைக்கும் பாட்டாளியின் கவலைகள் போக்கிட; கல்லுடைக்கும்; கருவிகள்; படிக்கின்ற மாணவன் முதலிடம் பெற்றால்; பகுத்தறிவுப் பகலவன் பெரியார் பெயரிலும், பாசமிகு தலைவர் அண்ணா பெயரிலும் விருதுகள் வழங்குதல்; சமூகநீதி காக்க தங்களை அர்ப்பணித்த சமுதாயத் தலைவர்களுக்கு விருதுகளை வழங்குதல் போன்ற இப்படிப்பட்ட ஏராளமான திட்டங்களை வாரி வழங்கும் அரசாக, உண்மையான சமூகநீதிக் காவலர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அரசு திகழ்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்கான மானியம் இன்றையதினம் விவாதிக்கப்பட்டு, அது நிறைவேற்றித் தரப்பட வேண்டுமென்ற கட்டத்தில், இந்த மானியத்தின் அடிப்படையிலே 13 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கியமைக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இச்சமுதாய மக்களுக்குத் தேவையான சலுகைகளை அறிந்து, உணர்ந்து, அவர்கள் எதிர்பார்க்கின்ற அளவிற்கு நமது முதல்வர் அவர்கள் வழங்கி வருகிறார்கள் என்பதற்கு இந்த மானியக் கோரிக்கையே சான்றாகும்.

1969-ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக முதன்முதலில் ஒரு தனித் துறையை உருவாக்கியவர் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, 1989-90-ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு என்று தனியாக ஒரு துறையை உருவாக்கி, இப்படி இரண்டு துறைகளையும் உருவாக்கியவர் தானைத் தலைவர், முதல்வர் கலைஞர் அவர்கள்தான் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சில இலட்சம் ரூபாய்களுடன் தொடங்கிய இந்தத் துறைக்கு ஒதுக்கீடு இன்றையதினம் 64.32 கோடி ரூபாய் என்கிற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது என்றால் அது நமது முதல்வர் அவர்கள் இத்துறையின் மீது கொண்டுள்ள அக்கறையையே பிரதிபலிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்பது நீண்ட நெடுநாட்களாக, அதாவது 1921 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது என்பது வரலாற்று உண்மையாகும். தமிழ்நாட்டில் பெரும்பகுதி மக்களைக் கொண்ட இச்சமுதாயத்தினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரத் தன்மைகளை மேம்படுத்தும்பொருட்டு தற்பொழுது கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 30 விழுக்காடும், மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பினருக்கு 20 விழுக்காடும், ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு 18 விழுக்காடும், பழங்குடியினர் வகுப்பினருக்கு 1 விழுக்காடும் என மொத்தம் 69 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மண்டல் குழு வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் காரணமாக மிகப் பரந்துபட்ட அளவில் ஏற்படவிருந்த விளைவுகள் குறித்து, தமிழகம் முழுவதும் பெரும் கவலைக்குள்ளாகியது. இம்மாநிலத்தில் கல்வியிலும், வேலைவாய்ப்புகளிலும் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு வகைசெய்து 1993-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அனைத்து அரசியல் கட்சிகளின் ஒருமித்த ஆதரவுடன் சட்டமொன்றை இயற்றியது. அதுதான் தமிழ்நாடு சட்டம் 45/1994 ஆகும். இந்தத் தமிழ்நாடு சட்டமானது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம், அரசியலமைப்புச் சட்டத்தின் 9-வது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டது.



பிற்பகல் 2-10

இந்தத் தமிழ்நாடு சட்டம் 45/1994-ன் செல்லுந்தன்மையினை எதிர்த்து பல்வேறு ரிட் மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மாநிலத்தில் நடைமுறையிலுள்ள 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைப் பாதுகாத்திட அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திட இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

மேலும் மாநிலத்தின் தேவைக்கேற்ப, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் கடைப்பிடிக்கும் இட ஒதுக்கீட்டின் அளவினை மாநில அரசுகளே நிர்ணயித்துக் கொள்ளும் வகையில் அரசமைப்புச் சட்டத்தினை மைய அரசு திருத்த வேண்டுமென்று, பாரதப் பிரதமர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மத்திய அரசுப் பணியிடங்களில் மட்டும் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசுக் கல்வி நிறுவனங்களில் இந்த 27 விழுக்காடு இட ஒதுக்கீடு அனுமதிக்கப்படவில்லை. எனவே இந்த 27 விழுக்காடு வேலைவாய்ப்புகளில் வழங்கப்பட்டுள்ளது போன்று மத்திய அரசு கல்வி நிறுவனங்களின் சேர்க்கைக்கும் விரிவுபடுத்த வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டு இது தொடர்பாக பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களிடையே மாற்றத்தை உண்டாக்கக்கூடியதும், மக்களிடையே தன்மானத்தை வளர்க்கக்கூடியதும், மக்களிடையே சமுதாய மதிப்பை உயர்த்தக்கூடியதுமாகிய கல்வியின் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினருக்குக் கல்வி வழங்குவதில் அதிக கவனம் செலுத்தி வருவதுடன், இலவசக் கல்வி அளித்தல், ஆங்கில மொழி வழியில் பயிலும் மாணவ மாணவியருக்கு கல்விக் கட்டணத்தை ஈடுசெய்தல், புத்தகங்கள், எழுது பலகைகள் மற்றும் சீருடைகள் இலவசமாக வழங்குதல், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளைப் பராமரித்தல் போன்ற பல்வேறு சலுகைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

கிட்டத்தட்ட, ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எனஆக மொத்தம் 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இன்றையதினம் இந்தத் துறையால் நல்லமுறையில்

பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1996-97-ஆம் ஆண்டில் 55,346 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். நடப்பாண்டில்—1997-98-ஆம் ஆண்டில் இப்பள்ளிகளை நிர்வகிக்க ரூ. 12.22 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக, கிராமத்தில் படிக்கின்ற ஏழை எளிய மாணவர்கள் வசதியில்லாமல் இருக்கின்ற காரணத்தால், போதிய உணவின்றி வாழ்கின்ற நிலையில் இருக்கின்ற அவர்களுக்கு என்று விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்காக 880 விடுதிகள், நடத்தப்பட்டு இந்தத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த விடுதிகளில் மொத்தம் 50,046 மாணவ மாணவியர் தங்கிப் பயில்கின்றனர். இவ்விடுதிகளில் தங்கியுள்ள மாணவ மாணவியருக்கு வருடத்திற்கு இரண்டு தடவை—தீபாவளித் திருநாளில் ஒரு முறையும், பொங்கல் திருநாளில் ஒரு முறையும்—இலவசமாக சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டில், இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் போன்ற செலவுகளுக்காக ரூ. 24.89 கோடி தொகை செலவிடப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

அதேபோல கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் இலவசமாகச் சீருடைகள் ஆண்டிற்கு இருமுறை வழங்கப்படுகின்றன. இதற்கு 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 81.40 இலட்சம் செலவிடப்படும்.

ஏழை எளிய மாணவர்கள் நல்லமுறையில் படிக்க வேண்டும்; கல்வியின் திறனை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த அரசு பல ஊக்கப் பரிசுகளை வழங்கி வருகிறது. கல்வியில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பு மாணவ மாணவியர்களை ஊக்குவிக்கும்பொருட்டு பல்வேறு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் 12 ஆம் வகுப்பில் முதலிடம் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினராயிருப்பின் ரூ. 3,000 எனவும், மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினராயிருப்பின் அவருக்கு ரூ. 5,000 எனவும் வழங்கப்படுகிறது. மாநில அளவில் 10 ஆம் வகுப்பில் முதலிடம் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினராயிருப்பின் ரூ. 1,500 எனவும், அதுவே மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினராயிருப்பின் ரூ. 3,000 எனவும் வழங்கப்படுகிறது.



பிற்பகல், 2-15

இதேபோன்று மாவட்ட அளவிலும் முதலிடம் பெறும் மாணவ மாணவியர்களுக்கும் பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. இதற்கென ரூ. 1.67 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு:**

மாவட்ட அளவில் 12 ஆம் வகுப்பில் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பெற்று பொறியியல் மற்றும் மருத்துவம் போன்ற தொழிற்கல்வி பயிலுகின்ற இரண்டு மாணவர்கள், இரண்டு மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு தலா ரூபாய் 3,000 நான்கு வருடங்களுக்கு வழங்கப்படுகிறது.

**தந்தை பெரியார் நினைவுப் பரிசு:**

மாவட்ட அளவில் 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறுகின்ற, முதல் இரண்டு இடங்களைப் பெற்று பல்தொழில் பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயில்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றிற்கு ரூ.3,000 வீதம் மூன்றாண்டுகளுக்கு தந்தை பெரியார் பெயரால் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இதற்காக ஆகும் செலவுக்கு 1997-98 ஆம் ஆண்டிற்கென ரூ.11.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சமுதாய, கல்வி மற்றும் பொருளாதாரரீதியில் பின்தங்கிய மாணவ மாணவியர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு, தொழில் சார்ந்த பயிற்சிக்கு ஊக்குவித்து அவர்களுக்குப் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

20 சட்டப் பட்டதாரிகளுக்கு சிறந்த முறையில் பயிற்சி பெற்று நல்லமுறையில் அவர்கள் வளரவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த அரசு அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு மாதம் 750 ரூபாய் வீதம் உதவித் தொகை 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. பயிற்சி அளிக்கும் சீனியர் வழக்கறிஞர் ஒவ்வொருவருக்கும் வருடத்திற்கு

5,000 ரூபாய் என்று வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் 8.63 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல உயர்கல்வி பெறாத ஏழை எளிய, நடுத்தர மக்களுக்கு வேலை பெறும் வாய்ப்பு அதிகரிக்கப்படுகிறது. இன்றைக்கு ஐ.ஆர்.டி. ஓட்டுநர் பயிற்சி மூலமாக தனி நபர் ஒருவருக்கு 3 மாத காலம் ரூ. 9,000 பயிற்சிக் கட்டணமாக வழங்கி, அவர்களுக்கு உணவுக் கட்டணமாக ரூ. 193 வழங்கி, கிட்டத்தட்ட பிற்படுத்தப்பட்டோர் 150 பேர்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 100 பேர்களுக்கும், ஆக மொத்தம் 250 பேர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி ஆண்டுதோறும் இந்தத் துறையின் மூலமாக வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் கிராமப்புறங்களில் இந்த வகுப்பினருக்கு, ஏழை எளியவர்களுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து, தொலைபேசி, தொலை அச்சு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. 1997-98 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் சுமார் 1,080 நபர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு ரூ. 6.25 இலட்சம், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பத்தினர், குறிப்பாக, பெண்கள் வேலை பெற்றிடும் வாய்ப்பு அதிகரிக்கப்படுகிறது.

அனைத்திந்தியப் பணிகளான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற பணிகளுக்கு நடைபெறும் தேர்வுகளுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கின்ற வகையில் சென்னை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாய மாணவர்கள் தங்கிப் படிக்கின்ற விடுதிகளுக்கு உரிய செலவினையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு, இந்தப் பயிற்சித் திட்டத்திற்காக 1997-98-ஆம் ஆண்டில் மொத்தம் 23 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட இருக்கிறது. கடந்த ஆண்டு, 1996 ஆம் ஆண்டில் நடந்த தேர்வில் இப்பயிற்சி நிலையத்தில் பயின்ற 25 மாணவர்கள் முதன்மைத் தேர்ச்சி பெற்று நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள உள்ளனர் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பயிற்சி நிலையம் பிற மாவட்டத் தலைநகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 13-3-1997 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்பயிற்சி நிலையத்திற்கென சென்னை,



சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் சுமார் 1,200 சதுரமீட்டர்கள் பரப்பில் தனியாக சொந்தக் கட்டிடம் கட்டிக்கொள்ள இடமளிப்பதாக உறுதியளித்துள்ளார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 2-20

அடுத்ததாக வாழ்க்கைத் தொழிற்பயிற்சி—மையங்கள். இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர், மதுரை மாவட்டம் செக்காணூரணி மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் வீரகேரளம்புதூர் ஆகிய மூன்று இடங்களில் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென மையங்களை நடத்துவதுடன், இதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு 208 பேர் பயனடைந்து வருகின்றார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென நடப்பு ஆண்டிற்கு ரூ. 35.88 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மகளிர் முன்னேற்றத்திற்காக, திருநெல்வேலி-கட்டபொம்மன், மதுரை, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தென்னாற்காடு-வள்ளலார் ஆகிய மாவட்டங்களில் ஏழு தையற் பயிற்சி மையங்களும், கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையில் நார் இழைத் தயாரிப்புப் பயிற்சி மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. 1997-98-ஆம் ஆண்டிற்கென ரூ. 9.76 லட்சம் நிதி ஒதுக்கீடும் இதற்காகச் செய்யப்பட்டுள்ளது எனவும், தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக நலிந்த மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களின் அடிப்படையில் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம். நிலமற்ற மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கப்படுவதற்காக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த நடப்பாண்டில் ரூ. 10 கோடியை உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன்தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டு இதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. வறுமைக் கோட்டிற்குக் கீழே கிராமப்புறங்களில் வாழும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென இலவச வீட்டுமனைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழே கிராமப்புறங்களில் வாழும் முன்னேறிய வகுப்பு மக்களில் ஏழைகள் இருந்தால் அவர்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் இல்லையென்றால்,

அவர்களுக்காக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, அதற்காக ரூ. 3 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம், இலவச வீட்டுமனைத் திட்டங்களுக்காக 1997-98-ஆம் ஆண்டில் 18 கோடி ரூபாய் செலவிடப்பட்டு இத்திட்டம் கிராமப்புறங்களிலும் சீரியமுறையில் செயல்படுத்தப்பட உள்ளது என்பதோடு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளுக்காகக் கோரிய திட்டங்களின்படி, அனைத்துக் கிராமங்களிலும் இத்திட்டம் நிறைவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற ஆண்டுகளிலும் இத்திட்டத்தை நீட்டித்துக் கொடுக்க முதல்வர் கலைஞர் அவர்கள் ஆவன செய்வார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் இத்துறை மூலமாக இவ்வகுப்பினருக்குக் கடனுதவி வழங்குவதில் இருந்த இடையூறுகள் அனைத்தும் களையப்பட்டு பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வாயிலாக விரைந்து கடனுதவி வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதல்முறையாக இத்துறையின் மூலமாகக் கறவை மாடுகள் வாங்கிட கடன் வழங்கும் திட்டமும் இந்த நடப்பு ஆண்டிலிருந்து துவக்கப்பட ரூ. 4.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக சுமார் 2,200 நபர்கள் பயனடைவார்கள் என்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்நிறுவனத்தின் மூலமாக வாடகை வாகனங்கள், கணிப்பொறி சாதனங்கள், பொறியியல் பட்டறை, தோல் ஆடைகள், விசைத்தறிகள் முதலிய சுய வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து நிதியுதவி வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய திட்டங்கள் அடிப்படையில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் தங்கிப் பயிலும் 4-வது வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இலவசப் பாடநூல் வழங்குவதற்காக ஆகும் செலவினம் ரூ. 12.10 லட்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-25

அடுத்து கணினிப் பொறி பயிற்சி. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கம்ப்யூட்டர் மயமாக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இந்தத் துறை மூலமாகப் பயிற்சி பெறுகிற வகையில் கடந்த ஆண்டு 175 மாணவர்களுக்குக் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த



ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், 1000 மாணவ, மாணவிகள் பயிலும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) கம்ப்யூட்டர் பயிற்சி வழங்கப்படும் என்று உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 58.99 லட்சம் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பரவலாக அனைத்து மாவட்டங்களிலும் கம்ப்யூட்டர் பயிற்சி மையம் தொடங்கப்பட்டு அதன்மூலம் ஏழையெளிய மக்கள், பாட்டாளி மக்களுடைய பிள்ளைகள் கம்ப்யூட்டர் மூலம் பயிற்சி பெற்று வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சலவையாளர்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் 200 துணி தேய்ப்புப் பெட்டிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்கி இருப்பதாகச் சொன்னார்கள். அது தவறு. கடந்த ஆண்டு அளித்த 6,000 பெட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் அனைத்துப் பகுதி மக்களும் பயனடையும் வகையில் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 4,000 பெட்டிகளுக்குத் தான் அனுமதி அளித்தார்கள். நேற்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் 2,000 பெட்டிகள் கூடுதலாகக் கொடுத்து, 6,000 பெட்டிகள் என்று அறிவிக்கச் சொன்னார்கள். ஏனென்றால் அனைத்துப் பகுதிகளிலும், சலவையாளர்கள், பெட்டிகள் வேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுப்பதால், அந்தக் கோரிக்கைகளை ஏற்று 6,000 பெட்டிகளை இந்த ஆண்டுக்குள் வழங்குவதற்கு கலைஞர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இதற்காகும் செலவு ரூ. 69.66 லட்சம் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கல் உடைக்கும் கருவிகள். கல் உடைக்கும் கருவிகள் கடந்த ஆண்டு 500 நபர்களுக்கு மட்டும்தான் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 1000 நபர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது என்பதையும், அதற்காகும் செலவு ரூ. 6.76 லட்சம் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முடிதிருத்துவோருக்கான கைப்பெட்டிகள் கடந்த ஆண்டு 500 நபர்களுக்கு என்று அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு கலைஞர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆயிரம் நபர்களுக்கு வழங்குவதற்கு

உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும், அதற்காகும் செலவு ரூ. 2.94 லட்சம் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த கால ஆட்சியில் ஆண்டுக்கு 10 விடுதிகள், 20 விடுதிகள் என்றுதான் தந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் கடந்த நிதிநிலை அறிக்கையை அளிக்கும்போது எத்தனை விடுதிகள் வேண்டுமென்று கேட்டார்கள். 40 விடுதிகள் போதும் என்று சொன்னேன். 45 விடுதிகள் கொடுத்தார்கள். இந்த ஆண்டு எவ்வளவு விடுதிகள் வேண்டுமென்று கேட்டார்கள். 60 விடுதிகள் வேண்டுமென்று கேட்டேன். 62 விடுதிகளை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் திறப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி மாணவ, மாணவிகள் தங்கிப் பயில சுமார் 169.47 லட்சம் ரூபாய் செலவில் - முன்பு சொன்னதுதான் - 62 புதிய விடுதிகள் உடனடியாகத் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பள்ளி மாணவ, மாணவியர்கள் தங்கிப் பயிலும் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 13 விடுதிகளுக்கு ரூ. 280.21 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளுடன் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இராமசாமி அவர்கள் கிட்டத்தட்ட 125 கட்டடங்கள்தான் கட்டப்பட்டிருக்கின்றன. மீதிக்கு இதே நிலைமையில் தொடர்ந்தால் கிட்டத்தட்ட 15 ஆண்டு காலம் ஆகும் என்று சொன்னார்கள். வருகிற நிதியாண்டுகளில் அதிகப்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமன்றி 10 கள்ளர் பள்ளிகளுக்கு ரூ. 5 இலட்சம் செலவிலும், 10 பிற்படுத்தப்பட்ட விடுதிகளுக்கு ரூ. 5 இலட்சம் செலவிலும் குடிநீர் வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ரூ. 34 லட்சம் செலவில் பிற்படுத்தப்பட்ட/மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் விடுதிகள் மற்றும் பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றைப் பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 2.30

200 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் விடுதிகளுக்கு ரூ. 10 இலட்சம் செலவில் புதிய பாத்திரங்கள் வழங்கப்படும். அதைப்போல 20 விடுதிகளுக்கு ரூ. 6 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்பு கொடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது படிப்படியாக வரும் ஆண்டுகளில் அதிகரிக்கப்படும். பல்தொழில் பயிற்சி பட்டயப் படிப்பு பயிலுகின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 1000 மாணவர்களுக்கு ரூ. 11.50 இலட்சம் செலவில் இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்படும்.

ரூ. 21.55 இலட்சம் செலவில் 3 கள்ளர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும். 3 கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ரூ. 5 இலட்சம் செலவில் 10 கள்ளர் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட வசதிகளும், ரூ. 27.20 இலட்சம் செலவில் கூடுதலாக 3 கள்ளர் பள்ளிகளில் 10 வகுப்பறைகளும் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 20 கள்ளர் பள்ளிகளில் பயிலும் மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 8.80 இலட்சம் ரூபாய் செலவில் கழிவறை வசதிகள் செய்து தரப்படும். மற்றும் 20 கள்ளர் பள்ளிகளுக்கு ரூ. 2 இலட்சம் செலவில் மின்வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல 80 மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த விடுதிகளுக்கு ரூ. 5.20 இலட்சம் செலவில் அரவை இயந்திரங்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் வழி நின்று, சமூக நீதிக்காகப் பாடுபட்டுவரும் சமூக நீதியாளர்களைப் போற்றிப் பாராட்டிடும் பொருட்டு, தமிழக அரசு தந்தை பெரியார் பெயரில் ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கி வருகிறது.

1996-97-ஆம் ஆண்டிற்கு திருவாரூர் திரு. கே. தங்கராசு அவர்கட்கு இந்த விருது, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டிற்கு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்குவதற்கான செலவு ரூ. 47,000/- என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1997-98-ஆம் ஆண்டிற்கு விருதைப் பெறுகின்ற சமூக நீதியாளர் தமிழக அரசால் கௌரவிக்கப்படுவார்கள். அவரை

முதலமைச்சர் அவர்கள் தேர்வு செய்து அறிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முன்மொழிந்துள்ள இந்த மானியக் கோரிக்கையின்மீது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் அளித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் தெரிவித்துள்ள கருத்துகளுக்கு ஏற்புடைய வகையில் விளக்கங்களை அளித்துள்ளேன் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக சுட்டிக்காட்டியவைகளைப் பரிசீலித்து உரிய வகையில் பதில் அளித்துள்ளேன் என்றும் நான் கருதுகிறேன்.

இந்த அவையில் உறுப்பினர்கள் தெரிவித்த நல்ல கருத்துக்கள் அவையின் நடவடிக்கைக் குறிப்புகளிலே என்றென்றும் நிலையாக இடம் பெற்றவைகளாக இருக்கும் என்பதால், சம்பந்தப்பட்ட துறைகள் அவற்றின்மீது உரிய கவனம் செலுத்தி நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையினை ஏற்று முழுமையாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு என் பதிலுரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது.

**(ஆ) கோரிக்கை எண் 31 — பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.



**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 64,32,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 21-4-1997, திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

153. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1997-98-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1996-97-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள [1948-ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

145. மானியக் கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு

*(371-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

**மானியக் கோரிக்கை எண்: 31**

**1997-98**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

### அ. முன்னுரை

1. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி, பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடுவதே இவ்வரசின் இடையறாத முயற்சியாகும். இப்பிரிவினரின் கல்வி உயர்வின்மீது சிறப்புக் கவனம் அளிப்பதோடு இவர்களுக்கான பல்வேறு மேம்பாட்டு நலத்திட்டங்களை உருவாக்கி விரைந்து அவைகளை செயல்படுத்துவதற்கு தேவையான ஊக்கத்தையும் உதவிகளையும் அரசு தொடர்ந்து அளித்து வருகின்றது. சமூக, பொருளாதார ரீதியில் அவர்கள் சமுதாயத்துடன் ஒன்றிணைந்து வாழ்வதை உறுதிசெய்யும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

### ஆ. இட ஒதுக்கீட்டுக் கொள்கை

2. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர்கள், பழங்குடியினருக்குக் கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை தமிழ்நாட்டில் 1921-ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வரும் நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். பெரும்பான்மை மக்களின் தேவைக்கு ஏற்ப வாய்ப்பளிக்கும் பொருட்டு இந்த இடஒதுக்கீட்டு அளவு அதிகரிக்கப்பட்டு தற்போது 69 விழுக்காடு என்ற நிலையை எட்டியுள்ளது. கடந்த ஆண்டுகளில் அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும், இட ஒதுக்கீட்டுக் கொள்கை

பின்பற்றப்பட்டதன் மூலம் மிகுந்த நற்பயன் விளைந்தது. இதன் வாயிலாக இப்பிரிவினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலையில் கணிசமான அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். மண்டல் கமிஷன் வழக்கில் இந்திய உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் காரணமாக மிகப்பரந்துப்பட்ட அளவில் ஏற்படவிருந்த விளைவுகள் குறித்து, தமிழகம் முழுவதும் பெரும் கவலைக்கு உள்ளாகியுள்ளது. இம்மாநிலத்தில் வேலைவாய்ப்புகளிலும், கல்வி நிலையங்களிலும், 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு வகைசெய்து 1993 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை, சட்டமொன்றை இயற்றியது. இச்சட்டத்தை இயற்றுவதில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒட்டுமொத்த ஆதரவு நல்கியதால், தமிழ்நாடு சட்டம் 45/1994 அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது இச்சட்டம் ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடு, பழங்குடியினருக்கு 1 விழுக்காடு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 30 விழுக்காடு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சீர்மரபினருக்கும் 20 விழுக்காடு என மொத்தம் 69 விழுக்காடு இடஒதுக்கீடு செய்ய வழிவகை செய்துள்ளது. இந்தத் தமிழ்நாடு சட்டம் 45/1994--ன் செல்திறனை எதிர்த்து பல்வேறு ரிட்மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட சட்டத்தை நிலைநிறுத்தவும், தற்போது மாநிலத்தில் நடைமுறையிலுள்ள 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை பாதுகாத்திடவும், அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க இவ்வரசு உறுதிபூண்டுள்ளது.

## இ. நலத் திட்டங்கள்.

3. தமிழக அரசு, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் மேம்பாட்டிற்கென (அ) கல்வி, (ஆ) பொருளாதார மேம்பாடு மற்றும் (இ) பல்வேறு நலத்திட்டச் செயல்பாடுகளில் அதிக கவனம் செலுத்தி வந்துள்ளது.

### 1. கல்வி

4. சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் எய்திட கல்வி இன்றியமையாத் தேவை என்பதால், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய வகுப்பினருக்கு நற்கல்வி வழங்குவதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. இலவசக் கல்வி அளித்தல், ஆங்கில மொழி வழியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணத்தை ஈடுசெய்தல், புத்தகங்கள், எழுது பலகைகள்



மற்றும் சீருடைகள் இலவசமாக வழங்குதல், படிப்பு உதவித் தொகைகளை வழங்குதல், பள்ளிகள் மற்றும் மாணவ, மாணவியர் இல்லங்களைப் பராமரித்தல் போன்ற பல்வேறு வசதிகளையும், சலுகைகளையும் தொடர்ந்து அரசு வழங்கி வருகிறது. மேலும், அனைத்திந்தியப் பணிகளில் சேருவதற்கான தேர்வுகள் எழுதும் மாணவ, மாணவியருக்குச் சிறப்பு பயிற்சி அளிப்பதற்காக தனிப்பயிற்சி நிலையம் ஒன்றையும் சென்னையில் இத்துறை நடத்தி வருகிறது.

### பள்ளிகள்

5. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை நடத்திவரும் 265 பள்ளிகளில் 1996--97-ஆம் கல்வி ஆண்டில் 55,346 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றன. இப்பள்ளிகளில் பிரமலைக் கள்ளர் இனத்தவர் மிகுதியாக வாழ்கின்ற மதுரை, திண்டுக்கல் மன்னர் திருமலை மற்றும் வைகை வீரன் அழகுமுத்து மாவட்டங்களில் அமைந்துள்ளன.

6. கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, இவ்வரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 1996-97 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் மார்கையன்கோட்டை, முத்தையன் செட்டிப்பட்டி மற்றும் திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில் ஆணைப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள மூன்று நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், மதுரை மாவட்டத்தில் கூடலூர், உத்தமபுரம் மற்றும் திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில் கொண்டம நயக்கன்பட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன. இப்பணிகளுக்காக ரூ. 14.43 இலட்சம் தொடரா இனத்தலைப்பின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. மேலும் மூன்று மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ. 1.20 இலட்சம் மொத்த செலவில் ஆய்வுக்கூட சாதனங்களும், பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1.30 இலட்சம் செலவில் ஆய்வுக்கூட கட்டிடங்களும் கட்டப்பட்டன. அவ்வண்ணமே, நடப்பு நிதி ஆண்டில் மூன்று நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், மூன்று உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், ரூ. 24.55 இலட்சம் செலவில் நிலை உயர்ந்தப்படவுள்ளன.

7. மேலும், 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 14.82 இலட்சம் செலவில் திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில் உள்ள

[1997 ஏப்ரல் 17

சென்னமநாயக்கன்பட்டி உயர்நிலைப் பள்ளியிலும், மதுரை மாவட்டத்தில் வடக்கம்பட்டி தொடக்கப் பள்ளியிலும், ஒவ்வொன்றிலும் மூன்று வகுப்பறைகள் வீதம் மொத்தம் கூடுதலாக ஆறு வகுப்பறைகள் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுக்கூட வசதிகளை மேம்படுத்துவதற்காக, மதுரை, திண்டுக்கல் - மன்னர் திருமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 10 கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 5.00 இலட்சம் செலவில் ஆய்வுக்கூட சாதனங்கள் வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

8. கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் திறம்பட இயங்கும் பொருட்டு, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் பராமரிப்புக்காகவும் மேம்பாட்டுக்காகவும் 1997-98 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்களின் விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில் 'புதிய திட்டங்கள்' என்ற தலைப்பின் கீழ் அளிக்கப்பட்டுள்ளன.

## பாடப் புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள் வழங்குதல்

9. மதுரை, திண்டுக்கல் - மன்னர் திருமலை மற்றும் வைகை வீரன் அழகுமுத்து மாவட்டங்களில் நடத்தப்படும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசமாக பாடப் புத்தகங்களும் எழுது பலகைகளும் வழங்கிட 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 35.83 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## சீருடைகள் வழங்குதல்

10. ஒவ்வொரு ஆண்டும் சீர்மரபினர் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்கும் இரண்டு தொகுதி சீருடைகள் வழங்கப்படுகின்றன. முதல் தொகுதி தீபாவளி திருநாளின்போதும் இரண்டாவது தொகுதி பொங்கல் திருநாளின் போதும் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர் மாணவ இல்லங்களைச் சேர்ந்த 17,280 மாணவ/மாணவியரும், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ இல்லங்களைச் சேர்ந்த 15,418 மாணவ மாணவியரும், சீர்மரபினர் பள்ளிகளைச் சேர்ந்த 44,384 மாணவ, மாணவியரும் இத்திட்டத்தினால் பயன்பெறுகின்றனர். 1997-98ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக தற்காலிக நிதி ஒதுக்கீடாக ரூ. 81.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 17]

## படிப்புதவித் தொகைகள்

11. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 25,000/- என்ற வரம்பிற்குட்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு பல்வேறு படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

## பள்ளிப் படிப்பு உதவித் தொகை

12. பள்ளிப்படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் ஒன்பதாம் வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியருக்கு தெரிந்தெடுக்கப்பட்ட பாடப்புத்தகங்களும் பத்தாம் வகுப்பில் பயிலும் மாணவ/மாணவியருக்கு அனைத்து பாடப்புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கும் அனைத்து புத்தகங்கள் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலமாக இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும் மாணவர்கள் செலுத்தவேண்டிய சிறப்புக் கட்டணங்கள் கல்வி நிறுவனங்களுக்கு ஈடு செய்யப்படுகின்றன. பத்தாம் வகுப்பு மாணவ/மாணவியர் செலுத்தவேண்டிய பொதுத்தேர்வு கட்டணமும் மாணவ/மாணவியர் சார்பாக அரசு தேர்வுகள் துறை இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகிறது. ஆண்டு வருமானம் ரூ.25,000-க்கு உட்பட்டிருக்கும், பட்டதாரி அல்லாத குடும்பத்தைச் சேர்ந்தவருமான பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியருக்கும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு எவ்வித நிபந்தனைகளும் வரையறையும் இன்றி, கல்விக் கட்டணம் ஈடுசெய்யப்படுகிறது. அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ/மாணவியரும் இச்சலுகைபெற தகுதியுள்ளவர்கள். அந்நிறுவனங்களுக்கு செலுத்தவேண்டிய கட்டணம் அரசு கல்வி நிறுவனங்களில் கட்டவேண்டிய கட்டணத்திற்கு இணையாக ஈடுசெய்யப்படுகிறது. 1997-98 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 353.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை

13. இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை மேல்நிலை வகுப்பில் தொடங்கி ஆராய்ச்சிப் பட்டப்படிப்பு வரை வழங்கப்படுகிறது. சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வு கட்டணம் முழுமையாக

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. கல்விக் கட்டணம் மற்றும் புத்தகக் கட்டணம் ஆகியவற்றின் ஒரு பகுதி வழங்கப்படுகிறது. ஆறாம் வகுப்பிலிருந்து மேல்நிலை வகுப்புவரை ஆங்கில பயிற்று மொழியில் பயிலும் பட்டதாரி அல்லாத குடும்பத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மாணவர்களது பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.25,000-க்கு உட்பட்டிருக்குமானால் கல்வித்துறை நிர்ணயித்துள்ள அளவில் கல்விக் கட்டண்ம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.

மேற்சொன்ன நிபந்தனைகள் இன்றி ஆங்கில பயிற்று மொழியில் பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியருக்கும் இச்சலுகை வழங்கப்படுகிறது. கல்வி நிறுவனங்களைச் சார்ந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர், மாணவியருக்கு 'உதவித்தொகை அறிவிக்கையில்' குறிப்பிட்டுள்ளபடி உண்டி மற்றும் உறையுள் கட்டணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ.560.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இலவசக் கல்வி

14. பத்தாம் வகுப்பு முதல் மூன்றாண்டுப் பட்டப்படிப்பு வரை பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர், மாணவியருக்கு அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் மற்றும் சட்டம் ஆகிய தொழில் பட்டப்படிப்பு படிக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்குப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்படுகிறது. (அ) பெற்றோரின்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 25,000-க்கு மேற்படக் கூடாது. (ஆ) அம்மாணவ, மாணவியர் குடும்பத்தில் இதற்கு முன்னர், பட்டதாரியாக எவரும் இருந்திருக்கக் கூடாது (இ) அம்மாணவ, மாணவியர் குடும்பத்தில் தொழில் படிப்பு பயிலும் முதல் மாணவராக அவர் இருத்தல் வேண்டும்.

15. மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குப்பட்டு பட்டப்படிப்பு மற்றும் தொழில் பட்டப்படிப்பு படிக்கும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கும் மேற்கண்ட இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.





16. இந்த இலவச கல்வித் திட்டங்களின்கீழ் பயன்பெறும் மாணவ, மாணவியர்கள் கல்வித் துறையில் அரசு கல்வி நிறுவனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவில் கல்வி கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டாயக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இதனால் கல்வி நிறுவனங்களுக்கு ஏற்படும் நிதி இழப்பு அக்கல்வி நிறுவனங்களுக்கு இத்துறையினால் ஈடு செய்யப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் 1,28,500 மாணவர், மாணவியர் பயனடைவதற்காக 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 745.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உணவு மானியம்

17. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் படிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் உண்டி, உறையுள் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு ரூ.85 என்ற வீதத்தில் ஓராண்டில் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.15,000-க்கு மேற்படாத மாணவர்களே இவ்வுதவித் தொகை பெறத் தகுதியுடையவர்களாவர். இத்திட்டத்தினால், 1996-97-ல் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் மொத்தம் 2,744 பேர் பயனடைந்துள்ளனர். 1997-98 ஆம் ஆண்டிற்கென ரூ.15.49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பரிசுகள் வழங்குதல்

### 1. மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள்

18. இத்திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும், மாநில அளவில், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கான அரசுத் தேர்வுகளில் முதலிடம் பெற்றுள்ள பிற்படுத்தப்பட்ட/மிகப் பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியருக்கு இரண்டு முதற் பரிசுகள் (மாண்வருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் பரிசு பெறும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு ரூ.3,000/- வழங்கப்படுகிறது. இந்த முதல் பரிசை பெறுபவர் மிகப் பிற்படுத்தப்பட்ட அல்லது சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்தவராக இருந்தால் ரூ. 5,000/- வழங்கப்படுகிறது. பத்தாம் வகுப்பில் முதல் பரிசு பெறும்

பிற்படுத்தப்பட்ட மாணவ. மாணவியருக்கு ரூ. 1500-ம் மிகப்பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினராக இருந்தால் ரூ. 3000-ம் வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ. மாணவியருக்கு இரண்டு முதற் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று. மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட மாணவராயிருப்பின் ரூ. 1500-ம், மிகப்பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவராயிருப்பின் ரூ. 3000-ம் வழங்கப்படுகிறது.

பத்தாம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள். இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளுக்கு முறையே ரூ. 500/-, ரூ. 250/- மற்றும் 150/-ம் வழங்கப்படுகின்றது. மிகப்பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவராயிருப்பின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளுக்கு முறையே ரூ. 1000/-, ரூ. 500/- மற்றும் ரூ. 300/-ம் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்திற்காக ரூ.1.67 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2. பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு (12ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்)

19. பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம், இரண்டாம் இடம் பெற்று, தொழிற்படிப்பில் சேருகின்ற மாணவர் இருவர், மாணவியர் இருவருக்கு, ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 3000/- வீதம் நான்கு ஆண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படும்.

### 3. தந்தை பெரியார் நினைவுப் பரிசு (10-ம் வகுப்பு மாணவ, மாணவியர்)

20. பத்தாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் இரண்டு இடங்களைப் பெற்று பல்தொழில் பயிற்சி நிலையத்தில் பட்டயப்படிப்பில் சேர்ந்துள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த/மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த/சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும், ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 3000/- வீதம் மூன்றாண்டுகளுக்கு தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.



அண்ணா, பெரியார் நினைவுப் பரிசுகளுக்காக 1997-98 ஆம் ஆண்டிற்கென ரூ. 11.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### அரசினர் மாணவரில்லங்கள்

21. மாணவர்களுக்கு இலவசமாக உணவு, உறைவிட வசதிகளை அளிப்பதற்காக இத்துறை, தற்போது 472 பிற்படுத்தப்பட்டோர் மாணவரில்லங்களையும், 408 மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவரில்லங்களையும் நடத்தி வருகிறது. 1996-97-ல் மாணவரில்ல வசதிகளை மொத்தமாக 46,540 மாணவ, மாணவியர் பயன்படுத்திக் கொண்டனர். இந்த மாணவரில்லங்களில் மாணவர்களை சேர்ப்பதற்கு அவர்களுடைய பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 15,000-க்கு மிகக் கூடாது. மொத்தமுள்ள 880 மாணவரில்லங்களில், 138 மாணவரில்லங்கள் அரசு கட்டிடங்களிலும் எஞ்சியுள்ள 742 மாணவரில்லங்கள் வாடகைக் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. மாணவரில்லங்களில் மாணவர்களுக்கு அடிப்படை வசிகள் கிடைப்பதை உறுதி செய்யவும், வாடகைச் செலவை மீதப்படுத்தவும் மாணவரில்லங்கள் படிப்படியாக அரசு கட்டிடங்களில் அமைக்கப்படுகின்றன. தற்போது 36 மாணவரில்லங்களுக்கு கட்டிடங்கள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் முன்னேறி வருகிறது.

தேவைக்கேற்ப ஆண்டுதோறும் புதிய மாணவரில்லங்கள் தொடங்கப்படுவதோடு, அனைத்து மாணவரில்லங்களிலும் படிப்படியாக மாவரைக்கும் எந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (கல்லூரி மாணவரில்லங்களுக்கு மட்டும்) நூலக வசதிகள் ஆகியவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மாணவரில்லங்களுக்கு மாணவர்களின் பொது அறிவை வளர்ப்பதற்காக, ஆங்கில நாளிதழ் ஒன்றும் தமிழ் நாளிதழ் இரண்டும் வழங்கப்படுகின்றன. இந்த மாணவரில்லங்களின் பணியை மேம்படுத்துவதற்காக, ஒவ்வொரு இல்லத்திலும் நிருவாகக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1997-98-ல் தொடங்கப்பட வேண்டிய புதிய மாணவரில்லங்கள், கட்டப்பட வேண்டிய புதிய கட்டிடங்கள், அளிக்கப்படவுள்ள வசதிகள் குறித்த விவரங்கள், இக்கொள்கை விளக்கக் குறிப்பின் முடிவில் "புதிய திட்டங்கள்" என்ற தலைப்பின்கீழ் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

[1997 ஏப்ரல் 17

## உணவுக் கட்டணங்கள்

22. அரசினர் மாணவரில்லங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு பின்வரும் வீதங்களில் உணவுக் கட்டணங்கள் வழங்கப்படுகின்றன:

| தொடர் எண் | மாணவரில்லம் | மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு கட்டண வீதம் — சென்னை மாநகரில் ரூ. | மாவட்டங்களில் ரூ. |
|---|---|---|---|
| 1. | கல்லூரி | ரூ. 198 | ரூ. 193 |
| 2. | தொழிற்பயிற்சி நிலையம் | ரூ. 198 | ரூ. 193 |
| 3. | உயர்நிலைப்பள்ளி | ரூ. 180 | ரூ. 180 |

1997-98-ல் இந்த மாணவரில்லங்களை நடத்துவதற்காக ரூ. 2488.98 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

23. மலைவாழ் இடங்களில் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மாணவரில்லங்களிலும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மாணவரில்லங்களிலும் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் நவம்பர் முதல் பிப்ரவரி வரையிலான குளிர்காலத்தில் வெந்நீர் வசதி அளிக்கப்படுகிறது.

## பொருளாதார மேம்பாடு

24. ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு குறைவாக உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மற்றும் சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலவசமாக கருவிகள் வழங்குதல், முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் அமைத்துத் தருதல், வீட்டுமனைகள் வழங்குதல் முதலிய திட்டங்கள் தொடர்ந்து இத்துறையின் செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

## இலவசமாக சாதனங்கள் வழங்குதல்

25. முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், போயர் ஆகியோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமலிருந்தால் அவர்களுக்கு



1997 ஏப்ரல் 17]

முடிதிருத்தும் கருவிகள் அடங்கிய கைப்பெட்டிகள், பித்தளை துணி தேய்ப்புப் பெட்டிகள், மற்றும் கல்லுடைக்கும் கருவிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் வழங்கப்படும் கருவிகள் எண்ணிக்கை வருமாறு:

| தொடர் எண் | கருவிகளின் பெயர் | ஆண்டுதோறும் வழங்கப்படும் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணித் தேய்ப்புப் பெட்டிகள் | 4,000 |
| 2. | முடிதிருத்துவோர் கைப்பெட்டிகள் | 500 |
| 3. | கல்லுடைக்கும் கருவிகள் | 500 |

இத்திட்டங்களுக்காக 1997-98-ல் ரூ. 52.77 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஏற்படுத்துதல்

26. முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு அரசு பின்வருமாறு நிதியுதவி அளித்து வருகிறது:

| தொடர் எண் | திட்டத்தின் பெயர் | பயனடைவோர் எண்ணிக்கை (ஒவ்வொரு ஆண்டும்) | அரசு உதவித் தொகை செலவு ரூ. | வங்கிக் கடன் உதவி ரூ. | ஒவ்வொரு பயனீட்டாளருக்கான மொத்த ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | முடிதிருத்தகம் | 200 | 1500 | 3500 | 5000 |
| 2. | சலவை நிலையம் | 150 | 1500 | 3500 | 5000 |
| 3. | நடமாடும் சலவை நிலையம் | 50 | 600 | 1400 | 2000 |

1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 400 பயனாளிகளுக்கு நிதி உதவி அளிப்பதற்காக ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பிற திட்டங்கள்

### இலவச வீட்டுமனை வழங்க கூடுதல் நிதி ஒதுக்கீடு (நிலம் கையகப்படுத்துதல்)

*27.* மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு இலவச வீட்டுமனை அளிப்பது அரசின் ஒரு முக்கியமான திட்டமாகும். 1995-96 ஆம் ஆண்டில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கென ரூ. 141.89 இலட்சம் செலவிடப்பட்டது. ஆண்டு வருமானம் ரூ. 12000/-க்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் 3 செண்ட் பரப்பளவு உள்ள நிலம் வழங்கப்படுகிறது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க 1996-97 ஆம் நிதியாண்டில், ரூ. 197.40 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்க்கு இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையை ரூ. 2 கோடியில் இருந்து ரூ. 10 கோடியாக உயர்த்தி உள்ளார்கள். 1997-98 ஆம் ஆண்டு இத்திட்டம் கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பிற்படுத்தப்பட்டோருக்கும் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ. 5 கோடியும், முன்னேறிய வகுப்பினருக்கு ரூ. 3 கோடியும் 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அனைத்திந்திய பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்

*28.* அனைத்திந்திய சிவில் பணிகள் குறித்த தேர்வுகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு சென்னையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று 1971 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. ஆண்டுதோறும் ஐம்பது பேருக்கு இந்நிறுவனத்தின் மூலம் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இலவச இடவசதி, தனிப் பயிற்சி, நூல் நிலைய வசதி மற்றும் மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ. 500 வீதம் உணவுக்கு கட்டணமும் அளிக்கப்படுகின்றது. வருமான வரம்பு நிபந்தனை இன்றி அனைத்து பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு இவ்வசதி அளிக்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோலவே மண்டல பயிற்சி மையம் ஒன்றும் மதுரை காமராசர் பல்கலை கழக வளாகத்தில், 75 மாணவ / மாணவியருக்கு பயிற்சி அளிக்கும் வகையில் இயங்கி வருகிறது.





### தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல்

*29.* தொழில் கல்வி நுழைவுத் தேர்வை எழுதுகின்ற இப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 72 மையங்கள் மூலம் ஒவ்வோராண்டும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாவட்டங்களிலுள்ள அரசு மற்றும் அரசு மானியம் பெறும் மேனிலைப் பள்ளிகளில் 15 நாட்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேருவதற்கு வருமான வரம்பு ஏதுமில்லை. 1997-98 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ. 0.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சட்டப்பட்டதாரிகளுக்கு பயிற்சி அளித்தல்

*30.* பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 20 சட்டப்பட்டதாரிகளுக்கு ஒவ்வோராண்டும் மூத்த வழக்குரைஞர்களின் கீழ் மூன்றாண்டுகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்றுக்கு அரசு அனுமதியளித்துள்ளது. இப்பயிற்சிக்கால அளவில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ. 750 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சேர ஆண்டு வருமான வரம்பு ரூ. 12,000 ஆகும். பயிற்சி அளிக்கும் மூத்த வழக்குரைஞருக்கு மூன்றாண்டுக்கால அளவிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5001 மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 8.63 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### வாழ்க்கைத் தொழில் பயிற்சி மையங்கள்

*31.* இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முதுகுளத்தூரில் ஒன்றும், மதுரை மாவட்டத்திலுள்ள செக்காணூரணியில் ஒன்றும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள வீரகேரளம்புதூரில் ஒன்றும் ஆக மூன்று தொழில் பயிற்சி நிறுவனங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் துறையின் நிதியுதவியுடன் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் மூலம் நிர்வகிக்கப்பட்டு

[1997 ஏப்ரல் 17

வருகின்றன. ஒவ்வோராண்டும் இந்தப் பணிமனைகளில் 208 மனுதாரர்களுக்கு வெவ்வேறு தொழில்களில் கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு பயிற்சி அளிக்கப்படுகிறது:

| தொடர் எண். | தொழில் பெயர். | பயனடைவோரின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | பொருத்துபவர் | 96 பேர் |
| 2. | பற்றவைப்பவர் | 48 பேர் |
| 3. | உலோகத் தகட்டுப் பணியாளர் | 64 பேர் |
| | மொத்தம் | **208 பேர்** |

1997--98 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 35.88 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

32. 220 பெண்கள் பயனடையும் வகையில் திருநெல்வேலி கட்டபொம்மன், மதுரை, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தென்னாற்காடு வள்ளலார் ஆகிய மாவட்டங்களில் ஏழு தையற் பயிற்சி மையங்களையும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குழித்துறையில் நாரிழைத் தயாரிப்புப் பயிற்சி மையம் ஒன்றையும் அரசு நடத்தி வருகிறது. 1997-98 ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்தின் கீழ் ரூ. 9.76 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம்

33. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ மாணவிகள், வேலைவாய்ப்பு பெறுவதில் மற்றவர்களுடன் போட்டியிட தகுதிபெற, இந்த வேலைவாய்ப்பு பயிற்சி திட்டம் அளிக்கப்படுகிறது. மாணவ/மாணவியர்கள் தகுதியினை உயர்த்துவதற்கும் வேலைவாய்ப்பினை பெற உதவுவதற்கும், இந்தப் பயிற்சி பயனளிக்கிறது. பெரும்பாலும் வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம் அரசு நிறுவனங்களாலும், அத்தகைய வசதி இல்லாத இடங்களில், தகுதியுள்ள தனியார் நிறுவனங்களாலும் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி கட்டணம் அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கணினி பாடத் திட்டங்கள், கனரக வாகன ஓட்டுதல், தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் தொலைபேசி



1997 ஏப்ரல் 17]

இயக்கம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. கணினி பாடத் திட்டம், கனரக வாகன ஓட்டுதல், தொலைபேசி இயக்கம் ஆகிய பயிற்சிகளில் பங்கு பெறுவோருக்கு உணவு கட்டணம் அளிக்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 48.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிறுபான்மையினர் நலம்

34. சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு மாநிலத்தில், மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் இயங்கி வருகிறது. சிறுபான்மையினரின் பல்வேறு இடர்பாடுகளை அறியும் பொருட்டும் அதனைக் களைவதற்காக பரிந்துரைகளை செய்யும்பொருட்டும் இந்த ஆணையம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைப் பார்வையிடுகிறது. தமிழகத்தில் கிறித்துவர், முகமதியர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் சமணச் சமயத்தைச் சார்ந்தவர்கள் சிறுபான்மை வகுப்பினராக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் இம்மாநிலத்தில் சமயச் சிறுபான்மையினர் குறித்து சமூக பொருளாதார ஆய்வு ஒன்று சென்னை மதிப்பீடு செயல்முறை ஆராய்ச்சித் துறையினரால் நடத்தப்பட்டுள்ளது. சமூக பொருளாதார ஆய்வு அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

35. தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகம் ஆகியவற்றின் வழிமுகமையாக பணியாற்றும் பொருட்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பெயர் 'தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்-சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்' என்று மாற்றப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம்

36. மண்டல் கமிஷன் வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்திரவையொட்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைப் பரிசீலித்து, பரிந்துரைப்பதற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் என்னும் நிரந்தர ஆணையத்தை அரசு 15-3-1993 அன்று அமைத்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைக் குறிப்பிட்டக் காலத்திற்கொரு முறை திருத்தும் பணியும்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு வகுப்பினரிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் குறித்தும், அவை மீதான மறுப்புகள் குறித்தும் ஆணையம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது. 31-12-1996-ன் நிலவரப்படி 113 வகுப்புகளிடமிருந்து 966 முறையீடுகள் ஆணையத்திற்கு வரப்பெற்றுள்ளன. 85 வகுப்புகள் தொடர்பாக வரப்பெற்ற 91 முறையீடுகளைப் பொறுத்தமட்டில் விசாரணைகள் முடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாணையத்தின் முந்தைய தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 14-3-97 அன்று நிறைவு பெற்றதால், இந்த ஆணையம் ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு. கே. எம். நடராசன் அவர்கள் தலைமையில் எட்டு உறுப்பினர்களுடன் திருத்தியமைக்கப்பட்டு உள்ளது.

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

37. இந்நிறுவனம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசால் 16-11-1981 ஆம் நாளன்று நிறுவப்பட்டு 22-5-1982-லிருந்து செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

(i) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அச்சங்கங்களுக்குத் தொடக்க நிதியுதவி வழங்குதல்.

(ii) தமிழ்நாடு அரசு, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், புதுடெல்லி, தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகம் ஆகியவற்றிலிருந்து நிதி உதவி பெற்று மேற்சொன்ன வகுப்பினருக்குப் பொருளாதார மேம்பாட்டிற்கு அவசியம் என்று கருதக்கூடிய வழிகளில் எல்லாம், பொதுவான நடவடிக்கைகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்கொள்ளுதல்.

38. இந்நிறுவனம் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திட்டச் செலவில் ரூ. 3.00 இலட்சம் உயரளவாகக் கொண்டு 20 விழுக்காடு



அளவுக்குத் தொடக்க நிதியுதவி வழங்கி வருகிறது. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் திட்டச் செலவில் எஞ்சியுள்ள தொகையை வங்கிகளிடமிருந்தும் ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போது புதுடெல்லி தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், தனிநபர் முதலீட்டுத் தொகை போக, எஞ்சியுள்ள திட்ட தொகை 70 விழுக்காட்டை காலக் கடனாக வழங்க முன்வந்துள்ளது. (தனி நபர்களின் பங்குத் தொகை 10 விழுக்காடு தவிர).

39. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகம் ஆகியவற்றின் வழி முகமையாக 1993-94 ஆம் ஆண்டிலிருந்து நிதி உதவியைக் காலக் கடனாக வழங்கி வருகிறது.

40. இதுவரை இக்கழகம் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் கடன் மற்றும் தனி நபர் கடனாக 29,905 நபர்களுக்கு ரூ. 1067.04 இலட்சம் வழங்கியுள்ளது.

## சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

41. சமூக நீதிக்காகப் போராடியவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு, அரசு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை வழங்கி வருகின்றது. 25-12-96 ஆம் நாளன்று நடைபெற்ற அரசு விழா ஒன்றில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 1996-97 ஆம் ஆண்டுக்காக, திரு. திருவாரூர் கே. தங்கராசு அவர்களுக்கு வெள்ளிக் கேடயம், 3 சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம், 20,000 ரூபாய் ரொக்கம் அடங்கிய இந்த விருதினை வழங்கினார்கள். 1997-98 ஆம் ஆண்டில இத்திட்டத்திற்காக, ரூ. 47,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1997-98-ஆம் ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்

42. 1. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி மாணவ, மாணவியருக்காக 169.47 இலட்சம் ரூபாய் செலவில் 62 பள்ளி மாணவர் இல்லங்களைத் தொடங்குதல்.

2. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி மாணவ, மாணவியருக்காக 280.21 இலட்சம் ரூபாய்

செலவில் 13 பள்ளி மாணவர் இல்லங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கட்டுதல்.

3. கள்ளர் பள்ளிகள் 10-க்கு ரூ. 5.00 இலட்சம் செலவில் குடிநீர் வசதிகளுக்கு வகை செய்தல்.

4. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவரில்லங்கள் 10-க்கு ரூ. 5.00 இலட்சம் செலவில் குடிநீர் வசதிகளுக்கு வகை செய்தல்.

5. ரூ. 34.00 இலட்சம் செலவில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவரில்லங்கள், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றைப் பராமரித்தல்.

6. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவரில்லங்கள் 200-க்கு ரூ. 10.00 இலட்சம் செலவில் பாத்திரங்கள் வழங்குதல்.

7. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவரில்லங்கள் 20-க்கு ரூ. 6.00 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புக்கு வகை செய்தல்.

8. பல்தொழில் பயிற்சிப் பட்டயப் படிப்பு பயிலுகின்ற, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 1000 மாணவர்களுக்கு ரூ. 11.50 இலட்சம் செலவில் இலவசக் கல்விச் சலுகை வழங்குதல்.

9. ரூ. 24.55 இலட்சம் செலவில் 3 கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்துதல்.

10. கள்ளர் பள்ளிகள் 10-க்கு ரூ. 5.00 இலட்சம் செலவில் ஆய்வுக்கூட சாதனங்களை வழங்குதல்.

11. கள்ளர் பள்ளிகள் 3-ல் ரூ. 27.20 இலட்சம் செலவில், கூடுதலாக 10 வகுப்பறைகளைக் கட்டுதல்.

12. கள்ளர் பள்ளிகள் 20-ல் பயிலும் மாணவியருக்காக, ரூ. 8.80 இலட்சம் செலவில் கழிவறைகளைக் கட்டுதல்.

13. கள்ளர் பள்ளிக் கட்டிடங்கள் 20-ல் ரூ. 2.00 இலட்சம் செலவில் மின்வசதி செய்து கொடுத்தல்.



14. மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவரில்லங்கள் 80-க்கு ரூ. 5.20 இலட்சம் செலவில் அரவை எந்திரங்களை வழங்குதல்.

## முடிவுரை

43. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் முன்னேற்றத்தையும் உயர்வையும் இலட்சிய நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது. இந்த முயற்சியை முனைப்புடனும், முழு வேகத்துடனும் தொடர்ந்து செயல்படுத்த தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த இலக்கினை, இவ்வின மக்களுக்கான நலவாழ்வு திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வதோடு மட்டுமின்றி, அந்த வகுப்பினருக்காக சிறப்பான நலத் திட்டங்களை காலத்தோடு தீட்டி, வேகத்தோடு அவற்றை செயலாக்கி, வலுவான சாதனைகளை ஈட்டுவதன்மூலம் முழுமையாக அடைய இயலும். மேலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் உரிமைகளை பாதுகாப்பதிலும் நலனைக் கட்டிக் காப்பதிலும் இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் ஒருங்கிணைத்து எப்போதும் விழிப்புடன் செயலாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# இணைப்பு

## 1997-98 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| நிருவாகம். | | | மொத்த ஒதுக்கீடு. | | |
|---|---|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | | 32713 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 236298 | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | | 1018 | மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினர் | 355106 | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | | 1541 | சத்துணவு | 6557 | |
| மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | | 5378 | | | |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | | | | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 1910 | | | | |
| மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினர் | 2691 | | | | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 9 | | | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 11 | 4621 | | | |
| மொத்தம் - | - | 45271 | . | 597961 | 643232 |



| தொடர் எண் | திட்டப்பணிகள் | திட்டப்பணிகள் | | | திட்டத்தில் சேரா பணிகள் | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பி.வ. | மி.பி.வ. | சீ.ம. | பி.வ. | மி.பி.வ. | சீ.ம. | பி.வ. | மி.பி.வ./ சீ.ம. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. | படிப்புதவித் தொகை | 6735 | 6015 | 1100 | 50878 | 20380 | 6302 | 57613 | 33797 |
| 2. | இலவசக் கல்வி | 25575 | 43375 | .. | 3641 | 2000 | .. | 29216 | 45375 |
| 3. | பள்ளிகள் | .. | .. | 3309 | .. | .. | 118883 | .. | 122192 |
| 4. | புத்தகங்களும் எழுது பலகைகளும் | .. | .. | .. | .. | .. | 3583 | .. | 3583 |
| 5. | உடைகள் | 1128 | 805 | 4233 | 600 | 451 | 923 | 1728 | 6412 |
| 6. | உணவு மானியம் | 150 | 200 | .. | 802 | 390 | 7 | 952 | 597 |
| 7. | மாணவர் இல்லங்கள் | 47582 | 25374 | 1796 | 89922 | 46846 | 37378 | 137504 | 111394 |
| 8. | பல்கலைக்கழகத்திற்கு மானியம் | .. | .. | .. | 27 | 13 | .. | 27 | 13 |
| 9. | சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | .. | 15 | .. | .. | .. | .. | 15 |
| 10. | பல்நோக்கு பொறியியல் பட்டறைகள் | .. | .. | 10 | .. | .. | 3578 | .. | 3588 |
| 11. | குடிசைத் தொழில்கள் | .. | .. | .. | 786 | .. | 190 | 786 | 190 |
| 12. | இலவசக் கருவிகள் | .. | 500 | .. | .. | 5277 | .. | .. | 5777 |
| 13. | சலவைத் துறை | .. | 230 | .. | .. | .. | .. | .. | 230 |
| 14. | சிறப்பு தனிப்பயிற்சி நிலையம் | 540 | .. | .. | 2300 | .. | .. | 2840 | .. |

| தொடர் எண். | திட்டப்பணிகள். | திட்டப்பணிகள். | | | திட்டத்தில் சேரா பணிகள். | | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பிவ. | மிபிவ. | சீம. | பிவ. | மிபிவ. | சீம. | பிவ. | மிபிவ/ சீம. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 15. | வீட்டுமனை கையகப்படுத்துதல் | - | 20000 | - | - | 350 | - | - | 20350 |
| 16. | சீர்மரபினர்களுக்கு வீடுகள் | - | - | 1 | - | - | - | - | 1 |
| 17. | மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி | - | 140 | - | 29 | - | - | 29 | 140 |
| 18. | பட்டயக் கணக்கர் படிப்பு | - | - | - | 3 | 2 | - | 3 | 2 |
| 19. | பரிசுகள் வழங்குதல் | 1317 | - | - | - | - | - | 1317 | - |
| 20. | வேலைவாய்ப்புத் திட்ட மாணவர் இல்லம் | 1089 | - | - | - | - | - | 1089 | - |
| 21. | பணிசார்ந்த பயிற்சி (சுருக்கெழுத்து, கனரக ஓட்டுநர் பயிற்சி, கணிப் பொறிப் பயிற்சி) | - | - | - | 2284 | 1450 | - | 2284 | 1450 |
| 22. | சட்டப் பட்டதாரிகளுக்கு பயிற்சி | 863 | - | - | - | - | - | 863 | - |
| 23. | பள்ளி, மாணவர் இல்லங்கள் கட்டுதல் (பழுதுபார்த்தல்) | - | 10 | - | - | - | - | - | 10 |
| 24. | சமூக நீதிக்காக தந்தை பெரியார் விருது | - | - | - | 47 | - | - | 47 | - |
| | மொத்தம் - | 84979 | 96639 | 10464 | 151319 | 77159 | 170844 | 236298 | 355106 |



| மொத்தம் 1996- 97 | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | 224126 | 226396 | 540377 |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 951 | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 1319 | | |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை | 308544 | 313981 | |
| சத்துணவு | 5437 | | |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | - | - | 4901 |
| மொத்தம் | - | - | 545278 |

| மொத்தம் 1997- 98 | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | 269011 | 271570 | 638611 |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 1018 | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 1541 | | |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை | 360484 | 367041 | |
| சத்துணவு | 6557 | | |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | 4621 | - | 4621 |
| மொத்தம் - | - | - | 643232 |

216832
600 008
D
V2,1,31 N97
N97.31.2

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.